# மணிமேகலை பற்றி

NCBH

கே.டி.கே. தங்கமணி

# மணிமேகலை பற்றி

கே. டி. கே. தங்கமணி

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
சென்னை-600 098

முதற்பதிப்பு : ஆகஸ்ட், 1988

© கே. டி. கே. தங்கமணி

Code No. A 383

விலை : ரூ. 14

அச்சிட்டோர் :
ஜீவோதயம் அச்சகம்
சென்னை-5

# பதிப்புரை

ஐம்பெருங் காப்பியங்களில் மணிமேகலை ஒன்று. இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரமும் மதுரைக் கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றிய மணிமேகலை யும் இரட்டைக் காப்பியங்கள் என புகழ் பெற்று விளங்கு வனவாகும்.

இக்காப்பியங்கள் காலத்தின் கண்ணாடியாகத் திகழ் வதால் இவைகளுக்கு தமிழ் இலக்கியத்தில் தனிச்சிறப்பு உண்டு. குறிப்பாக 'மணிமேகலை' மக்களின் பசி தீர்க்கும் இலட்சியப் பாத்திரப் படைப்புகளைக் கொண்டதால் இக்காலத்திலும் இதற்கு மிகுந்த செல்வாக்கு இருந்து வருகிறது.

கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே மணிமேகலை காப்பியத்தின்பால் தோழர் கே. டி. கே. தங்கமணி அவர் களுக்கு அதிக ஈடுபாடு இருந்தது.

தொழிற் சங்க இயக்கத்திலும் கம்யூனிஸ்ட் பேரியக்கத் திலும் தன்னை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்ட கே. டி. கே. அவர்கள், அடிக்கடி சிறை வாழ்வு பெற்றார். அப்போது, தம் இளமைக் காலத்தில் படித்த இம் மணிமேகலையைப் பற்றிய சிந்தனைகள் அவரைத் தூண்டி வந்தன. ஓர் ஆய்வு நூலுக்கான தயாரிப்பில் இதனை எழுத முயற்சித்த போதிலும், இது ஓர் எண்ணச் சிதறல்களாக இக்கட்டுரைத் தொகுப்பு அமைந்துள்ளது. எனினும், இந்நூல் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பற்றிய அறிவை மேலும் வளப்படுத்தும் என்பதால் இதனை வெளியிடுவதில் பெருமிதங் கொள்ளுகிறோம்.

**பதிப்பகத்தார்**

## முன்னுரை

"மணிமேகலை" கட்டுரைகளைத் தொகுத்துச் செப்பனிட்டு ஆர். பார்த்தசாரதி (ஆர். பி. எஸ்) சிறப்புரை தந்துள்ளார். கட்டுரைகள் எழுத வேண்டிய காரணங்கள் எவை என நண்பர்கள் அறிய விரும்புவர்.

மதுரைக் கல்லூரியில் 1930 முதல் 1932 வரை இண்டர் மீடியட் படித்தேன். அவ்வமயம் தமிழ்ப்பாடத்தில் "மணிமேகலை"யிலிருந்து சில பகுதிகள் இருந்தன. அவற்றுள் சில :

—"வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
.... .... ....
.... .... ....
மக்கள் யாக்கை"

—"கோல்நிலை திரிந்திடின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின் மாரி வறங்கூரும்
மாரி வறங் கூரின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும் தகுதியின்றாகும் "

—"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெரும் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணையாவது"

—"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இது கேள்; மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல்"

இவை சுதமதி உதயகுமரனுக்குச் சொல்வதும், மணிமேகலா தெய்வம் உதயகுமரனுக்குச் சொல்வதும், விசாகை தருமதத்தனுக்கு, மணிமேகலை புண்ணிய ராசனுக்கு (ஆபுத்திரன்) எடுத்துக் கூறுவதும் ஆகும். எங்கள் தமிழ் ஆசிரியர் ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் மணிமேகலை வரலாற்றை நல்ல முறையில் சொல்வார். பாத்திரங்களான மணிமேகலை, ஆபுத்திரன், விசாகை, ஆதிரை முதலியோரின் பெருமையை எடுத்துரைப்பார் சாத்தனாரின் சாதனைகள், பவுத்தத்தின் சிறப்பு எல்லாம் எங்களுக்கு அள்ளித் தந்தார்.

1942-ம் வருடத்திலிருந்து அரசியலில் தொடர்ந்து ஈடுபாடுள்ளவன். 1962 ம் வருடம் இந்தியா-சீனா மோதலை யொட்டி நாடு பூராவிலுமுள்ள கம்யூனிஸ்டுகள் கைது செய்யப்பட்டனர். என்னைக் கைது செய்து சேலம் சிறையில் அடைத்தனர். அங்கு என்னுடன் இருந்தவர்களில் முக்கிய மானவர்கள் தோழர்கள் எம். ஆர். வெங்கட்ராமன், வி. பி. சிந்தன், என் சங்கரய்யா, கே. அனந்த நம்பியார் ஆவர். சீனா செய்தது சரியா? தவறா என்ற விவாதம் அடிக்கடி வரும். சில சமயங்களில் சூடாகும். எம். ஆர்.வி. தலையிட்டு "இனி இங்கே அரசியல் வாதம் வேண்டாம்" என்றார். நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

நான் மணிமேகலையை ஒட்டிப் பல கட்டுரைகள் எழுதுவதென முடிவு செய்தேன். கட்டுரைகள் சில கிடைக்க வில்லை. மணிமேகலையில் மனித நேயம், 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' எனக் குறையாது கொடுத்த அமுத சுரபி, சிறைச்சாலை அறச் சாலையானது, சமயங்களைப் பற்றிய விபரங்கள், பவுத்தக் கோட்பாடு போன்றவை என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தன. படித்தால் எனக்கு மன அமைதி ஏற்படும் வோர்ட்ஸ் வொர்த் என்னும் ஆங்கிலக் கவிஞன் "டாபடில்" என்ற மலர்ச் செடிகளைப் பற்றி எழுதும் போது "எனக்கு மனச் சோர்வு உள்ளபோது என் உள்ளம் அந்தப் பூக்களோடு கூத்தாடும்" என்றார். என்

நிலையும் கிட்டத்தட்ட அதுவே இன்றும் மணிமேகலையை விரும்பிப் படிக்கிறேன். என் கட்டுரைகள் ''தாமரை''யில் வெளி வந்தன. சாத்தனாரையும் அவர் படைப்பையும் நேசித்தவனுடைய எண்ணச் சிதறல் என கட்டுரைகளைக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

**கே. டி. கே. தங்கமணி**
26-5-87

அனைத்திந்திய தொழிற் சங்க காங்கிரஸ் அலுவலகம்,
25, கோவூர் வைத்தியநாத முதலி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை—2.

## சிறப்புரை

1

ஐம்பெருங்காப்பியங்களுள் மணிமேகலை ஒன்று. பிற, சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி என்பன. மணிமேகலையை யாத்த புலவர் பெருமான் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் ஆவார். சிலப்பதிகாரமும் சீவக சிந்தாமணியும் சமண சமயக் காவியங்கள். மணிமேகலையும் வளையாபதியும் குண்டலகேசியும் பௌத்தத்தின் பெருமை இசைப்பன.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தொடங்கிய சங்க காலம் கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் முடிந்தது என்பது தமிழறிஞர் பலர் முடிவு. சங்ககாலத்தைத் தொடர்ந்து பொருளாதார-சமூக-சிந்தனை மாற்றங்களை ஒட்டி எழுந்த இலக்கியங்கள் பல. அவை சங்கம் மருவிய இலக்கியங்கள் எனப்படும். அவற்றுள் தலையாயவை ஐம்பெருங் காப்பியங்கள்.

இந்திய மண்ணில் வளர்ந்தோங்கிய பெருஞ் சமயங்களான பௌத்தம் சமணம் சைவம் வைணவம் இஸ்லாம் கிறித்துவம் ஆகியவற்றுக்குப் பேரிலக்கியம் படைத்துத் தந்த சொல் திறனும் பொருள் வளமும் ஆற்றலும் உடையது தமிழ்மொழி. பிற இந்திய இலக்கியங்களில் காணற்கரிய தனிப் பெருஞ்சிறப்பு இது. இது வெறும் புகழ்ச்சி இல்லை. இறுமாப்பால் தமிழ் மொழிக்கு இல்லாத சிறப்பை ஏற்றிப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற நோக்கில் சொல்லப் படுவது அன்று இது.

அறிஞர் வி. கனகசபை இயற்றிய "ஆயிரத்து எட்டு நூற்று ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர்கள்", என்ற

ஆங்கில நூல் 1904ஆம் ஆண்டு முதல்முதலில் வெளிவந்தது. தமிழர், தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் குறித்து அந்த நூல் தொடங்கி வைத்த விவாதம் இன்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. விவாதத்தைச் செழிப்பித்த அறிஞர் பெருமக்கள் பலர். புலவர் தம் குலம் கோத்திரம் சாதி சமயம் பற்றி ஆய்ந்தவர் சிலர். தமிழில் என்ன இருக்கிறது, இருப்பன வெல்லாம் சமஸ்கிருதத்திலிருந்தன்றோ என்றுசாய்ந்தனர் ஒருசிலர்; இதனால் தேவையற்ற வடமொழி எதிர்ப்புணர்ச்சி வளர்ந்தது. தமிழ்ப்பற்று வெறியாகிவிட்டதோ என்று அஞ்சத்தக்கவாறு எல்லாம் தமிழிலிருந்தே என்று சாடினர் ஒரு சிலர். காய்தல் உவத்தல் என்னும் தடுமாறு நிலைகள் தமிழகத்தில் உருவாயின.

இப்பின்புலத்தில் நீலகண்ட சாஸ்திரியார் தமிழக வரலாற்றையும் வையாபுரிப் பிள்ளை தமிழிலக்கிய வரலாற்றையும் துணிந்து ஆராய்ந்து நூல்கள் இயற்றினர். சங்க இலக்கிய காலம் காவிய காலம் என வகைப்படுத்தி ஆராய்ந்த வையாபுரிப் பிள்ளை எட்டுத்தொகையும் பத்துப் பாட்டும் தோன்றிய கால வரிசையை முறைப்படுத்தி, அவற்றுள் சிலவும் பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் பலவும் சங்கம் மருவிய காலத்தில் உண்டானவை என்றார். ஆனால், கால வரிசைப்படுத்துங்கால் தொல்காப்பியம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பின்னரும் திருக்குறள் ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னரும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் எட்டாம் நூற்றாண்டுக்குப் பின்னரும் வரையப்பட்டவை என்று எழுதினார். அவர் வகுத்துத் தந்த காலவைப்பு நிரல் முறையை (Time Sequence) அறிஞர் ஏற்றனரென்றாலும், அவர் காட்டிய வழியைப் பிறழாமல் ஏற்ற ஆராய்ச்சியாளர் உள்ளிட்ட பலர், இந்நூல்கள் எழுந்ததாக அவர் வரையறுத்துக் காட்டிய காலத்தை (Period) ஒப்புக் கொள்ளவில்லை.

நூல்களின் கால முடிவு-நிர்ணயம் பற்றிக் கருத்து வேறுபாடுகள் தொடர்ந்துள்ள வேனும், பிற நாட்டு

ஆராய்ச்சியாளர்களும் வடபுலம் சார்ந்த வரலாற்றாசிரியன் மாரும் நீலகண்ட சாஸ்திரியாரும் வையாபுரிப் பிள்ளையும் முடிவு செய்து நிர்ணயித்த கால வரிசையிலிருந்து ஒரு சிறிதளவும் மாற ஒப்புகின்றாரில்லை. நியாயமான மாற்றுக் கருத்துக்கும் ஏற்புநிலை பெற நெடுங்காலம் போராட வேண்டிய நிலை உண்டு. ஸ்ரீலங்கா தமிழறிஞர் வேலுப்பிள்ளை "தமிழ் நூலறிவுக்குக் கல் வெட்டுச் சான்றுகள்", என்னும் ஆங்கில நூலில் இவ்வாறு குறிப்பிடு கிறார். "யாம் வையாபுரிப் பிள்ளையைப் பாராட்டுபவர், அவர் தந்த கால நிர்ணயத்துக்காக அன்று; சிந்தனையைக் கிளரும் கருத்துகளை எடுத்தியம்பித் தமிழறிஞர்களை அறிவியல்- ஆக்க நெறிகளில் சிந்திக்க வைத்ததனால்" (பக். 9). இது சிந்திக்கத்தக்கது. நூல்களின் கால நிர்ணயம் என்பது அவற்றின் கால வரிசையை முடிவு செய்வது என்பது மட்டுமன்று. அதனில், மொழிபேசும் மக்களின் தொல் பழைமையும் பண்பாட்டுச் சிறப்பும் மொழிப் பெருமையும் பொதிந்துள்ளன என்பதனால் அறிஞர் பலர் வையாபுரிப் பிள்ளையின் கால நிர்ணயம் பற்றிய முடிபுகளை மறுக்க முன் வந்தனர், எனலாம். ஆராய்ச்சி தொடர்கிறது. அது முடிவற்றது.

## 2

மணிமேகலை எழுந்தகாலம் எது? அதன் சிறப்பென்ன?

கி. பி. முதல் நூற்றாண்டில் கனிஷ்கர் காலத்தில் வாழ்ந்த அசுவ கோஷர் முதன் முதலில் வடமொழியில் "புத்த சரிதம்" என்னும் காவியத்தைப் படைத்தார். இருபத்தெட்டு அத்தியாயங்களில் புத்தர் பிறப்பு, இளமை, துறவு, மாரனை வெல்லுதல், போதனைகள் அனைத்தையும் கூறினாலும் அவற்றுள் பதினேழு அத்தியாயங்களே எஞ்சி யுள்ளன. மகாயான பௌத்தத்தின் எடுப்பான நற்காவியம் இது என்பர் ஆராய்ச்சியாளர்.

பாலி இலக்கியங்களிலும் சமஸ்கிருதத்திலும் இருக்கும் மூல நூல்கள், புத்த சரிதம் ஆகியவை தவிர, இந்திய மொழி

களில் தமிழிலியற்றப்பட்ட "மணிமேகலை", தலை சிறந்த இலக்கியமாகக் கருதப்படுகிறது. இந்த நூலுக்குக் கிடைக்க வேண்டிய அங்கீகாரமும் பரவலான பயிற்சியும் இன்னும் கிடைத்தில. பௌத்த காப்பியம் என்ற காழ்ப்பும், பிற இந்தியத் தத்துவங்களை, ஆதிக்கம் பெற்று வந்துள்ள வாதங்களை ஒளிவு மறைவின்றித் தாக்கிப் புத்தசமயத்தின் சிறப்பினை வற்புறுத்துகிறது என்ற எண்ணமும் காரணங்களாகலாம். காரணங்கள் எவையாயினும், இலக்கியச் செறிவு மிளிர, தமிழகத்தில் பிற்காலத்தில் தோன்றி வளர்ந்து செழித்துச் செல்வாக்குப் பெற்ற சமயவாதங்களின் அறிமுகமாக, பண்டைத் தமிழகத்தின் பண்பாட்டுச் சிறப்பின் பெட்டகமாக மணிமேகலை ஒளி விடுகிறது.

வேத நாகரிகமும் வைதிகக் கருத்துகளும் தமிழகத்தில் ஊடுருவிச் சமூகத்தில் செல்வாக்கும் வலிமையும் பெற்றோங்கிய சங்கம் மருவியகாலத்தில் எதிர் வழக்காகச் சமணமும் பௌத்தமும் மக்களைக் கவர்ந்திழுக்கத் தொடங்கின. பண்டைத் தமிழகத்தில் நிலம் மன்னனுக்குச் சொந்தம். பயிர் செய்வதற்கு நிலத்தை உழவர்களுக்கு வழங்கி விளைச்சலில் ஆறிலொன்று கடமையாகப் பெற்றான். ஆகவே நிலமே அரசு வருவாய்க்குத் தலையூற்று. சமூக அமைப்பும் நில உடைமை அமைப்பைத் தழுவியே இருந்தது. வேளாளர்கள் வைதிக சமயத்தையும் வணிகர்கள் பெரும்பாலார், சமண — பௌத்த சமயங்களையும் பின்பற்றத் தொடங்கினராதல் வேண்டும். திரைகடலோடி வணிகவர்க்கம் பண்டங்களையும் செல்வத்தையும் சேமித்துக் குவித்ததேனும் சமூக மேலாதிக்கம் வகித்தது வேளாண்மை வர்க்கமே. உள்நாட்டிலும் திரைகடலூடு வெளிநாடுகளுக்கும் வழித்தடம் கண்டு நகரங்களை உருவாக்கிய வணிகவர்க்கம் வேளாண்மை வர்க்க மேலாண்மைக்கு அடங்கியே வாழ வேண்டி இருந்தது. இம்முரண்பாட்டின் சாயலாக அமைந்துள்ளவையே சங்ககாலத்தினைத் தொடர்ந்து பின்னெழுந்த பேரிலக்கியங்கள்.

சமயச் சடங்குகள், அப்பாலைத் தத்துவம், மெய்ப் பொருளியல், என்று மெய்ப் பொருளியல் வளர்ச்சிப் போக்கு நிலைகளை மூன்று படிநிலைகளாகப் பகுத்துக் காண்பர் மார்க்சிய ஆராய்ச்சி அறிஞர். சமயக் கருத்துக்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் புலம் தந்து விளக்கம் காண அப்பாலைத் தத்துவமும் அப்பாலை தத்துவத்துக்கு மேனிலை மாடமாக மெய்ப் பொருளியலும் அமைகின்றன எனலாம். (தியோடர் ஒய்சர்மன் - மெய்ப் பொருளியல் வரலாற்றுப் பிரச்சினைகள்'' (1973), ஐ. சோல்சுக்''இன்றைய மெய்ப் பொருளியல் மரபுகள்'', (1973) என்னும் இரு நூல்கள் காண்க) புத்த சமய வரலாற்றில் இம்மூவகை வளர்ச்சி நிலை களை மிகத் தெளிவாகக் காணலாம்: சடங்குகள்-பழக்க வழக்கங்கள் என்னும் முதனிலை கடந்த அப்பாலைத் தத்துவம் பிறந்த காலநிலையில் தோன்றியது மணிமேகலை. அஃதாவது, ஹீனாயானம், மகாயானம் என பௌத்தம் இரு கூறாகப் பிரிந்து அப்பாலைத் தத்துவம் தனித்தனி வழியமைத்துக் கொண்ட பின்னர்த் தோன்றியது. மேலும் விளக்க வேண்டுவதாயின் - மகாயான, தந்திராயன பௌத்தத்தின் தாயகம் தென்னகம், குறிப்பாக ஆந்திரம். ஆந்திரத்தில் பிறந்த நாகார்ச்சுனரே மகாயானத்தை வடிவமைத்தவர்; கி. பி. தொடக்க நூற்றாண்டுகளில் தென்னாடு முழுவதிலும் மகாயானம் அலை வீசி எழுந்தது; தமிழகத்தில் இதன் வீச்சு வலிமை பெற்றது. இதன் விளைவாக எழுந்த பெருங்காப்பியமே மணிமேகலை. இந்திய நாட்டில் பிறந்த சமய வாதங்கள் தமக்கென அப்பாலையியல் தத்துவங்களைப் படைத்துக்கொண்டு ஒன்றுடன் ஒன்று மலைந்து மோதிச் சமயப் போர் புரிந்த காலப் பின்புலத்தில் மணிமேகலை எழுந்தது. காஞ்சி புரத்தைச் சார்ந்த போதி தருமர் சீனாவிலும் ஜப்பானிலும் தியான பௌத்தத்தைப் பரப்பினார். அனைத்துலகப் புகழ் பெற்ற பௌத்தப் பேரறிஞர்களான திக் நாகரும் தர்ம பாலரும் காஞ்சிபுரத்தைச் சார்ந்தவர்கள் பௌத்ததருக்க இயலுக்கு வித்திட்டவர் திக் நாகர் என்பர். இவர் காலம்

ஐந்தாம் நூற்றாண்டு, இயற்றிய நூல் நியாயப்பிரவேசம், மணிமேகலையில் இடம் பெறும் அளவைக் கருத்துகள் நியாயப்பிரவேசத்திலிருந்து நேரடியாகப் பெறப்பட்டவை என்பர். எனவே மணிமேகலை ஆசிரியர் சாத்தனாரும் இந்த நூற்றாண்டில் வாழ்ந்தவராகலாம். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு தொடங்கி ஒன்பதாம் நூற்றாண்டு வரை நாயன்மார்களும் ஆழ்வார்களும் பக்தி நெறி பரப்புவதற்காகச் சமண-புத்த சமயங்களை எதிர்த்து நாடு முழுவதும் கடும் போர் புரிந்து வந்த காலத்தில் இத்தகைய அரிய இலக்கிய நூல் எழுதற்கான சமூகப் பின்னணி இருந்திராது.

கிறித்துவ ஊழித் தொடக்கத்தின் முதற்சில நூற்றாண்டுகளில் மகாயானத்தோடு தந்திராயனமும் பௌத்தத்தில் வலிமை வாய்ந்த பிரிவாகத் தோன்றிற்று. அசாம், வங்கம், பீகார், ஆந்திரம் ஆகிய நிலப் பகுதிகளில் தந்திராயனம் மக்கள் சமயமாக வளர்ந்தது. இந்தப் பின் புலத்தில் தந்திர நூலான திருமூலர் திருமந்திரம் தோன்றி இருக்க வேண்டும். எட்டாம் நூற்றாண்டினரான சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையில், "நம்பிரான் திருமூலன், அடியார்க்கும் அடியேன்!" (பாடல் 5. வரி 5) என்று பாடியுள்ளதனால் திருமந்திரத்தின் காலமும் ஏறத்தாழ மணிமேகலை காலமாகலாம்.

பௌத்தமும் பிறசமய வாதங்களும் தனித்தனி அறிந்து தெளிதற்குரிய வடிவங்களைப் பெறத் தொடங்கிய காலத்தில் மணிமேகலை "சமயக் கணக்கர் தந்திறங் கேட்ட காதை", யில் காணும் பல்வேறு சமய நிலையியல் வாத அப்பாலைத் தத்துவக் கருத்துக்களைச் சந்திக்கிறோம். சாத்தனார் கண்ட சமய-மெய்ப் பொருளியல் கலைச் சொற்கள் பல பின் வந்த சமய-மெய்ப் பொருளியல் சான்றோர்களால் வழங்கப் படுகின்றன. எனவே, தமிழில் பிற்காலத்தே தோன்றிய சமய வாத நூல்களுக்கு, அத்துவிதம், சைவ சித்தாந்தம், விசிட்டாத் துவைதம் ஆகியவை கண்ட மெய்ப் பொருளியல் நூல்களுக்கு, மணிமேகலை முன்னோடி வழிகாட்டியாகத் திகழ்கிறது.

கண்ணகிக்குத் தீங்கிழைத்த பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் உயிர் துறக்கிறான்; அதுபோலவே, மாதவியின் மகள் மணிமேகலைக்குத் தீங்கிழைக்கத் துணிந்த சோழ இளவரசன் உதயகுமாரன் வாளாலெறியப் படுகிறான். அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாயிற்று. அறத்தின் பாத்திரத்தை வணிக வர்க்கம் தாங்கி நிற்றலைச் சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் இருநூல்களிலும் காணலாம், சோழர் புகாரிலிருந்து சேரர் வஞ்சி வரை—மூவேந்தர் ஆண்ட தமிழகத்தில் அக்காலத்து நிகழ்ந்த அடிப்படைச் சமூக மாற்றங்களை, இலக்கிய நெறியில் பாத்திரங்கள் வாயிலாக, அறிவதற்குச் சிலம்பும் மேகலையும் முக்கிய ஆதாரங்களாக அமைகின்றன. இவற்றில் கற்பனைகளும் இயற்கை இகந்த நிகழ்ச்சிகளும் மிகுதி; என்றாலும் சமூக வரலாற்றுக் கூறுகளும் நிரம்ப உள்ளன. வேற்றுமொழி என்று தமிழை நெடுங்காலம் ஒதுக்கி வந்த கேரள நாட்டு நல்லறிஞர் பலர் அண்மைக் காலத்தில் தம் பண்டையச் சமூக வரலாறறிய வேண்டுமாயின் தமிழிலக்கியங்களை நாட வேண்டும் என்றுணர்ந்துள்ளனர் சங்க இலக்கியங்களையும் சிலம்பையும் மணிமேகலையையும் கற்க முற்பட்டுள்ளனர். என்றாலும், மார்க்சியம்—லெனினியம் வகுத்தளித்துள்ள வரலாற்றியல் பொருள் முதல் வாதத்தை ஆராய்ச்சி அளவு கோலாகவும் கருவியாகவும் துணையாகவும் கொள்ளாதவர்களுக்குச் சமூக மாற்றங்களின் புறநிலை உண்மைக் காரணிகள் தெளிவாவதில்லை. அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளிலிருந்து தமிழகம் போந்து ஆராய்ச்சி நிகழ்த்தும் அறிஞர் பலர் வரலாற்றியல் பொருள் முதல் வாத நெறியை வழிகாட்டியாகக் கொள்ளுகின்றனர். அதனாலேயே அவர்தம் நூல்கள் கருத்துச் செறிவும் வலிமையும் பெற்றவை எனப் பாராட்டப்படுகின்றன. மேற்கோள்கள் பல தரலாம்.

இந்நூலாசிரியர் தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்கள் மாணவப் பருவத்திலிருந்தே மணிமேகலைக் காப்பியத்தில் ஈடுபாடுடையவர், ஆழ்ந்து பயின்று வருபவர். ஐம்பதாண்டுப் பொதுவாழ்வும் தொழிற்சங்க இடக்கத்தில் ஈடுபாடும் அமையப் பெற்றவர். பொது உடைமைக் கருத்து களும் இயக்கமும் தமிழகத்தில் கால் கொண்டு வெற்றி பெற்றுத் தமிழக மக்கள் புதிய ஏற்றத்தாழ்வு சாதி சமய பேதமற்ற சமூகம் காண வேண்டுமென உழைக்கும் வரலாற்றியல் பொருள் முதல் வாதி.

பல ஆண்டுகளுக்கு முன் சிறைச் சாலையிலிருந்த போது தொடங்கி அண்மைக்காலம் வரை, நேரம் கிடைத்த போதெல்லாம் "தாமரை" திங்களிதழில் மணிமேகலைக் கட்டுரைகள் வரைந்து வந்தார். அவற்றை முறையாகத் தொகுத்து வைக்க முடியாததனால் கிடைத்த ஒரு சில கட்டுரைகளே இந்நூலில் இடம் பெறுகின்றன. சில இடங்களில் கூறியது கூறல் என்னும் வழு மிகுதியாகக் காணப்படினும் மாறு கொளக் கூறல் என்னும் வழு இராது.

பல ஆண்டுகள் அவருடன் பழகி மணிமேகலைபால் அவருக்கிருக்கும் ஈடுபாட்டையும் நூற் பயிற்சியையும் கண்டு வியந்ததனால், கிடைத்த கட்டுரைகளையாவது தொகுத்து அச்சிட வேண்டும் என வேண்டினேன், வற்புறுத்தினேன். என் தொல்லை தாளாது உடன்பட்டு அனுமதி வழங்கினார். பல கட்டுரைகள் கிடைக்கவில்லை. ஆகவே, கதைத் தொடர்பினை வாசகர்கள் அறிய வேண்டி மணிமேகலைக் கதைச் சுருக்கத்தை எழுதிச் சேர்த்துள்ளேன்.

ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ்ச் சமூகத்தில் பரத்தையர் குலத்தில் பிறந்த மாதவியும் மணிமேகலையும் சுகபோகங்களையும் அவற்றுக்காகப் பெருகி வந்த வாய்ப்புகளையும் துறந்து குலமகளிர் ஒழுக்கத்தை ஏற்று வாழ்வது அக்காலச் சமூகக் கட்டுக்

கோப்புக்குள் இயலாத செயல் என்று தெளிந்து மனித குலத்துக்கு அறம் கற்பித்த புத்தரது சமயம் சார்ந்து துறவு பூண்டனர். சுற்றுச் சார்பும் அயலாரும் உறவினரும் அரசும் எழுப்பிய எதிர்ப்பையும் பழி தூற்றலையும் கண்டு அஞ்சாது துணிந்து செயலாற்றுகின்றனர். சிறைச்சாலையை அறச்சாலையாக்கிய மாதரசி பிளாரன்ஸ் நைட்டிங்கேல் பற்றி உலகறியும். ஆனால், பல நூற்றாண்டுகளுக்கு முன், சமூகம் இன்று பெற்றுள்ள வளர்ச்சியைக் கனவிலும் கண்டறிய முடியாத காலத்தில், நிலப்பிரபுத்துவச் சமூகத்தில், கீழைநாட்டுக் கொடுங்கோன்மை (Oriental Despotism) எனக் கார்ல் மார்க்சும் பிற மேலைநாட்டு வரலாற்றாசிரியரும் இந்திய நாட்டிலிருந்த அரசமைப்பை வரையறை செய்ததற்குப் பின்னணி வழங்கிய சமூகத்தில் சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக்கி, ஏழை எளியவர்களை உண்பித்தவள் எனக் கருதப்பெறும் அறச்செல்வி மணிமேகலையைத் தமிழரும் அறியார். உணவு உடை உறையுள் என்ற மனித முப்பெருந் தேவைகளுள் முதலாவதாக நிற்பது உணவு. இவ்வுணவினை மணிமேகலை அமுதசுரபி வாயிலாக வழங்குகிறாள். இது இயற்கை இகந்த நிகழ்ச்சி, கற்பனை; என்றாலும் அறிய வேண்டியது யாது? அக்காலத்தில் பஞ்சம் தலை விரித்தாடிற்று, மக்கள் பட்டினியால் துன்புற்று ஆற்றாது அரற்றினர், பசிதணித்தல் துறவிக்கும் சமூகப்பணி - கடமையாயிற்று என்ற உண்மையையே. சாத்தனார் படைத்த ஆபுத்திரன் நால் வருணப் பாகுபாடு இழைத்த கொடுமைகளைத் தீவிரமாக எதிர்த்துப் போராடுகிறான். தமிழகத்தில் சாதி எதிர்ப்பு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னரே இருந்து வந்துள்ளது என்பது தெளிவு. அகந்தை, இறுமாப்பு, தற்பெருமை, பழிவாங்கல் என்னும் தீய குணங்கள் எவையுமின்றி அடக்கம், பொறுமை, கொள்கைப்பற்று, மேற்கொண்ட முடிவை நிறைவேற்றுவதற்கான மனவலிமை உடைய தலைசிறந்த பாத்திரங்களாக மாதவியும் மணிமேகலையும் இலங்கக் காண்கிறோம். சீவக சிந்தாமணி,

பெருங்கதை, சூளாமணி, கம்பராமாயணம், பெரியபுராணம், வில்லிபாரதம் ஆகிய உயர் பேரிலக்கியங்களில் அமரர், அரசர் வீர விளையாட்டுகள் இடம் பெறுகின்றன. ஆனால், சிலம்பு-மேகலை என்னும் இரட்டைக் காப்பியங்களில் காணும் தலைமைப் பாத்திரங்கள் இயல்பு வேறானது. தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்களை மணிமேகலைசேர்த்ததற்கு இவை ஒரு சில காரணங்கள். அவர்தம் கருத்துச் செறிவைக் கட்டுரைகளில் காண்க.

ஆர். பார்த்தசாரதி,
எம். ஏ., பி.ஏ. ஆனர்ஸ்,
எல்.எல் பி.

33, ஸ்ரீ அய்யப்ப நகர்
சென்னை-600111
1-5-1937.

# மணிமேகலை கதைச் சுருக்கம்

பூம்புகார் (காவிரிப்பூம் பட்டினம்) நகரத்து வாழ்ந்திருந்த சமயக் கணக்கரும் (மதவாதிகள்) ஆன்றோரும் சித்திரைத் திங்களில் முழு நிலா நாளில் இந்திர விழா எடுக்க முடிவு செய்தாங்கு வள்ளுவன் அச்செய்தியை முரசறைந்து நகரமக்களுக்கு அறிவித்தான். இந்திர விழாவில் நாடக மகளிர் ஆடலும் பாடலும் சிறப்பானவை- இந்நிகழ்ச்சிகளில் பங்குபெற மறுத்து ஒதுங்கிய மாதவியையும் அவள் மகள் மணிமேகலையையும் ஊர் அலர் தூற்றுகிறது. மாதவியின் தாய் சித்திராபதி மாதவியை அழைத்துவர மாதவியின் தோழி வயந்தமாலையை அனுப்புகிறாள். சித்திராபதியின் விருப்பத்தை வயந்தமாலை மாதவிக்கு அறிவிக்கிறாள். கோவலன் மாண்டபின் துறவு ஒழுக்கம் மேற்கொண்ட மாதவி அவ்வொழுக்கத்தைப் பிறழாது உறுதியுடன் கடைப்பிடிப்பதாகவும் பழைய வாழ்வுக்கு மீள்வது இயலாது எனவும் கூறித் திருப்பி அனுப்பி விடுகிறாள். இவ்வுரையாடலைச் செவிமடுத்திருந்த மணிமேகலை தந்தைக்கு நேர்ந்த முடிவுநினைத்துக் கண்ணீர் உகுக்கிறாள். கண்களிலிருந்து சொரிந்த நீர் புத்தபிரானுக்காகத் தொடுத்துக் கொண்டிருந்த மலர்மேல்விழுந்து தூய்மையைக் கெடுக்கிறது. இதுகண்ட மாதவி புதுமலர் கொய்துவர மணிமேகலையை ஏவுகிறாள். தோழி சுதமதியும் உடன் சென்றாள். இவளும் புத்த பிக்குணி. மணிமேகலையைத் தெருவில் கண்டார் அனைவரும்— அவள் வனப்புக்கண்டு— அவளைத் துறவு நெறிப்படுத்திய மாதவியைப் பலவாறு தூற்றுகின்றனர். மலர் வனமான உவவனத்துக்குச் சுதமதி மணிமேகலையை அழைத்தேகினாள்.

அவ்வேளை வீரர் புடைசூழ அவ்வீதிவழி வந்த சோழ அரசிளங்குமரன் உதயகுமாரன் தன்தோழன் எட்டிகுமாரன்

வழி மணிமேகலை உவவனம் போந்தாள் என்பதறிந்து அவளைத் தேரிலேற்றி வருவேன் என்றுரைத்து விரைந்தான். ஆரவாரம் கண்டு அஞ்சி நடுங்கிய மணிமேகலையைப் பளிக்கறையில் சேர்ப்பித்துக் காம வேட்கையுடன் வந்த உதயகுமாரனைச் சுதமதி தன் வரலாற்றினைச் சொல்லி மக்கள் யாக்கையின் இழிதகைமையினை எடுத்துக் கூறித் தெருட்ட முற்பட்டும் அவன் தெளியானாகிச் சித்திராபதி மூலம் மணிமேகலையை அடைந்தே தீருவேன் என்று சூளுரைத்து மீள்கிறான். சுதமதி தன் வரலாறு கூறுங்கால் பசு முட்டியதால் குடல் சரிந்த பார்ப்பனத் தந்தைக்குச் சமணர் இழைத்த துன்பமும் சங்கதருமன் ஆற்றிய உதவியும் எடுத்தியம்புகிறாள். மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிப் புத்தபீடிகையைத் தொழுது மணிமேகலையுடன் பேசத் தொடங்கிற்று. மாலை வந்துற்றது. சுதமதி வாயிலாக நிகழ்ந்தது அறிந்த மணிமேகலா தெய்வம் மேற்றிசை இருந்த ஈமப் புறங்காடான சக்கர வாளக் கோட்டத்துக்குத் தப்பிச் சொல்லுமாறு பணித்து அதன் வரலாற்றையும் சொல்லிற்று. கதை கேட்டு வரும் போதே சுதமதி உறங்கி விடவே மணிமேகலா தெய்வம் மணிமேகலையை மயக்கி வான் வழியே கொண்டு சென்று மணிபல்லவம் என்னும் தீவில் விட்டு மீண்டது. பின் உதயகுமாரனை அணுகி அவத்திறம் ஒழிகவெனச் சொல்லி, சுதமதியைத் துயிலெழுப்பி ஏழாம் நாள் மணிமேகலை நலமுடன் திரும்பி வந்தடைவாள் என்று கூறிச் சென்றது. சுதமதி சக்கரவாளக் கோட்டம் புகுந்தாள். அங்குக் கந்திற் பாவை சுதமதியின் முன் தோன்றி அவளது முற்பிறப்பறிவித்துச் சென்றது. மணிபல்லவம் தீவில் மணிமேகலை கண்விழித்தெழுந்து சுதமதியைக் காணாது துயருற்றனள். அங்குப் புத்த தருமபீடிகை கண்டு பழம்பிறப்புணர்ந்தாள், "மக்கள் யாக்கை உணவின் பிண்டம்" என்று மணிமேகலாத் தெய்வம் கூறிப் பசி நீக்கும் மந்திரத்தையும் கற்றுத் தந்து சென்றது.

மணிமேகலா தெய்வம் மறைந்ததும் தீவதிலகை என்னும் வேறொரு தெய்வம் தோன்றி ஆபுத்திரனது அமுதசுரபி அருகிருக்கும் கோமுகி என்னும் ஆற்றில் வைகாசி பூர்ணிமை நாளில் மேலெழும், அதனைப் பெற்று அறவண அடிகளைக் கண்டு அறிவித்தால் பயன்படுத்தும் முறையை அறிவிப்பார் என்று கூறி மறைந்தது. மணிமேகலைக்கும் அமுதசுரபி கிடைத்தது. ஒருவாரம் கழிந்தது. பிக்குணி உருத்தாங்கி மணிமேகலை மாதவியிடம் வந்து சேர்ந்தாள். மாதவியும் சுதமதியும உடன்வர மணிமேகலை அறவண அடிகளைச் சந்திக்கிறாள். அவர் ஆபுத்திரன் பிறப்பறிவித்து அவனுக்குத் சிந்தாதேவி அளித்த அமுதசுரபியின் சிறப்பறிவித்தார். மணிமேகலை அமுத சுரபி ஏந்திப் பிச்சைக்குச் செல்லக் காயசண்டிகை என்பாள் ஆதிரை என்னும்.பத்தினி நல்லாள் வரலாறு கூறி அவள் இல்லம் சென்று அவளிடம் பிச்சை ஏற்குமாறு அறிவுறுத்தினாள். 'ஆருயிர் மருந்தெனப் பாரக மடங்கலும் பசிப்பிணி அறுகென' வாழ்த்தி ஆதிரை பிச்சை இட்டனள். காயசண்டிகையின் ஆனைத் தீ நோய் போக்கிப் புகாரின் ஊர் அம்பலமான உலக அறைவி புக்கு ஆற்றா மாக்களைக் கூவியழைத்து உண்டி வழங்கினாள்.

குலவொழுக்கத்துக்குக் கேடு விளைத்தாள் மணிமேகலை எனக் கருதிய சித்திராபதி சினமுற்றுக் கணிகையர் சிலர் புடைசூழ அரண்மனை அடைந்து உதயகுமாரனிடம் ஒழுக்கம் பிறழுவோரைத் தடுத்தல் அரச நீதி எனக் கூறித் தெருட்டித் தூண்டி அனுப்பினாள். முதலில் மறுத்தவன் பின்னர் மனம் தேறித் தேரேறி அவளைக் கொணர உலக அறைவி அடைந்தான். மணிமேகலையைக் கண்டு நல்லாய் நற்றவம் புரிந்தது ஏன் என வினவுதலும் அவள் மக்கள் யாக்கையின் தன்மையை விளக்கி நல்லறம் புரிந்தேன் என விடை தந்து அருகிலிருந்த குச்சரக் குடிகையினுள் சென்று காயசண்டிகை உருவடைந்து மீண்டும் வந்து தோன்றினாள். உதயகுமாரன் அரண்மனை திரும்பினான்.

வித்தியாதர மகளாகிய காயசண்டிகை ஆனைப் பசி நீங்கிய பின் புகார் நகர் விட்டு நீங்கினாள். ஆனால் அதே உருவில் மணிமேகலை ஆற்றா மாக்கள் அரும்பசி களைந்து பின் சிறைக்கோட்டம் நண்ணி அங்குச் சிறைப்பட்டிருப் போர்க்கு உண்டி வழங்கினாள். ஒரே பாத்திரத்தில் பலருக்கு உணவளிக்கும் பான்மை கண்டு வியந்த சிறைக் காவலர் இவ்வியத்தகு செயலைச் சோழ மன்னன் மாவண் கிள்ளிக்கு அறிவித்தனர். காயசண்டிகை உருவிலிருந்த மணிமேகலை, தான் வித்தியாதர மாது எனவும் தெய்விகத்தினால் அமுத சுரபியிலிருந்து பசிப்பிணி போக்குவதாகவும் கூறிச் சிறையிலிருந்தோரை விடுவித்துச் சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக மாற்றுக என வேண்டலும் மன்னனும் அவ்வாறே செய்தனன்.

உதயகுமாரன் மணிமேகலையைக் கைப்பற்றித் தேரிலேற்றிக் கொணரும் முயற்சியைக் கைவிட்டானில்லை. காயசண்டிகை காஞ்சனன் என்னும் வித்தியாதரனது மனைவி. எனவே, காஞ்சனன் மனைவியைத் தேடிவரவே, காயசண்டிகை வடிவம் தாங்கி உணவிட்டு வந்த மணிமேகலையே தன் மனைவி எனப் பிறழக் கருதி, அவளோடு நெருங்கிச் சொல்லாடிய உதயகுமாரனுக்கும் அவளுக்கும் தகாத உறவு இருத்தல் கூடும் என ஐயுற்று அது தெளிதல் பொருட்டு மறைந்திருந்தான். ஆனால், மணிமேகலையே காயசண்டிகை உருவில் உள்ளனள் என்று ஓர்ந்த உதயகுமாரன் உண்மையறிய வேண்டி நள்ளிரவில் தனியாக உலக அறைவியில் புகுந்தான்; மறைந்திருந்த காஞ்சனன் அவனை வாளால் வெட்டி வீழ்த்தினான். கந்திற் பாவையால் உண்மையுரைக்கப் பெற்ற காஞ்சனன் வருந்தி வான் வழித் தன்னாடு மீண்டான். சம்பாபதி கோயிலில் துயின்றிருந்த மணிமேகலைக்கும் அறிவிக்கிறது. காயசண்டிகை உருவம் நீங்கி உதயகுமாரன் உடல் தழுவி அழச் செல்ல முற்பட்ட மணிமேகலையைக் கந்திற் பாவை தடுத்து நிறுத்தி உதயகுமாரன் கொலையுண்டதற்குக்

காரணம் கூறித் தெருட்டி இனி எதிர் காலத்தில் வரவிருக்கும் நிகழ்ச்சிகளையும் முன் கூட்டிச் சொல்லிற்று சக்கரவாளக் கோட்டத்து மாதவர் நிகழ்ந்தது அறிந்து அரசனிடம் சென்று தக்கவாறு உரைத்தனர். அரசன் உதயகுமாரன்பால் வெறுப்புற்று அவன் உடலை ஈமத்து ஏற்றி மணிமேகலையை காவலில் இடுமாறு சோழிக ஏனாபதிக்குக் கட்டளை இட்டனன்.

சோழமாதேவி சீர்த்தி அரசனை அணுகி வஞ்சகமாகப் பேசி மணிமேகலையைத் தன் பாதுகாப்பில் இருக்க வேண்டினள். அரசனும் இசைந்தான். மகன் உதயகுமாரனைக் கொன்றவள் மணிமேகலையே என்று ஐயுற்றுச் சீர்த்தி மணிமேகலைக்குப் பித்தேற்று மருந்து கொடுத்தாள்; கல்லா இளைஞனொருவனை விடுத்துக் கற்பழிக்கப் பணித்தும், நோயுற்றனள் எனப் பழி சொல்லியும் துன்புறுத்தினாள். மணிமேகலை, தான் கற்ற மந்திரங்களினுதவியினால் தீங்குகளை வென்றாள். இது கண்டு அரசி மணிமேகலையிடம் விளைந்த இடுக்கண்களைப் பொறுக்கவென வேண்டினாள். முற்பிறப்பில் தன் கணவனான உதயகுமாரன் இப்பிறப்பில் கொலையுண்டு மாய்ந்தது வினைப் பயனால் என்று கூறி அரசியை மணிமேகலை தேற்றித் தான் தப்பிய வரலாற்றையும் காமத்தின் வெம்மையினையும் கொலை களவு பொய்யொழுக்கம் என்பவற்றாலாகும் தீங்குகளையும் எடுத்தியம்பினாள். அரசமாதேவி மணிமேகலை அடிவீழ்ந்து தொழ முற்படுங்கால் அவளைத் தடுத்து நிறுத்தி "காவலற் பயந்தோளன்றியும் காவலன் மாபெருந்தேவி", என்று கூறி வணங்கி நின்றாள். சிறையிலிருந்து விடுதலை பெற்றாள்.

அரசமாதேவியையும் சித்திராபதியையும் அறவண அடிகள் மொழிவழி ஒழுகி வாழ்கவெனக் கூறிப் புகாரில் தொடர்ந்து இருப்பாளேயானால் உதயகுமாரன் மறைவுக்குத் தானே காரணம் என்ற பழிக்கு ஆளாக நேரிடும் என்றஞ்சி, ஆபுத்திரன் புண்ணியராசன் என்னும்

அரசனாகப் பிறந்து ஆட்சி செய்யும் சாவக நாடு செல்வதாகக் கூறி, அன்றிரவு வான் வழிப் பறந்தேகினாள். புண்ணிய ராசனைக் கண்டு அவன் முற்பிறப்பில் செய்த நல்லறத்தின் பலனாக இப்பிறப்பில் பசு வயிற்றில் பிறந்து அரசனானான் என்றறிவித்து அவனுடைய பாத்திரமே தான் பெற்ற அமுதசுரபி என்று கூறி மணிபல்லவம் வந்திறங்கிப் புத்தபீடிகையைத் தொழுதனள்.

புண்ணியராசன் ஆட்சியை அமைச்சனிடம் ஒப்புவித்து விட்டு மரக்கலம் ஏறி மணிபல்லவம் சேர்ந்தான். புத்த பீடிகையைத் தொழுது நின்ற புண்ணியராசன் பழம் பிறப்புணர்ந்து தன் முற்பிறப்பின் எலும்புக் கூடுகளையும் அவன்பால் அன்புடனிருந்த ஒன்பது செட்டிகள் (அங்கு வந்து உயிர் நீத்தவர்களுடைய) எலும்புக் கூடுகளையும் கண்டு மயங்கினான். மணிமேகலை அவனுக்கு அறங்கூறிப் பின் சாவக நாடு செல்ல விடுத்தனள். மணிமேகலை வான் வழிப் பறந்து வஞ்சி மாநகர் சென்றடைந்தாள்.

வஞ்சியில் சேரன் செங்குட்டுவன் நிறுவிய பத்தினிக் கோயிலுள் கண்ணகி கோவலன் படிமங்களைக் கண்டு தொழுது நின்றாள். மகள் மணிமேகலைக்குக் கண்ணகி பழவினையின் வரலாற்றையும் உய்யும் காலத்தையும் வழியையும் கூறுகிறாள். பின், மணிமேகலை பிக்குணி வடிவத்தில் வஞ்சிமாநகர் புகுந்தாள். வஞ்சியிலிருந்த அளவை வாதி, சைவவாதி, வைணவவாதி, பிரம்ம வாதி, வேத வாதி, ஆசீவக வாதி, நிகண்ட வாதி, சாங்கிய வாதி, வைசேடிக வாதி, பூதவாதி ஆகிய சமயக் கணக்கர்களைத் தனித் தனிக் கண்டு பல்வேறு வினாக்களைக் கேட்டு ஐவகைச் சமய நெறி களைப் பற்றித் தெளிந்தாள். பின்னர், தன் மூதாதையாகிய மாசாத்துவனையும் கண்டு, காஞ்சியில் மழையின்றி மக்கள் பட்டினியால் துன்புற்று அல்லலுறுவது அவன் வாய் கேட்டறிந்து, அவன் வேண்டுகோளுக்கிணங்க காஞ்சி வந்தடைந்தாள். அமுதசுரபியின் துணையினால் "மொய்த்த மூவறு பாடை மாக்களில் காணார் கேளார் கால் முடமானோர் பேணா மக்கள் பேசார் பிணித்தோர்

படிவ நோன்பியர் பசி நோயுற்றோர் மடி நல்கூர்ந்த மாக்கள் யாவரும்'', உண்டு பசிதீர உணவளித்தாள்.

மாதவியும் சுதமதியும் அறவண அடிகளுடன் வந்து மணிமேகலையைக் கண்டனர். மணிமேகலை அறவணவடிகளைப் புத்த தருமத்தை எடுத்துரைக்குமாறு வேண்டினாள். அறவணவடிகளும் புகார் நகரினைக் கடல் கொண்ட செய்தியையும் அதற்குக் காரணத்தையும் கூறிப் புத்த தருமத்தையும் போதித்தார். பௌத்த அளவையியல் முழுவதையும் அறிவித்தார்.

உணவளித்தாள்; சீலம் தலை நின்றாள்; புத்தம் தன்மம் சங்கம் என்னும் மும்மணிகளை வணங்கினாள். எண்ணில் புத்தர் போதித்த அறங்களை அறவணர் அறிவுறுத்தினார். மணிமேகலை தவத்திறம் பூண்டு பிறப்பறுகவென நோன்பினை மேற்கொண்டனள்.

—ஆர். பி. எஸ்.

# மணிமேகலை பற்றி

# 1

## மணிமேகலை காலமும்
## சமூக – பொருளாதார அரசியல் நிலையும்

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இணைந்த இரு நூல்களாகும். ஒரே காலத்தில் எழுதப்பட்டவை எனத் தெரிகிறது. சிலப்பதிகாரக் கதையான கண்ணகி கதையை,

> ''உரைசால் அடிகள் அருள
> மதுரைக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்''

அதே மாதிரியாக மணிமேகலையின் கதையை,

> ''இளங்கோ வேந்தன் அருளிக் கேட்ட
> வளங்கெழு கூலவாணிகன் சாத்தன்
> மாவண் தமிழ்திறம் மணிமேகலை துறவு
> ஆறைம் பாட்டினுள் அறிய வைத்தனனென்.''

30 காதைகள் கொண்ட இந்நூல் புத்தமதச் சார்புடைய ஓர் இலக்கியம். தமிழ் மொழியிலுள்ள முக்கியமான சமயக் காப்பியமாகும். குறிப்பாக சமயக் கணக்கர் திறம் கேட்ட

காதை பல சமய உண்மைகளையும், தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை ஆகிய கடைசி இரண்டு காதைகளும் பௌத்தமத மெய்ப் பொருளையும் கூறுகின்றன.

சாத்தனார் ''மணிமேகலை''யை எழுதிய காலம் என்ன என்பதை நூலின் உள்ளே உள்ள கருத்துகளைக் கொண்டு ஓரளவு கணிக்கலாம். திருவள்ளுவர் இயற்றிய குறள் காலத்துக்குப் பின்னர்தான் என நிச்சயமாகக் கூறலாம். இந்நூலில் குறள் அடிகளை அப்படியே எடுத்து ஆண்டுள்ளார் சாத்தனார். சோழன் சுகந்தனின் இளைய மகன் காவிரியில் குளித்து வரும் மாருதியை 'நீ வா' என்று கூப்பிட்டான். உடனே அவள் சதுக்க பூதத்திடம் முறையிடுகிறாள். கற்புடைய நான் என்ன குற்றம் செய்தேன் எனக் கேட்கிறாள். உடனே பூதம் தோன்றி ''மடக் கொடியே நீ கேள்'' என்று உரைக்கும்.

''தெய்வம் தொழாஅள் கொழுநற் தொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை யென்றவப் பொய்யில் புலவன் பொருளுரைதேறாய்'' என்று குறளின் அடிகளைக் குறிப்பிட்டதுடன் அல்லாது அது 'பொய்யில் புலவன்' உரை என்று சொல்லுகிறார்.

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு'' என்ற குறளின் கருத்து எடுத்து ஆளப்படு கிறது. ஆதிரையின் கணவனான சாதுவன் நாகர் தலைவனிடம் கூறுவான் :

'பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்றது .' (18, 17-18) மேலும் குறளின் பல கருத்துக்கள் மணிமேகலையில் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

''ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலைபகர்வோர்'' ஓர் சிறந்த உதாரணமாகும். இதுபோன்று பல மேற்கோள்கள் காட்ட முடியும்.

நான் எடுத்துக் கொண்ட தலைப்பு காலத்தை நிச்சயிப்பது.

மேலும் வள்ளுவர் காலத்துக்குப் பின் கரிகால்சோழன் காலத்துக்கு பின் என்பதற்கும் மனுநீதி சோழனுக்குப் பின் என்பதற்கும் சான்றுகள் உண்டு.

சுதமதி கரிகால் சோழனைச் சுட்டிக்காட்டி, உதய குமரனிடம் சொல்கிறாள், இளமையில் அரசனான கரிகால் வளவன் நீதி மன்றத்துக்கு வரும்போது வயோதிகனாகக் காட்சி அளித்தானாம்.

> "இளமை நாணி முதுமை எய்தி
> உரை முடிவு காட்டிய உரவோன் மருகற்கு
> அறிவும் சால்பும் அரசியல் வழக்கும்
> செறிவளை மகளிர் செப்பலும் உண்டோ" (425-428)

தன்மகன் உதயகுமரன் வெட்டுண்டான் என்று கேள்விப் பட்ட சோழ மன்னன் மனுநீதி சோழனின் வழித்தோன்றல் இப்படிப்பட்டவனானானே என வேதனைப்படுகிறான்.

> "மகனை முறை செய்த மன்னவன் வழியோர் துயர்
> வினையாளன் தோன்றினன்" (28, 27-28)

இவைகளை நோக்குமிடத்துக் குறளுக்குபின், கரிகால் சோழன் காலத்துக்குபின் மணிமேகலை காப்பியம் எழுதப் பட்டது எனக் கொள்ளலாம். எப்படியும் 1000 ஆண்டு களுக்கு முன் எழுதப்பட்டது எனக் கொள்ளலாம். சிலர் வருடங்களை அதிகப்படுத்த விரும்புவர். எப்படியும் இது ஒரு புராதன இலக்கியம் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

# 2

''மணிமேகலையில்'' அதிகமாகச் சோழ மன்னர்களைப் பற்றியும் சோழ நாட்டின் நீதியைப் பற்றியும் பல இடங்களில் காணப்படுகின்றன. மணிமேகலையிடம் காதல் கொள்ளும் உதயகுமரன் சோழ மன்னனின் மகனாகும். மணிமேகலையைத் தொடர்ந்து வரும் உதயகுமரனுக்கு அறிவுரை சொல்லும் சுதமதி :

''இளமை நாணி முதுமை யெய்தி
உரை முடிவு காட்டிய உரவோன் மருகற்கு
அறிவும் சால்பும் அரசியல் வழக்கும்
செறிவளை மகளிர் செப்பலும் உண்டோ'' (425-428)

வாலிபனாக அரசு ஏற்ற கரிகால் சோழன் முதுமை எய்தி வழக்குகளை விசாரித்தான் என்பது அவன் பெருமை. அவனுடைய மரபில் வந்தவனன்றோ உதயகுமரன்!

இன்னொரு சம்பவத்தைக் கவனிப்போம், காய சண்டிகையின் கணவனாகிய விஞ்சயன் கைவாளால் உதய குமரன் கொல்லப்படுகிறான். காய சண்டிகை உருவில் இருந்த மணிமேகலையை அரசகுமாரன் நெருங்கினான்; தன் காதலியைக் கவரப் பார்க்கிறான் என்ற எண்ணத்தால் தான் விஞ்சயன் கொலை செய்கிறான். இந்தச் சம்பவத்தைப் பக்குவமாக மாதவர்கள் அரசனுக்குச் சொன்னார்கள். அரசன் கோபப்படவில்லை. நானே அவனை முறை

செய்திருப்பேன். எனக்கு கொடுத்து வைக்கவில்லையே என்று,

"மகனின் முறை செய்த மன்னவன் வழியேன்
துயர் வினையாளன் தோன்றினன் என்பது
வேந்தர்தம் செவியுறுவதன் முன்னம்
ஈங்கிவன் தன்னை ஈமத்தேற்றி (2328-2330)

இங்கு குறிப்பிடும் சம்பவம் மனுநீதி சோழனைப் பற்றியது.

—அரசன் சுகந்தனின் மகன் பார்ப்பனி மருதியை 'நீ வா' என்று அழைத்தான். அவள் பூதசதுக்கத் தெய்வத்திடம் முறையிடப் பூதம் ஏழு நாள் தவணை கொடுத்தது. ஏழாம் நாள் அரசன் தன் மகனை வெட்டினான்.

"பூதமறைத்த நாளால் ஆங்கவன்
தாதை வாளால் தடியவும் பட்டனன்"

இன்னொரு மகன் தருமதத்தனின் மாமன் மகளான தவத்தி விசாகையைக் காமுற்று மாலை வாங்கி எறிய கை அப்படியே நிற்க மன்னன் தன் வாளால் அவன் கையை வெட்டினான்.

"கடுஞ்சினம் திருகி மகன் துயர்நோக்கான
மைந்தன் தன்னை வாளா லெறிந்தனன்" (2774-75)

மகனே தவறு செய்தாலும் தண்டிக்கத் தயங்காத மன்னர்கள், அரசன் கடமையைப் பற்றி அரசனே கூறுவதைக் கவனிக்கலாம்.

"மாதவர் நோன்பும் மடவள் கற்பும்
காவலன் இன்றெனின் இன்றால் (2825-26)

எனவே வாழ்க்கையைத் துறந்து அறநெறி கைப்பிடித்தோரையும் கற்புடைய மங்கையர்களையும் அரசன் காப்பாற்றினான் எனக் கொள்ளலாம்.

காய சண்டிகை வேடத்துடன் இருந்த மணிமேகலையின் வேண்டுகோளை ஏற்று அரசன் சிறைச்சாலையை அறச் சாலையாக மாற்றினான்.

அரசனுடைய கடமையைப் பற்றிப் பிரிதோரிடத்தில் விளக்கமாக மணிமேகலை வாயிலிருந்தே கேட்கிறோம். ஆபுத்ரன் அடுத்த ஜென்மத்தில் புண்யராசனாகப் பிறந்துள்ளான். அவனைச் சந்தித்துத் தன்னைப்பற்றியும் அவனைப்பற்றியும் தெரிவித்து, அரசனுடைய கடமையைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு சொல்வான்:

"அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாதிதுகேள் மன்னுயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டதில்...." (3983-86)

அதற்கு அரசனுடைய பதில் இன்னும் விளக்கமாக அமைந்துள்ளது.

"என்னாட்டாயினும் பிறர் நாட்டாயினும்
நன்னுதல் உரைத்த நல்லறம் செய்கேன்" (3386-87)

சமண மடங்களும், பௌத்த மடங்களும் இருந்தன. அரவண அடிகள் என்ற புத்தமதத்தை தெளிவாக எடுத்துரைக்கும் ஓர் ஆசான், கதையில் பல இடங்களில் வருகிறார். இறுதியில் மணிமேகலை தவத்திறம் பூண்டவுடன் தெளிவான புத்த தருமத்தை உரைத்தவரும் அறவண அடிகளாகும்.

விழா எடுக்கச் செய்து மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கவும் அரசன் ஏற்பாடுகள் செய்கிறான். கதை தொடங்குவதே இந்திரவிழாவுடன் தான். அந்த விழா 28 நாள் நடக்கிறது. நகரை அணிசெய்கின்றனர். ஆடல் பாடல்கள் உண்டு. கரிகால் சோழன் ஆண்டகாலம்போல் இருக்க வேண்டும். தேவலோகம்போல் இருக்க வேண்டும். தெய்வங்களை வழிபாடு செய்யவேண்டும். அறிவு பரப்ப வேண்டும்.

"தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்
ஒட்டிய சமயத் துறுபொருள் வாதிகள்
பட்டிமண்டபத்து பாங்கறிந் தேறுமின்"

பட்டிமன்றம் நடக்கும். "பசியும் பிணியும் பகையும்" நீங்கி வாழவேண்டும், விழாவின் நோக்கம் வெகு சிறப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விழாவில்தான் வருடா வருடம் மாதவி நாட்டியம் ஆடுவதுமாகும். மாதவியின் தாயான சித்திராபதி இதற்கு ஏற்பாடு செய்வாள், ஆனால் கோவலன் இறந்தவுடன் மாதவியோ கைம்மை நோன்பு மேற்கொண்டு புத்தமடத்தில் சேர்ந்துள்ளார். அவருடைய மகளாகிய மணிமேகலையாவது நாட்டியத்துக்கு வரவேண்டுமென சித்திராபதி விரும்புகிறாள். ஆனால் மாதவியோ தன் மகள் மாபெரும் பத்தினி கண்ணகியின் மகள், எனவே அருந்தவப்படுத்தல் அல்லது யாவதும் திருந்தாச் செய்கைத் தீத்தொழில் படாள் எனக் கடுமையான முறையில் நிராகரிக்கின்றாள்.

# 3

## பரத்தையர்

மணிமேகலை காலத்து சில பழக்க வழக்கங்களை இக்கட்டுரையில் பார்ப்போம்.

**பரத்தையர்** : பரத்தை யொழிப்பு என்ற சமுதாயச் சீர்திருத்தத்தை இக்காவியத்தில் வலியுறுத்தியுள்ளார் சாத்தனார். இந்நூலில் வரும் **சித்திராபதி** மணிமேகலையின் பாட்டி, மாதவியின் தாய். அவள் பரத்தை வாழ்க்கை நடத்தியவள். பலரை இன்புறுத்துவதே நம் கடமை என்று கொள்பவள். கோவலன் இறந்தபின் மாதவி இந்திர விழா நாளில் நடனம்ஆடாததைச் சித்திராபதி விரும்பவில்லை. மேலும் தன் பேத்தி —குமரிப் பருவத்திலுள்ள மணிமேகலை ஒதுங்கியிருப்பது சரியல்ல என்று கருதினாள். மணிமேகலையும் மாதவியும் வாராத் தணியா துன்பம் மேல்விழ சித்திராபதி தன் மகளை தோழி வயந்த மாலையை அனுப்பி அழைத்து வரச் செய்கின்றாள். வயந்த மாலை ஏமாற்றத்துடன் திரும்பினாள். சித்திராபதியோ குல வொழுக்கம் போயிற்றே என்று துடிக்கிறாள். பரத்தையரின் குலவொழுக்கம் பற்றி சித்திராபதி கூறுவதைக் கவனிப்போம்.

> ''பத்தினிப் பெண்டிர் அல்லேம் பலர்தம்
> கைத்துரண் வாழ்க்கை கடவியமன்றே'' (1979-80)

யாழினம் போலும் இயல்பினம், பூத்துறக்கும்
வண்டுபோல்குவம் என்று வர்ணிக்கிறாள்.

உதயகுமரன் போன்ற அரசிளங் குமரன் விரும்பினால் அது தங்களுக்கு பெருமை எனக் கருதுகிறாள். உதய குமரனின் இச்சைக்கு மணிமேகலை இசைய வேண்டும். பத்தினி ''தம்குடிப் பிறந்தாள் அல்லள்.'' பரத்தையர் கடமை என்ன? அரச குமாரன் கடமை என்ன என்பதை சித்திராபதி சொல்வதைக் கவனிப்போம.

''நாடவர்காண நல்லாங்கேறி
ஆடலும் பாடலும் அழகுங் காட்டி
கண்டோர் நெஞ்சங் கொண்ட கம்புக்கு
பண்டோர் மொழியிற் பயன்பல வாங்கி
வண்டிற் றுறங்குங் கொண்டி மகளிரை
பான்மையிற் பிணித்து படிற்றுரை **யடக்குதல்**
**கோன்முறை யன்றோ ...''** (2068-75)

மாதவியோ பரத்தைக்கு பிறந்தவளே யொழிய அந்தத் தொழில் புரிந்தவள் அல்லள். ஒருவனையே காதலித்தவள். கோவலனிடம் பொருள் பறிக்கவில்லை. அவன் பிரிந்த பின்னும் இறந்த பின்னும் பிறரொருவனை நினையாதவள். கோவலனைத் தன் காதலனாக வரித்தவள். காதலன் இறந்த வுடனேயே பத்தினிப் பெண்டிர் உயிர் நின்று விடுமாம். அப்படி எனக்கு உயிர் போகவில்லையே; உடன்கட்டை யேறவில்லையே. அடுத்த முறை யான் கைம்மை நிலைதான் ஏற்றுள்ளேன் என்று தன்னையே நொந்துகொள்கிறாள். தன் உயிர் போகவில்லையே என ஏங்கி புத்த சமயம் பற்றித் துறவு பூண்டாள். கோவலன் இறக்கும்வரை இந்திர விழாவில் நடனமாடியுள்ளாள். பரத்தை தொழில் செய்யா விட்டாலும், இல்லறப் பண்பு அவளுக்கு இல்லை. எனினும், அவள் இருமனப் பெண்டு அல்லள், மாதவி நிலையைப் பார்ப்போம்.

'''காதலன்' உற்ற கடுந்துயர் கேட்டும்
போதல் செய்யா உயிபொரு நின்றே

பொற்கொடி மூதூர் பொருளுரையிழந்து
நற்றொடி நங்காய் நாணித் துறந்தேன்'' (110-113)

தன்னுடைய மகள் மணிமேகலையை நேசித்தாள்; பெருமையடைந்தாள்.

மணிமேகலை என் மகளல்லள், கண்ணகியின் மகள். எனவே திருந்தாச் செய்கை, தீத்தொழில் படாள் என்பாள்.

''மாபெரும் பத்தினி மகள் மணிமேகலை அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும் திருந்தாச் செய்கை தீத்தொழில் படா அள்''மேலும் ''நான் புத்தமதத்தில் சேர்ந்துவிட்டேன். இதை சித்திராபதிக்கு செப்பு நீ'' யென வயந்தமாலையிடம் சொன்னாள். மணிமேகலையை அன்போடு அணைத்துக் கொள்கிறாள். சாத்தனாரின் வர்ணிப்பைப் பார்ப்போம்.

''தாமரை தண்மதீ சேர்ந்ததுபோல
காமர் கொள்கையிற் கண்ணீர் மாற்றி'' (159-60)

மணிமேகலை சுதமதியுடன் திரும்பி வரவில்லை என்றவுடன் அவளின் கவலையை ''நண்மணி இழந்த நாகம்'', ''உயிர் இழந்த யாக்கை'' என வர்ணிக்கிறோம்.

''நன்மணி இழந்த நாகம் போன்றவள்
தன்மகள் வாராத் தணத்துயருழப்ப
இன்னுயிர் இழந்த யாக்கையின் இருந்தனள்'' (929-31)

சித்திராபதியும் மாதவியும் ராஜமா தேவியிடமிருந்து மணிமேகலையை இட்டு வந்தனர். ராஜமாதேவி சித்திராபதியை இகழ்ந்தாள். பரத்தைத் தொழில் கேவலம் என்றாள்.

''கள்ளும் பொய்யும் காமமும் கொலையும்
உள்ளக் களவுமென்றுரவோர் துறந்தவை
தலைமையாக் கொண்ட நின் தலைமையில் வாழ்க்கை
புலைமையென்றஞ்சிப் போந்த பூங்கொடி'' (3056-9)

எல்லாக் குற்றமும் விளைவிப்பது, பரத்தைத் தொழில் என்றும், அதனைக் குணமாகக் கொண்டு பரப்பும் ஒரு

கூட்டம் இருத்தல் இழிவு என்றும் நூல் சுட்டுதல் காண்க. சித்திராபதியும் முடிவில் திருத்தினாள் என்று சாத்தனார் செய்யும் சீர்திருத்தம் வரவேற்றற்கு உரியது.

## மணிமேகலை

மாதவி மகள் மணிமேகலையோ திருந்தியவள்; மேலும் சீர்த்திருத்தவாதியும் ஆவாள். அவள் கண்ணகியைத் தாயாக நினைக்கின்றாள். மாதவியும் அவளை அப்படி வளர்க்கிறாள். எனவேதான் இந்திர விழாவில் ஆடவரமாட்டாள். தந்தையாகிய கோவலனும் தாயாகிய கண்ணகியும் பட்ட கஷ்டத்தை நினைந்து கண்ணீர் உகுத்தாள்.

"தந்தையும் தாயும் தாம் நனியிழந்த
வெந்துயர் இடும்பை செவியகம் வெதுப்ப" (152-3)

மணி பல்லவத்தில் தன் தந்தையை நினைத்து அழுதாள்.

"......தந்தையை உள்ளி
எம்மிதிற் படுத்தும் வெவ்வினையுருப்பக்
கோற்றொடி மாதரோடு வேற்று நாடடைந்து
வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து
ஐயா வோவென்றழுவோள்" (9 71-75

வஞ்சி மாநாகருக்குச் சென்று கண்ணகி, கோவலன் சிலையுள்ள கோவிலுக்கு சென்று வணங்கினாள்.

"தணியாக் காதல் தாய் கண்ணகியையும்
கொடைகெழுதாதை கோவலன் தன்னையும்"
(33:96-7)

வணங்கி நின்று குணம்பல ஏத்தித் தொழுதாள். மணிமேகலைக்குப் பெற்றோர் கோவலன் கண்ணகி என்று தூய நோக்கோடு ஆசிரியர் எழுதுகிறார்.

பின்னர் கண்ணகியே மணிமேகலையைப் பார்த்து "பைந்தொடி தந்தை"யென உறுதிப் படுத்துகிறாள். மணிமேகலை ஒருவனை மணந்து மனைவியாய் இல்லறம்

நடத்திப் பின் துறவு தாங்காது குமரித் துறவியாகக் காட்சியளிக்கிறாள். பரத்தையர் தொழிலில் சிறந்தவளான சித்திராபதியின் பேத்தி மணிமேகலையின் காவியத் தலைவியாகிறாள். சாத்தனார் பரத்தை குலம் ஒழிய வேண்டும். பரத்தையர் இல்லறத்தோராக முன்னேற வேண்டும் என்ற சீர்திருத்தவாதி. சித்திராபதியும் முடிவில் திருந்தினாள் என்று சாத்தனார் செய்யும் சீர்திருத்தம் வரவேற்றற்குரியது.

அக்காலத்தில் பரத்தையர் வாழ்ந்தது, அவர்களின் நிலை, குணம் ஆசிரியரின் கருத்து இவை மூன்று பாத்திரங்கள் மூலமாகக் காணக்கிடக்கின்றது.

# 4

## மணிமேகலையில் வர்க்கங்களும் வர்க்கப் போராட்டமும்

தனியார் உடைமை எக்காலத்தும் நிலவி வந்திருப்பதாய் சொல்லும் கூற்றுகளை மார்க்சும், ஏங்கல்சும், லெனினும் வரலாற்று உண்மையின் அடிப்படையில் பொய்யென நிரூபித்துக் காட்டினர். தனியார் உடைமை இல்லாமலேயே மக்கள் நூறாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு வாழ்ந்தார்கள் என்பதை வரலாறு தெளிவுபடுத்துகிறது. அது ஒன்றும் பொற்காலமல்ல. இயற்கைக்கு எதிரான கடும் போராட்டத்தை மனிதன் நடத்தினான். உற்பத்திச் சக்திகள் மேலும்மேலும் வளர்ச்சியடைந்ததைத் தொடர்ந்து புராதன மனிதன் சிறிது சிறிதாய்த் தன்னை விடுவித்துக் கொண்டான். தனிப்பட்ட உறுப்பினர்கள் பல்வேறு உற்பத்தித் துறைகளில் தனித்தேர்ச்சி பெறும்நிலை ஏற்பட்டது. செழிப்பான புல்வெளிப் பிரதேசங்களில் வசித்த குடிகள் பயிர் சாகுபடியுடன் கால்நடை வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். பயிர்ச் சாகுபடி, கால்நடை வளர்ப்பு என பிரிக்கப்பட்டது பெரிய சமூக உழைப்புப் பிரிவினையாகும். இதன் விளைவாகப் பண்டமாற்றம் ஏற்பட்டது. விவசாயத்திலிருந்து கைத்தொழில் பிரிக்கப்பட்டது இரண்டாவது பெரிய உழைப்புப் பிரிவினையாகும். கைவினைஞர்கள்

உற்பத்தி செய்த பொருள்கள் பரிவர்த்தனை செய்யப் பட்டன. கைதிகளாய்ப் பிடிக்கப்பட்டவர்கள் அடிமை களாய் மாற்றப்பட்டனர். கங்கை கொண்ட சோழபுரத்தின் கோவில் ராஜேந்திரன் வேழநாட்டிலிருந்து வந்த கைதிகளின் உழைப்பால் கட்டப்பட்டது என்பர்.

மணிமேகலை காலம் தனியார் உடைமை தோன்றிய காலம். அது அடிமைச் சமுதாய காலமா அல்லது நிலப்பிரபுத்துவ காலமா அல்லது இரண்டுக்கும் இடைப் பட்டகாலமா என்பதை இப்போது தெளிவாகச் சொல்ல முடியாது. முதலாளித்துவ சமுதாயத்துக்கு முந்திய காலம் என்பது தெளிவு.

கைத்தொழில்களின் வளர்ச்சியையும் பரிவர்த்தனையின் அதிகரிப்பையும் தொடர்ந்துதான் நகரங்கள் உதித்தெழுந்தன என்பதை அறிவோம். இவை கைவினைத் தொழிலுக்கும் வாணிபத்துக்கும் மையங்களாய் அமைந் துள்ளன. உற்பத்தி செய்யப்பட்ட பரிமாணம், பிரதேசம் விரிவடைந்தன. இந்நிலையில்தான் வணிகர்கள் தோன்றினர். இவர்கள் பண்டங்களை விலைக்கு வாங்கிச் சந்தைக்கு எடுத்து வந்து விற்பனை செய்தார்கள். சில சமயம் நெடுந் தொலைவு விலகிச் சந்தைகள் அமைந்திருந்தன.

சிலப்பதிகாரத்தில் கோவலன் அவனைச் சேர்ந்த வணிகர்களைப் பற்றி காணக்கிடக்கிறது. மணிமேகலையில் நகரங்களான பூம்புகார், தக்கண மதுரை, வஞ்சி, காஞ்சி முதலியவற்றைப் பற்றி நல்ல வர்ணனையுண்டு.

கச்சி மாநகரைப் பற்றி ஆசிரியர் கூறுவதைக் கவனிப்போம். கச்சி மாநகர் புக்க காதையில் பல விபரங் களைக் காணலாம். எப்பேர்ப்பட்ட கைவினைஞர்கள் வாழ்ந்து வந்தனர், அவர்களுக்கென தனியான வீதி அமைந்துள்ளது என்பதை வர்ணித்துள்ளார். 25 வரிகளில் விளக்கப்பட்டுள்ளது. அதை அப்படியே தருகிறேன். (38.06—38.35)

"கடைகாப் பமைந்த காவலாளர்
மிடை கொண்டியங்கும் வியன்மலி மறுகும்
பன்மீன் விலைஞர் வெள்ளுப்புப் பகருநர்
கண்ணொடை யாட்டியர் காழியர் கூவியர்
மைந்நிண விலைஞர், பாசவர், வாசவர்
என்னுநர் மறுகும் இருங்கோ வேட்களும்
செம்பு செய்ஞ்ஞரும் கஞ்ச காரரும்
பைம்பொன் செய்ஞ்ஞரும் பொன்செய் கொல்லரும்
மரங்கொல் தச்சரும் மண்ணீட் டாளரும்
வரந்தர வெழுதிய ஓவிய மாக்களும்
தோலின் துன்னரும் துன்ன வினைஞரும்
மாலைக் காரரும் காலக் கணிதரும்
நலந்தரு பண்ணும் திறனும் வாய்ப்ப
நிலங்கலங் கண்டம் நிகழக் காட்டும்
பாணர் என்றிவர் பல்வகை மறுகும்
விலங்கரம் பொருஉம் வெள்வளை போழ்நரோடு
இலங்கு மணி வினைஞர் மரீஇய மறுகும்
வேத்தியல் பொதுவியல் என்றிவ் விரண்டின்
கூத்தியல் பறித்த கூத்தியர் மறுகும்
பால் வேறாக எண்வகைப் பட்ட
கூலங்குவை இயகூல மறுகும்
மாகதர்சூதர் வேதாளிகர் மறுகும்
போகம்புரக்கும் பொதுவர் பொலி மறுகும்
கண்ணுழை கல்லா துண்ணூற் கைவினை
வண்ண அறுவையர் வளந்திகழ் மறுகும்
பொன்னுரை காண்போர் தன்மனை மறுகும்
பன்மணி பகர்வோர் மன்னிய மறுகும்
மறையோர் அருந்தொழில் குறையா மறுகும்"

இவ்வாறாக எப்படிப்பட்ட தொழில் செய்பவர்கள் எந்தெந்த வீதிகளில் நகரின்புறத்தே வாழ்ந்தனர் என்பதை ஆசிரியர் எடுத்துக் காட்டுகிறார். இதே முறையில் மற்ற நகரங்களைக் குறிப்பிடுவதையும் காணலாம். என் நோக்க

மெலாம் நகரங்கள் வளர்ந்தன, அங்குக் கைவினைஞர்கள் வாழ்ந்தனர், உற்பத்தியில் ஈடுபட்டனர் என்பதேயாகும்.

அரசன்தான் நிலத்துக்கும் சொத்துக்கும் சொந்தக்காரன். தன்னுடைய இருப்பிடத்தைச் சிறந்த கைவினைஞர்களைக் கொண்டு அமைத்தான். வேந்தனுடைய அரசு வீற்றிருக்கையைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு அறிமுகப்படுத்துகிறார் :

"மகத வினைஞரும மராட்டக் கம்மரும்
அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும்
தண்டமிழ் வினைஞர்தம் மொடுகூடிக்
கொண்டினி தியற்றிய கண்கவர் செய்வினைப்
பவளத்திரள் காற்பன்மணிப் போதிகை ... ...
பைஞ்சேறு மெழுகாப் பசும்பொன் மண்டபம்"

(2243-2251)

இந்தியாவின் பல்வேறு பகுதியிலுள்ள நிபுணர்கள் அரசனுடைய கட்டளைப்படி பணி செய்திருக்க வேண்டும்.

இனி வர்த்தகத்தைப் பற்றியும் வர்த்தகர்களைப் பற்றியும் வந்துள்ள குறிப்புகளைக் கவனிப்போம். தருமதத்தன் தன் மாமன் மகள் விசாகையை காதலிக்கிறான். விசாகையும் மணவினைக்கு ஒத்தனள் என்று ஊரார் பறைசாற்ற, இப்பிறப்பில் இல்லை என கன்னிமாடத் தடைந்தாள். தருமதத்தனும் தக்கண மதுரையை அடைந்தான் அங்கு வாணிகம் செய்து அதிக பொருள் ஈட்டினான்.

"வாணிக மரபின் வருபொருளீட்டி
நீணிதிச் செல்வனாய்" (2728-29)

அவன் நல்லமுறையில் பொருள் ஈட்டியதற்காக அரசன் தர்மதத்தனுக்கு "எட்டி" என்ற பட்டம் கொடுத்தான்.

"..... .... .... .... நீ நில வேந்தனின்
எட்டிப் பூப்பெற்று"

வணிகர்கள் பொருளீட்டி செல்வர்கள் ஆயினர் என்பதும் அரசன் அவர்கட்குப் பட்டம் கொடுத்தனர் என்றும் அறிகிறோம். அவர்கள் இருவருக்கும் போட்டி யிருந்திருக்க வேண்டும். செல்வம் பெருகப் பெருக சமத்துவ மின்மை அதிகரித்திருக்கும். செல்வர்கள் ஏராளமான பணத்துக்கு உடைமையாளர் ஆகினர். ஏழைகள் மேலும், மேலும் இவர்களை அணுகிக் கடன்கள் பெற வேண்டிய தாயிற்று. கடுவட்டி மூலதனம் இவ்விதம் தோன்றுகிறது. மணிமேகலையில் இந்த அம்சத்தை காண்பிக்காமல் விசாகையின் வேண்டுகோளின்படி (மிக்க அறமே விழுத்துணையாவது) தானம் செய்தான். அதிகமாக தானம் செய்தானாம் "ஓங்கிருவானத்து மீனிறும் பலவால்"

இன்னொரு நிகழ்ச்சி வர்த்தகத்துக்காக சென்ற சாதுவனைப் பற்றியது. ஆதிரை நல்லாளுடைய கணவன் சாதுவன். அவன் வர்த்தகத்துக்காகக் கப்பலில் செல்கிறான். கப்பல் சேதமுற நாகர்கள் வசிக்கும் தீவுக்குச் சென்று பின்பு திரும்பி வருகிறான்.

# 5

வணிகர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து பண்டங்களை விலைக்கு வாங்கி அவற்றைச் சந்தைகளுக்கு எடுத்துவந்து நுகர்வாளர்கட்கு விற்பனை செய்தார்கள். சில சமயம் சந்தைகள் நெடுந்தொலைவில் இருந்தன. ஆதிரை நல்லாளுடைய துணைவர் சாதுவன், வாணிகன்.

''ஆதிரை கணவன் ...........
**சாதுவன்** என்போன் தகவிலன் ஆகி
அணியிழை தன்னை அகன்றனன்'' (1734—36)

வர்த்தகத்தில் அதிகமாக பணம் சம்பாதித்தான். சம்பாதித்த பணத்தையெல்லாம் பரத்தையரிடமும் சூதாட்டத்திலும்விரயம் செய்தான்.

''வட்டிறும் சூதிறும் வான் பொருள் வழங்கி
கெட்ட பொருள்........ (1738—39)

எனவே பொருள் ஈட்டுவதற்காக நெடுந்தொலைவு கப்பலில் செல்வது என்று முடிவு செய்து வங்கம் செல்லும் வாணிகர் தம்முடன் சென்றான். கப்பல் உடைந்து, உடைந்த மரத்தைப் பற்றி நாகர்கள் வசிக்கும் தீவுக்கு போய் சேர்ந்தான்.

''வங்கம் போகும் வாணிகர் தம்முடன்
தங்கா வேட்கையின் தானும் செல்வழி
களியிரு முந்நீர் வணிகலன் வெளவ

ஒடி மரம் பற்றி ஊர் திரை ஊதப்ப
நக்கசாரணர் நாகர்வாழ் மலைப்
பக்கஞ் சாந்தவர் பான்மையின் ஆயினன்''
(1742—47)

நாகர்களுடன் சாதுவன் நடத்திய விவாதங்களும் அவன் மெய்ந்நெறி கூறியது அவர்கள் மனந்திருந்தியது முதலியன நம் தலைப்புக்கு முக்கியமல்ல. நாகர்களுடைய குரு சாதுவனுக்கு உதவி செய்ய வேண்டுமென விரும்பிச் சன்மானம் கொடுத்தான். உறு பொருள் கொடுத்தனுப்பினான். கப்பலில் வந்த சந்திரதத்தன் என்னும் வாணிகனுடன் ஊர் திரும்பினான்.

''ஆங்குனக்காகும் அரும் பொருள் கொள்கெனவ்
உரு பொருள் ஈங்கிவை
இவையிவை கொள்கென எடுத்தனன் கொணர்ந்து''
(1800-54)

நாகர்கள் பல முறையில் சேர்த்து வைத்திருந்த பொருள் களைச் சாதுவனிடம் கொடுத்தனர். அவற்றை எடுத்துக் கொண்டு மரக்கலத்தில் ஊர்வந்து சேர்ந்தான். இங்கு வாணிபத்துக்காகச் சென்ற சாதுவன், சந்திரதத்தன் பற்றி நாம் அறிகிறோம்.

வர்த்தகத்தில் ஈடுபட்ட மாசாத்துவான் (கோவலனின் தகப்பனார்) பலவித தான தருமங்கள் செய்ததாகவும், அவனும் துறவு பூண்டதாகவும், தன் பாட்டனாரை மணிமேகலை சந்தித்ததாகவும் ஓர் நிகழ்ச்சியுண்டு.

நடுக் கடலில் கப்பல் தத்தளித்துக் கொண்டிருந்தபோது தனக்கு மணிமேகலைத் தெய்வம் உதவி செய்ததால் தன் மகளுக்கு மணிமேகலை என்ற பெயர் வைக்கப்பட்ட தாகவும் ஓரிடத்தில் காணலாம்.

வர்த்தகத் துறையில் ஈடுபட்ட மாசாத்துவான், கோவலன், தருமதத்தன், சாதுவன், சந்திரதத்தன்

போன்றவர்களைப் பற்றியெல்லாம் மணிமேகலையில் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம்.

வணிகர்களின் விற்பனைகளின் பலனாய் வாணிப மூலதனம் தோற்றம் எடுக்கிறது. உற்பத்தியும் பரிவர்த்தனையும் ஓங்க ஓங்க சொத்துரிமையிலான சமத்துவமின்மை அதிகரிக்கிறது. செல்வந்தர்கள் பெருந்தொகைகளிலான பணத்துக்கும் உடைமையாளர் ஆகின்றனர். ஏழைகள் மேலும் மேலும் அதிகமாய் இவர்களை அணுகிக் கடன்கள் பெற வேண்டியதாகிறது. கடுவட்டிக் கடன்களால் சிலருக்குப் பெருமளவில் துரவ்யம் கிடைக்கச் செய்கிறது. ஏழைகள் கட்டுண்டு கிடக்கின்றனர். இம்முறையில் கடுவட்டி மூலதனமும் தோற்றமெடுக்கிறது. மணிமேகலையில் இந்த இரு அம்சங்களையும் மறைமுகமாகத்தான் காண முடிகிறது.

ஆனால் தங்களிடம் உள்ள பணத்தைப் பரத்தையருக்கும், சூதாட்டத்திலும், விரயம் செய்தனர் என்றும், தானதருமம் செய்தனர் என்றும் காணக்கிடக்கிறது. அரசனுக்கும் கடன் கொடுத்தனர். உதாரணமாக மாசாத்துவான், கோவலன் முன்னோர்கள் அவர்களுக்கு பணம் கொடுத்து நகரத்தை வளர்க்க உதவி செய்ததாகவும் காணக் கிடக்கிறது.

''நின் பெருந்தாதைக் கொன்பது வழி முறை
முன்னோன் கோவலன் மன்னவன் தனக்கு
தன்னாள் இயன்ற தனம் பல கோடி
எழுநாளெல்லையுள் இரவலாக்கித்து ..'' (3900-3906)

இன்னொரு உதாரணத்தைப்பார்ப்போம். விசாகையின் அத்தை மகனான தருமதத்தன் மதுரை சென்று வாணிக மரபின் பெரும் பொருளீட்டிச் செல்வனாய் ஊர் திரும்புகிறான். விசாகை யாக்கையும் செல்வமும் நிலையற்றது, ஆகவே தான தருமம் செய் என உபதேசிக்கின்றாள்.

"இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான் பெரும் செல்வமும் நில்லா
புத்தேளுலகம் புதல்வரும் தாரார்
மிக்க அறமே விழுத்துணையாவது" (27 52-27 55)

எனவே தானம் செய்யென மாமன் மகள் கட்டளை விடுகிறாள் உடனே தருமதத்தனும் அவளுடன் சேர்ந்து செய்த நல்லறம் விவரிக்க முடியாததாம். வானத்தில் நக்ஷத்திரங்கள் எத்தனை உளவோ, அம்மாதிரி பலவாறாக தான தருமம் செய்தான்.

"மாமன் மகள் பால் வான் பொருள் காட்டி
ஆங்கவன் அவளுடன் செய்த நல்லறம்
ஓங்கிருவானத்து மீனிறும் பலவால்" (27 57-27 59;

இவ்வாறாக வணிகர்களுடைய பங்கு என்ன என்பதை மணிமேகலையில் பரவலாக புதைந்து கிடப்பதைக் காண்கின்றோம்.

# 6

## பசிப்பிணி

பசி என்பது ஜீவராசிகளுக்கு, குறிப்பாக மானிடர்கட்கு இயற்கை. அது தீர்க்கப்படவேண்டும். ஆகவே உணவு கொடுக்கப்படவேண்டும். பசியும் அதைத் தீர்க்கும் வழியும் மிக கேந்திரப் பாத்திரத்தை இந்த இலக்கியம் பூராவிலும் தாங்கிஉள்ளது. இதை எப்படிச் சாத்தனார் அணுகியுள்ளார் என்பதைக் கவனிக்கலாம்.

'பசி எனும் தீப்பிணி' எனக் குறள் குறிப்பிட்டுள்ளது உண்மைதான். ஆனால், பசியைப் பிணி என்று திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார் சாத்தனார். அதை மேலும் மேலும் வளர்ப்பதைப் பல கட்டங்களில் பார்க்கலாம். பசியின் கொடுமையைப் பல உதாரணங்களைக் கொண்டு விவரிக்கின்றதைப் பார்க்கலாம்.

பசிப்பிணியின் கொடுமையைப் பற்றித் தீவதிலகை மூலம் அறிகிறோம்.

> "குடிப்பிறப்பு அழிக்கும்; விழுப்பம் கொல்லும்
> பசிப்பிணி என்னும் பாவி"

அது தீர்த்தோர் புகழை என் நாவினாற் சொல்ல இயலாது.

''மண்திணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே''

உணவளித்தவரே உயிரளித்தவராகும். மந்திரப் பாத்திரம் கோமுகியிலிருந்து மணிமேகலை கையில் கிடைக்கிறது.

பெரும் பசியுள்ளவர்கள் முகம் கண்டு அமுது சுரக்க வேண்டும். ஈன்ற சேய் முகம் கண்டு தீம்பால் சுரக்கும். இனிய தாய் முலைபோன்று பசிமுகம் கண்டு இந்த மந்திரப் பாத்திரத்திலிருந்து உணவு சுரக்க வேண்டும். இதுவே தீவதிலகையின் வேட்கையாகும்.

அறவண அடிகள் சொல்லுவார்:

''மக்கள் தேவர் என இருசாரர்க்கும்
ஒத்தமுடிவின் ஓர் அறம் உரைக்கேன்
பசிப்பிணி தீர்த்தல் ...''

பிச்சை எடுத்தல் என்பது தவறல்ல. ஆபுத்திரன் மதுரையில் மாசற்ற மனைகளில் பிச்சை எடுத்தான். குருடர், செவிடர், முடவோர், நோயாளர், அனாதைகள் இவர்களை அழைத்து உண்ணச் செய்து மிச்ச உணவைத் தான் உண்டான். இரவில் அந்தப் பிச்சைப் பாத்திரத்தைத் தலைக்கு வைத்துப் படுத்தான். பின்பு சிந்தாதேவி ஆபுத்திரன் முன்பு தோன்றி,

''அன்பா எழுந்திரு, இதைக் கொள். இது அற்புதத் திருவோடு. நாடு வறண்டாலும் இந்த ஓடு வறளாது. நாடெல்லாம் வறுமை புகுந்தாலும் இந்த ஓடு வறுமையுறாது. இதில் நிறையும் உணவிற்கு குறைவிராது. வாங்குவோர் கைதான் அலுத்துப் போகும். இது வழங்குதல் அலுக்காது, இது அழியாத் தன்மையது''

ஆபுத்திரன் இந்திரனிடம் சொல்வான்,

''வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்
திருந்து முகம் காட்டும் என தெய்வகடிஞை''

அமுத சுரபியில் உணவு சுரப்பதற்காக ஒரு பத்தினிப் பெண்ணிடம் பிச்சை எடுக்க வேண்டும். அவள்தான் ஆதிரை நல்லாள். ஆதிரை பிச்சையிட்ட சமயம் புனையா ஓவியமாக நின்ற மணிமேகலையிடம் உணவையிட்டு சொல்வாள்.

> ''பாரகம் அடங்கலும 'பசிப்பிணி அறுக' என
> ஆதிரை இட்டனள் ஆருயிர் மருந்து'' (107)

மணிமேகலையின் அமுதசுரபியில் அடிப்படையான உண்மையொன்று புலப்படும். அதுதான் அள்ளிக் கொடுத்தால் வெள்ளம்பெருகும். ஆபுத்திரன் தனது பிச்சைச் சோற்றையும் பங்குவைத்து உண்கிறான். கலைமகள்தரும் அமுதசுரபி கலைச்செல்வம் போல வற்றா நிறைவு கலைச் செல்வத்தைக் கொண்டு அன்புடன் உழைத்து, உழைத்த பயனை அறவுணர்வுடன் பங்கு வைத்துண்டால் நாட்டில் வளம் பெருகும்; அன்னம்பாலிக்கும்; பஞ்சம் இராது. நாட்டு விளைவையும் துறவுப் பான்மையுடன் துய்க்க வேண்டும். ஈந்து உவக்க வேண்டும். மணிமேகலை கலைச்செல்வி கலையைக் காசாக்காமல் துறவுபூண்டு அருள்வழிச் சென்றாள், அவளுக்கு சிந்தா தேவியின் அமுதக்கலையம் கிடைத்தது. அதில் கற்புள்ள மனையறச் செல்வியின் உணவு வந்ததும் அது பொங்கிப் பெருகியது. மணிமேகலை தானே உண்ண நினைத்திருந்தால் அப்படி நேர்ந்திருக்காது என ஆசிரியர் மறைமுகமாக நமக்கு உரைக்கின்றார்.

காயசண்டிகையானவள் 'யானைத்தீ' என்னும் கொடும் பசியால் துன்புறுகிறாள். அமுதசுரபியிலிருந்து உணவு பெற்று உண்டவுடன் அவளுடைய பசிநோய் தீர்ந்தது. அவளுடைய பசி நீண்டகாலம் பீடித்திருந்த நோய் போன்றதாகும் எவ்வளவு மகிழ்வெய்தியிருப்பாள் யோசித்துப் பாருங்கள். அடுத்து அவளுடைய வாழ்வில் கஷ்டம் ஏற்பட்டதற்கு மணிமேகலை பொறுப்பல்லள்.

உதயகுமரனுக்குப் பயந்து காயசண்டிகை உருவி லிருந்த மணிமேகலை சிறைச்சாலையில் உணவளித்தாள்.

சிறைக்காவலர்கள் வியந்து அரசனுக்குத் தெரிவித்தனர். பாத்திரத்தின் பெருமையை எடுத்துச் சொன்னாள்.

''தெய்வம் தந்தது திப்பியம் ஆயது
யானைத் தீ நோய் அரும்பசி கெடுத்தது
ஊன் உடைய மாக்கட்கு உயிர் மருந்து இது'' (2288-90)

28 தினங்கள் இந்திர விழா நடக்கவிருக்கிறது. மேற்படி விழாவுக்காக முரசறைபவன் பல வேண்டுகோள்களை விடுத்துக் கடைசியில் எப்படி முடிக்கிறான் பாருங்கள்.

''பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்''
(70-72)

அரசனுடைய கடமைகள் என்ன என்பதை மணிமேகலை கோடிட்டுக் காட்டுகிறாள். மூன்று முக்கிய கடமைகளில் முன்னிற்பது உண்டி கொடுத்தலாகும். எனவே தன் குடிகளின் பசியை தீர்க்க வேண்டியது தலையாய கடமையாய.

மணிமேகலை காஞ்சிபுரம் செல்கிறாள். இக்காவியத்தில் புகார், மதுரை, வஞ்சியுடன் காஞ்சியையும் ஆசிரியர் கொண்டு வந்திருப்பது கவனிக்கத்தக்கதாகும். அது ஓர் இறுதி அறிவிப்பு (Climax) ஆக அமைகிறது. அங்குப் பலருக்கு அன்னமிட்டுவிட்டு உலகப் பற்றிலிருந்து விடுதலை பெறுகிறாள்.

காஞ்சியல் இந்தியாவிலுள்ள 18 மொழி பேசக்கூடிய மக்களும் வந்து கூடுகின்றனர்.

''மொய்த்த மூவறு பாடைமாக்கள்'' அவர்களில் பசி நோயுற்றோர் இன்னும் மற்றோர்க்கும் (மன்னுயிர் அடங்கலும்) உணவு நல்கிறாள். அது அவர்களுக்கெல்லாம்

''அருந்தியோர்க்கெல்லாம் ஆருயிர் மருந்தாய்!''
(100)

அமைந்தது. இந்தக் கட்டத்தில்தான் ஆசிரியர் அமுத சுரபியின் குணத்தைக் கச்சிதமாக வர்ணிக்கிறார்.

'பங்கயப் பீடிகை பசிப்பிணி மருந்தெனும்
அங்கையின் ஏந்திய அமுதசுரபி' (3994-5)

பின்னர் ஆசிரியர் மணிமேகலையை வழியனுப்புகிறார். அப்போது அவளுக்கு ஒரு பட்டமும் கொடுக்கிறார். அது தான் 'பசிப்பிணி தீர்த்த பாவை' (40.11)

எனவே, இப்பகுதியில் பிணி என்ன என்பதையும். அதற்கு மருந்து என்ன என்றும் ஆசிரியர் தன் கண்ணோட்டத்தில் அணுகுகிறார். பசியைப் பிணியென, முடிவுசெய்து, அது ஒழிய வேண்டும் எனச் சாத்தனார் சாடுவது என் மனதை மிகவும் கவர்ந்துள்ளது.

சுவாமி விவேகானந்தர்கூட குறிப்பிடுகையில் பசியோடு இருப்பவன் சிந்திக்க முடியாது, அவனுக்கு உணவு கிடைக்க உத்தரவாதம் வேண்டும் என்கிறார்.

'பசிப்பிணி அறுக' என்ற ஆதிரையின் முத்ரா லாக்கியத்துடன் இப்பகுதியை முடிக்கிறேன்.

# 7

## மதம் - சமயம்

மணிமேகலையானது புத்தமதத்தைப் பிரச்சாரம் செய்வதற்காக எழுதப்பட்ட நூல் என்பதை நாம் அறிவோம். அதன் ஆசிரியரான சாத்தனாரும் மேற்படி மதத்தில் ஈடுபாடு உள்ளவராக இருந்திருக்க வேண்டுமென நம்பலாம். 'மதம்' இதுதான் உண்மை என்று அருதியிட்டுக் கூறும். ஆனால் "Philosophy" (தத்துவ விசாரணை) உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் எனக் கூறும். இரண்டுக்கும் இதுதான் பிரதான வித்தியாசமென நான் கருதுகிறேன். அறிஞர்கள் மதத்தைப்பற்றி கூறியதைக் கவனிப்போம். "மதமானது படும் கஷ்டத்துக்கு எதிர்ப்பாகும்; மத எதிர்ப்பு ஆரம்பத்தில் உண்மையான எதிர்ப்புதான்; ஹிருதயமற்றவர்கட்கு ஹிருதயத்தையும்; ஆத்மாவில் நம்பிக்கை இல்லாதவர்கட்கு ஆத்மாவையும்; உணர்வில்லாத உலகுக்கு உணர்வையும் கொடுக்கிறது. சுருங்கச் சொன்னால் மக்களுக்கு அபின் சாப்பிட்ட உணர்வைக் கொடுக்கிறது"

மழைக்கு அதிபதி என்று கருதப்பட்ட இந்திரனுக்கு காவிரிப்பூம்பட்டினத்தில் 28 நாள் விழா எடுக்கப்படும் நிகழ்ச்சி மணிமேகலையில் வருகிறது. பல சமயவாதிகளும் வந்து சூழ்மியிருப்பார்கள். சிவபெருமான் முதல் சதுக்க பூதம் ஈறாக உள்ள எல்லாத் தெய்வங்களுக்கும் திருவிழா

செய்யுங்கள். ஆறு அங்கங்களையும் அறிந்த அந்தணர்களே அந்தத் தெய்வங்களின் வெவ்வேறு சிறப்பிற்குத் தகுந்தபடி வெவ்வேறு காரியங்களைச் செய்யுங்கள்—நீங்கள் பல கலைகளைப் பற்றி ஆறாயுமிடமான பட்டி மண்டபத்தில் அமர்ந்து உங்கள் கொள்கைகளைக் கூறுங்கள்—''

''எட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்து பாங்கு அறிந்து ஏறுமின்?''

மணிமேகலை வஞ்சிமா நகர் செல்கிறாள். பல சமயக் கணக்கர்கள் தம் தம் சமயத்து நுண் பொருள்களை உரைத்தனர், அவற்றை அறிந்து கொள்கிறாள். அவர்கள் அளவைவாதி, சைவவாதி, பிரம்மவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி முதலியவர்களாம்.

அக்காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள புராதனக் கூட்டமைப்பு சிதைந்து வர்க்கப் பாகுபாடுகள் ஏற்பட்டன. கிரேக்க நாட்டிலும், சீனாவிலும், இந்தியாவிலும் சில தத்துவங்கள் உருவாயின. மதம் நடக்கும் காரியங்களுக்கு நியாயம் கற்பித்தது. கடவுளின் கடாட்சத்தால் சிலருக்கு வசதியுண்டாகிறது என்று போதித்தது. பொருள் முதல் கருத்தோட்டம் எதேச்சையாகத் (spontaneous materialism) தோன்றி வளர்ந்து மதவாதங்களை எதிர்த்துள்ளது. இந்தியாவில் பல்வேறு பொருள் முதல்வாத சிந்தனைகள் தோன்றின. சில வேற்றுமைகளும் உண்டு. நிலம், நீர், தீ, வளி என்ற நான்கு பூதங்களே மூலப் பொருள் என்றனர், லோகாயதர்கள். பிரித்தற்கரிய மூலப்பொருளைச் சாங்கியர்கள் மூலப் பிர்கிருதி என்றனர். மூலப் பொருள் அணுக்களால் ஆனது என்றனர், நியாய வைசேடிகர்கள். வைசேடிக்வாதி சொல்வார்:

''பொய்தீர் பொருளும் குணமும் கருமமும்
சாமானியமும் விசேடமும் கூட்டமும்
ஆமாறு கூரும்'' (3730-32)

அதாவது பொய்மை தீர்ந்த பொருளும், குணமும், கருமமும் சாமானியமும், விசேடமும், கூட்டமும் என்று சொல்லப்படும் ஆறு கூறுபாட்டினை உடையன **பொருள்களாம்.**

"பொருளும் குணமும் கருமம் இயற்றற்கு
உரிய" (3745-46)

அதாவது பொருளும் குணமும் ஆகிய இரண்டும் தொழிலைச் செய்வதற்கு உரியனவாம்.

"போவதும் நிற்பதும் எல்லாப் பொருள்கட்கும் பொதுக்குணம் ஆதலினால் இறத்தலும் இருத்தலும் அப் பொருளின் **சாமான்யமாம்.** இனி பூதவாதி சொல்வதை சற்று கவனிப்போம்.

தாதகிப் பூவும் கட்டியும் இட்டு
மற்றும் கூட்ட மதுக்களி பிறந்தாங்கு
உற்றிடு பூதத்து உணர்வு தோன்றிடும்
அவ்வுணர்வு பூதத்து அழிவுகளின்
வெவ்வேறு பிரியும், பறையோசையிற் கெடும்"

ஆத்திப் பூவையும் கருப்பட்டியையும் இன்னும் சில பொருள் களையும் சேர்த்தால் களிப்புத் தரும் மது தோன்றுகிறது. அதேபோல் பூதங்களிடத்தின் கூட்டால் உணர்வு பிறக்கும். அழியும்போது வெவ்வேறாகப் பிரிந்து விடும். எப்படி யெனில் பறையோசையைப் போல், எழுந்த ஓசையானது சென்று சென்று தேய்ந்து இறுதியில் கெடுவதுபோல.

**பொருள் முதல் வாதிகள்** இருவரைப் பற்றி மணி மேகலையில் காணக்கிடப்பதை ஈண்டுக் குறிப்பிட் டுள்ளேன். பவுத்தர், சாக்கியர், சாங்கியர், உலோகாயத்து சாருவாகர்கள், சித்தர்கள் முதலியவர்களை பொருள் முதல் வாதிகள் எனலாம்.

"உணர்வும் ஆன்மாவும் பொருளால் தோன்றுவது. உணர்வும் ஆன்மாவும் பொருளைத் தோற்றுவிக்காது.

பொருளே முதல், பிற அடுத்தவையே. உலக தத்துவத்தில் Materialism & Idielisim பிரிக்கும் எல்லைக்கோடு இது.''

**புத்தம்** பிரத்யட்சம் (புலன் அறிவு) ஏற்றுக்கொள்கிறது. அத்துடன் புத்தி (காரணகாரீய அறிவு)யையும் அதை யொட்டிய செயல்-பயன் (தர்மம்) தொடர்பையும் ஏற்றுக் கொள்கிறது. பின்னர் புத்தனையே கடவுளர்க்கு சூன்யக் கண்ணோட்டத்தால் மறைந்தது எனலாம்.

இந்தக் கட்டுரையின் துவக்கத்திலேயே மதம் ஓர் எதிர்ப்பு (Protest) ஆகத் தோன்றியது என்று குறிப்பிட்டுள்ளேன். இங்கே புத்தமதம் ஜாதீய உயர்வை சாடியுள்ளது. ஆபுத்திரன் தன் தாயாகிய சாலீயைக் கேவலமாகப் பேசிய மாமறைமாக்களுக்கு ஆணித்தரமான பதில் இறுத்தான்.

''முதுமறை முதல்வன் முன்னர் தோன்றிய
கடவுட் காணிக்கை காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்'' (1520-22)

பெரிய வேதங்களை உணர்ந்த அந்தணர்கள் வருகின்ற குல மரபினைக் கேளுங்கள்: பழைய வேதங்கட்கு முதல்வனாகிய பிரமனுக்கு எதிரே தோன்றியவளான தேவதாசியாகிய த்லோத்தும்மையின் காதற் சிறுவர்கள் அல்லவோ. முதல்வர் எனப் போற்றுகிற வசிட்டரும் அகத்தியரும் எனவே ''சாலிக்கு உண்டோ தவறு'' என்றான்.

பௌத்தம் முதலில் க்ஷத்திரியர்களுக்கு கேடயமாகவும் பின்னர் வர்த்தகர்கட்கு கேடயமாகவும்அமைந்தது. சமுதாய மறுமலர்ச்சிக்காகவும் நின்றது. பரத்தையர்கட்குச் சமூகத்தில் அந்தஸ்து கிடையாது. புத்தசங்கத்தில்சேர்ந்தால், அந்தஸ்து கிடைக்கிறது உதாரணமாக, மாதவி, சுதமதி, மணிமேகலை சங்கத்தில் சேர்ந்ததால் விமோசனம் கிடைத்தது (பவுத்தத்தில் உள்ள காரணகாரிய வாதத்தைப்

பற்றி பின்னால் விபரமாக விவரிக்கலாமென நினைக்கின்றேன்).

யக்ஞ நாகரீகம் மறையத் துவங்கியுள்ளது. அன்று இருந்தது பிராமண தானம்தான், ஆனால் மணிமேகலையில் வித்யா தானம், அன்ன தானம், மருத்துவ தானம், அடைக்கல தானம் நடைமுறையில் வருகின்றன. அமுதசுரபி கண்ணோட்டமே அன்னதானம்தானே. சுதமதியின் தகப்பனாருக்கு மருத்துவதானம் செய்தனர். சுதமதி, மாதவி போன்றோருக்கும் மணிமேகலைக்கும் அடைக்கலம் கிடைத்தது.

பரத்தையின் பேரில் அரச குமாரனுக்கு ஒரு கண்ணென்றால் பெருமையாம். ஆனால் மணிமேகலை உதயகுமரனை நிராகரித்தது ஒரு முக்கிய நிகழ்ச்சி.

அரசியின் அடக்கு முறையை எதிர்த்து வெற்றி காண்கிறாள் மணிமேகலை.

# 8

புத்த தர்மத்தைப் பற்றிப் படிப்படியான நிலைகளை ஆசிரியரின் கருத்துப்படி எழுதியுள்ளேன். அதை ஓர் முடிவுக்கு கொண்டுவர உத்தேசித்துள்ளேன். பின்னர் பௌத்தம் பற்றிய விமர்சனம் எழுதுவதற்கு உதவியாக அமையும் என்றும் நம்புகிறேன். இக்கட்டுரையில் நான்கு நயன்களைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளேன்.

நான்கு நயங்கள் யாவை?

1. ஒற்றுமை நயம்.
2. வேற்றுமை நயம்.
3. புரிவின்மை நயம்.
4. நல்ல இயல்பு நயம்.

காரணமும் காரியமும் ஆகி நிற்கும் பொருள்களை வேற்றுமையைப் பற்றிக் கருதாது, காரணமாகவோ காரியமாகவோ கொள்ளுதல் ஒற்றுமை நயம் ஆகும்.

காரண காரியங்களை ஒன்றாக உணராது, தனித்தனியே வேறுபடுத்தி உணர்ந்து கொள்ளுதலை 'வேற்றுமை நயம்' என்று கொள்ளலாம்.

முற்றவும் கெடுதல் அல்லாத முதற் பொருள், காரியப் பொருள் ஆகியவற்றிற்கு பொருந்தியுள்ள காரணமானது "உதவு காரியத்தை தருதற்குள்ளம் தானிலை" என்பது "புரிவின்மை நயம்"

"நெல் வித்தகத்துள் நெல்முளை தோற்றல் எனல்
நல்ல இயல்பு நயம்"

நெல் வித்தினுள்ளாக நெல்முளை தோன்றும் என்பது "நல்ல இயல்பு" நயமாகும்.

இந்த நான்கு வகை நயங்களாலும் நாம் கொள்ளும் பயன்களெல்லாம் காரண காரியமாகத் தொக்க பொருள்களே அல்லாது அஃதன்றி தனியே ஒன்றுமில்லை.

"அப்பொருளிடைப் பற்று ஆகாது"
—வினை முதலியவற்றை செய்வானோடு செய்கைக்கு ஒரு கோட்பாடு இல்லை.
— காரணத்தினாலே ஒரு காரியம் பிறக்கும்
—காரண காரியமும் அன்று அஃதல்லாததும் அன்று என்பதும் முறையாக தொகையினாலே நான்காய் விரிந்தன.

**வினா விடை நான்கு**

அவையாவன :

1. துணிந்து சொல்லல்.
2. கூறிட்டு மொழிதல்.
3. வினாவின் விடுத்தல்.
4. வாய் வாளாகை.

**துணிந்து சொல்லல்:**

"தோன்றியது கெடுமோ? கெடாதோ என்றால் 'கேடுண்டு' என்று **துணிந்து சொல்லலாகும்**"

**கூறிட்டு மொழிதல் :**

"செத்தான் பிறப்பானோ? பிறவானோ? என்று
செய்யின்"

அதன் பற்றுக்களை விட்டவனோ? விடாதவனோ? எனப் பகுத்து விட்டவனாயின் பிறவான் எனவும், விடாதவனாயின்

பிறப்பான் எனவும் கூறு செய்து விடை கூறுதல் கூறிட்டு மொழிதல்.

**வினா விடுத்தல்:**

"முட்டை முந்திற்றோ பனை முந்திற்றோ"
என ஒருவன் கேட்டால்.

"எம்முட்டை, எப்பனை"

என தெளிவுபடுத்துக எனக் கேள்வி கேட்டால் அது வினாவினால் விடையிறுத்தல் ஆகும்.

**வாய் வாளாமை:**

"ஆகாயப் பூ பழையதோ புதியதோ"
என்று ஒருவன் கேட்டால் எவ்வகை விடையும் கூறாதே இருந்துவிடல் போல்வது வாய்வாளாமையாகும்.

இறுதியாக ஆசிரியர் முடிக்கும் பாங்கும் சிறப்பாக வுள்ளது.

பொருள்களை நிலையில்லாதனவென்றும் துன்பந் தருவனவென்றும் ஆராய்ந்து பற்றினை அறுத்திடல் வேண்டும்.

நான்குவித தியானங்கள்:

மைத்திரி பாவனை.
கருணா பாவனை.
முதிதை பாவனை.
உபேட்சா பாவனை.

பாவனை என்பது தியானம். மைத்திரி பாவனை உயிர்கள் அனைத்தின்பாலும் அன்புடைமை கொண்டு அவற்றின் நலனுக்காக தியானித்தல். கருணாபாவனை என்பது உயிர்கள்பால் இரக்கங் கொண்டு வறியவர்; வளமுடையவர்கள் ஆகுக என தியானித்தல்.

முதிதை பாவனை என்பது ஆக்கமுடையவர்கள் அதிர்ஷ்டம் நீங்காதிருக்க வேண்டுமென்றும் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய நல்வினைப் பயனை அடையவென்றும் பாவித்தல்.

உபேட்சாபாவனை— எல்லா உயிர்களையும் சமமாகப் பாவித்தலும் விருப்பு வெறுப்பின்றி இருத்தலும்.

இதைத்தான் ஞான தீபம் என ஆசிரியர் முடிக்கிறார்.

இந்நூல் வடமொழியிலுள்ள "நியாயப் பிரவேசம்" என்ற நூலைத் தழுவியதாகவுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளேன். புத்த தருமத்தின் மூலாதாரமான கொள்கைகள் நான்கு. அவை துக்கம், துக்ககாரணம், துக்கநிவாரணம், துக்க நிவாரண மார்க்கம். இவற்றை நான்கு வாய்மைகள் என்று குறிப்பிட்டுள்ளனர். ஆசிரியரும் விவரித்துள்ளார். துக்க நிவாரணத்துக்கு முதன்மையாகக் கூறப்படுவது அஷ்டாங்க மார்க்கம். அது 8 படிகளுள்ளது. சத்தியத்தை நாடிச் செல்லும் மனிதன் சோர்வுறாமல், மயக்க முறாமல், முன்னேறிச் செல்வதற்கு அப்படிகள் உறுதுணையாக விளங்குபவை. அவையாவன :

நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்விளக்கம், நற்கடைப்பிடி, நல்லமைதி. இந்த 8 முறைகளைக் கையாள வேணும்.

"கள்ளும்பொய்யும் காமமும் கொலையும் உள்ளக் களவும்"

இவ்வைந்தும் மணிமேகலையில் ஐவகை சீலம் எனப் பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. இவ்வைந்தையும் செய்தல் பஞ்சமாபாதகம்; கைவிடுதல் பஞ்சசீலம்; பின்னர் 10தீவினைகளைப் பட்டியல் போட்டுக் காட்டியுள்ளார். 10 தீமைகளைக் கைவிட்டுப் பஞ்ச சீலத்தைப் பின்பற்றி உயர்ந்த பிறவி அடையலாம். பின்னர் ஒன்றுக்கொன்று தொடர்புடைய 12 நிதானங்களையும் அவற்றை மாற்றும் வழியையும் விரிவாக மணிமேகலையில் கண்டோம்.

புததரையும் தன்மத்தையும் சங்கத்தையும் வழிபட வேண்டும். முத்திற மணிகளை மும்முறை கூறி வணங்க வேண்டும்—புத்தம் சரணம், தர்மம் சரணம், சங்கம் சரணம்—

ஆன்மா பற்றிய புத்தச் கருத்துகட்கும் இந்து மத கருத்துக்கும வேறுபாடு உண்டு. சாதுவன் நாகர்களுக்கு சொன்ன அறிவுரையுடன் இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

"பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்
நல்அறம் செய்வோர் நல்உலகு அடைதலும்
அல் அறம் செய்வோர் அருநாடு அடைதலும்
உண்டு………………"

# 9

## சமயம்— அளவை – தர்க்கம்

அளவை வாதம் தர்க்கவாதமான **Logic** (லாஜிக்) போன்றது. அதை ஒரு பகுத்தறிவுவாதக் கரு **(Rationalist)** என்றும் கூறலாம். காரண காரியவாதம் வருவதால் ஓர் இயக்கவியல் கண்ணோட்டம் தோன்றுகிறது. மேல்நாட்டில் இயக்கவியல் மூலத்துக்கு கார்ல் மார்க்ஸ், ஹெகல் **(Hegal)** ஐ மூலபுருஷனாகக் கொண்டார். மேற்படி கருத்துக்கள் அளவையில் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

அளவைவாதி தொடக்கத்திலேயே வேத வியாசனும், கிருத கோடியும், சைமினியும் தத்தம் பண்புற அளவைகளை எடுத்துரைத்தனர் என்கிறார். பொருள்களின் உண்மைத் தன்மையைக் காட்சி, கருதல், உவமம், ஆகமம், அருத்தா பத்தி, இயல்பு, ஐதிகம், அபாவம், மீட்சி, சம்பவம் ஆகிய பத்தால் அறிந்துகொள்ள வேண்டும். மெய், வாய், மூக்கு, காது, கண் என்ற ஐம்பொறிகளால் காட்சி கிட்டி தன்மையை அறிவதாகும்.

''கண்ணால் வண்ணமும், செவியால் ஓசையும்
—மூக்கால் நாற்றமும் நாவால்
சுவையும் மெய்யால் ஊறும்....''

இவற்றைக் கண்டும் கேட்டும் உயிர்த்தும் உண்டும் உற்றும் இயல்புகளைப் பழுதற அறிந்து பொருள் உண்மை

அறிதலும் ஐயமின்றி அவையவை சார்ந்துள்ள தேசம், நாமம், சாதி, குணம், தொழில் ஆகியவற்றினாலே சிறப்பித்து அறிந்து கொள்வதே **காட்சி** அளவை என்பதாகும்.

**கருத்து** அளவையை அனுமான அளவை எனலாம். அது 3 வகைப்படும். அதாவது பொது, எச்சம், முதல் என்பதாம். மணிமேகலையில் பொது அளவை, எச்ச அளவை, முதல் அளவைக்காக உதாரணங்களைக் காண்போம். மதம் பொருந்திய யானையின் காட்டகத்தே எழும் பிளிறலைக் கேட்ட ஒருவன் "அவ்விடத்தே அழகிய யானை என்று கண்டு" என உணர்தல் போன்றதாகும். எச்ச அளவை என்பது வெள்ளமானது வந்து தோன்றியதாகிய ஏதுவினைக் கொண்டு, ஆற்றின் மேற்பகுதியிலே மழை பெய்திருத்தலை உறுதியாக உரைப்பது போன்றது ஆகும். முதல் அளவை என்று சொல்லப்படுவது வானத்தே கருக்கொள்ளுகின்ற மேகத்தினைக் கண்டு இம்மேகங்கள் மழை பெய்யும் என்று சொல்வது போன்றதாகும்.

இந்த 3 வகை ஏதுக்கள்

"ஒன்று முக்காலம்
தன்னில், சார்ந்துள தாகி
மாண்ட உயிர் முதல், மாகின்றாகி
காண்டற் பொருளால், கண்டிலது உணர்தல்"

இவைதவிர மற்றய 8 அளவைகள் பற்றிப் பின்னொரு முறை குறிப்பிடலாம். இறுதியாக ஒரு தொகுப்புக் கொடுக்கிறார். அதை நல்லதோர் தத்துவ தொகுப்பாகப் பார்க்கிறேன்.

"இப்பெற்றிய அளவைகள் பங்குறும் உலோகாயதமே பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம், ஆம்சமயவாசிரியர் தாம் பிருகற்பதி, சிவனே, கபிலன், அக்கபாதன், கணாதன், சைமினி...."

பிறகற்பதி காட்சியளவை மட்டுமே கொண்டு உலோகாயத்தனை வகுத்தார். புத்தர் காட்சியும்

அனுமானமும் ஆகிய இரண்டையும் கொண்டு பௌத்தத்தை வகுத்தார். கபிலர் அவற்றுடன் ஆகமத்தை கூட்டி மூன்றாகக் கொண்டு சாங்கியத்தை உரைத்தார். அக்கபாதர் அம்மூன்றுடன் உவமானத்தையும் கொண்டு நையாயிகத் தனைக் கண்டார். கணாதர் நான்குடனே அருத்தாபத்தியும் சேர்த்து ஐந்தாகக் கொண்டு வைசேடிகத்தை வகுத்தார். சைமினி அவ்வைந்துடன் அபாவமும் சேர்ந்து'ஆறு அளவை களுடனே மீமாஞ்சகத்தைக் கண்டார்.

இனி மணிமேகலையான இளையவளுக்கு மற்ற பெண் களுக்கு உள்ள குணங்கள் இருந்தன என்பதற்கு ஓர் உதாரணம். எனக்கு மிகவும் பிடித்தமானது.

மணிமேகலையும் சுதமதியும் சக்கரவாளக் கோட்டத்தில் தூங்குகின்றனர், நடுச்சாமத்தில் மணிமேகலாத் தெய்வம் மணிமேகலையைத் தழுவி எடுத்துக் கொண்டு வானவெளியில் சென்று மணிபல்லவத் தீவில் மணிமேகலை வைத்துவிட்டு நீங்கிப்போயிற்று. கண்விழித்த மணிமேகலை தான் புது இடத்தில் இருப்பதைக் கண்டு உவவனத்தில் ஓர் இடமோ என ஐயுற்றாள். சுதமதியைக் காணோம்.

''சுதமதி ஒளித்தாய்! துயரம் செய்தனை'' என்று அரற்றினாள். விடிந்துவிட்டது. தாயின் ஞாபகம் வந்தது.

''மாதவி மயங்கும்'' என்பாள். தனியாகக் காட்டில் விடப்பட்டால், மனிதன் பாடுவான், அழுவான். தன் தகப்பனாரை நினைந்து அழுவாள்.

> ''தந்தையை உள்ளி
> கோற்றொடி மாதரொடு வேற்றுநாடடைந்து
> வைவாள் உழந்த மணிப்பூண் அகலத்து
> ஐயவோ! என்று அழுவோள்...''

இதுவும் ஓர் சித்திரம்.

# 10

## சமயம்—பௌத்தம்

மணிமேகலை என்ற காவியம் பௌத்த சமயத்தைப் பிரச்சாரம் செய்யும் ஓர் அரிய நூல். மனத்தில் நிலைத்திருக்கும் பல சம்பவங்களைத் தொகுத்த கதைகளும் வரலாறும் நிறம்பப் பெற்றுள்ளது. அக்காலத்தில் நடைமுறையில் இருந்த சமயக்கருத்துக்களைப் பற்றிய பலவிவரங்களையும் சுருக்கமாகவும் நறுக்குத் தெரித்தது போலும் சொல்லுகிறது. இனி, பௌத்த சமயம் பற்றி வந்துள்ள கருத்துகளைப் பார்க்கலாம். அவை மணிமேகலை, சுதமதி முதலியோர் வாயிலாக அறிகிறோம். அதிகமாக ஆசிரியர் அறிவிப்பது அறவுரை அடிகளின் கருத்துக்களாகும்.

''தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை''யில் கண்டுள்ள தருக்க முடிவுகளை ஆராய்ந்து பார்க்கலாம். எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், என். குப்புசாமி சாஸ்திரியார், அய்யாசாமி சாஸ்திரியார் அவர்கள் ஆராய்ச்சியின்படி நான்காவது நூற்றாண்டில் சமஸ்கிருதத்தில் வெளியான ''நியாயப் பிரவேசம்'' என்ற நூலை அடிப்படையாகக் கொண்டது என்பர். அதைப் பற்றிப் பின்னால் விரிவாகப் பார்ப்போம்.

> வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
> புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது

மூப்புவிளி யுடையது தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேர்க்கை
அவலக் கவலை கையாறு அழுங்கல்
தவலா உள்ளந் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிகிகோய்! இதனைப் புறமறிப் பாராய்''.

இது அடக்கத்துடன் சுதமதி உதயகுமரனுக்கு எடுத்துச் சொல்லும் தத்துவம். மக்களின் யாக்கை முன்செய்த தீவினையின் பலனாய் வந்தது. இது நல்வினை தீவினை கட்கு விளைநிலமாகி அமைந்துள்ளது, புகழ்வதற்கு ஒன்றும் இல்லை. எனவே தெளிவுடையவராய் மணிமேகலை மேல் கொண்டுள்ள காதலை விடுவிடு என்பான் இதே சுதமதிதான் புத்தனைத் ''தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'' எனச் சித்தரித்துள்ளான்.

உதயகுமரனிடம் மணிமேகலை வேறொரு கட்டத்தில் சொல்வாளாயினாள்:

''பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட்டிரங்கலும்
இறத்தலும் உடையது, இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விருப்புதல் புரிந்தேன்.''

அதே கருத்துத்தான். ''நல்லறம்'' புரிகிறேன் எனச் சேர்த்துச் சொல்கிறாள்.

புத்த தருமத்தைப் போற்றிச் சில பாத்திரங்கள் பேசுவதைக் காணலாம். சுதமதியின் தகப்பனாரைச் சமணர்கள் காப்பாற்றவில்லை. புத்த முனிவர்கள் உதவி செய்தனர் ''புத்த தர்மத்தைப் பற்றிச் சங்கதருமன் எனக்குப் போதித்தான்.'' அன்றுமுதல் புத்த தேவனின் திருவடிகளின் தகைமையினைப் பாராட்டி வருகிறேன்,'' என்ற கூற்றைக் கவனிக்கலாம்.

புத்தன் 'இயல்குணன்' ஏதுமில் குணப் பொருள்'
'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்'
'காமற் கடந்த வாமன்'
'இன்பச் செவ்வி மன்பதை எய்த
அருளறம் பூண்ட ஒரு பெரும் பூட்கையின்
அறங்கதிர் ஆழி திறம்பட உருட்டி'

இதற்கான விளக்கம் மக்கட்குலம் அனைத்தும் தம் துயரங்களினின்றும் நீங்கி இன்பச் செவ்வியினை அடைவதற்கு என்றே அருளாக அறத்தினைப் பூண்ட ஒப்பற்ற பெரும் மேற்கோளினை உடைமையாலே, அறமாகிய கதிர்களை யுடைய தர்ம சக்கரத்தினைத் தகைமையுடனே உருளச் செய்தவன். காமனை வென்றவன் புத்ததேவன்.

மேலும் புத்தன்,

''ஆதிமுதல்வன், அறவாழி ஆள்வோன்
மாதுயர் எவ்வம் மக்களை நீக்கி''

பாத்திரம் பெற்றவுடன் மணிமேகலை மன மகிழ்ச்சியுடன் புத்தனைப் புகழ்கின்றாள், அதை ஒரு Agitation என்று கூறலாம். ஒரு துதிப் பாடலாகும். ராமலிங்க சுவாமிகளின் ''கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே'' பாடலை ஞாபகப்படுத்துகிறது. எப்படி என்று பார்ப்போம்.

''மாரனை வெல்லும் வீர! நின்னடி
தீநெறிக் கடும்பகை கடிந்தோய்! நின்னடி
பிறர்க்கறம் முயலும் பெரியோய்! நின்னடி
துறக்கம் வேண்டாத தொல்லோய்! நின்னடி
எண்பிறக் கொழிய இறந்தோய்! நின்னடி
கண்பிறர்க் களிக்கும் கண்ணோய்! நின்னடி
தீமொழிக்கு அடைத்த செவியோய்! நின்னடி
வாய்மொழி சிறந்த நாவோய்! நின்னடி
நரகர் துயர்கெட நடப்போய்! நின்னடி
உரகர் துயரம் ஒழிப்போய்! நின்னடி''

இப்படியாகப் புத்தனுக்குப் புகழ்மாலை (Hyperbolic).

அறவண அடிகள் புத்தனுடைய பெருமையை மணிமேகலையிடம் சொல்கிறார் "அறவணர் தொழுத காதையில்"

> "**தருமத் தலைவன்** தலைமையின் உரைத்த
> பெருமைசால் நல்லறம்.........
> கண்டினிது விளங்காக் காட்சி போன்றது"

தருமங்களின் முதல்வனான புத்த தேவன் அறநெறியினை உலகத்துக்கு உரைத்தான். அது இன்பத்திற் கான வழி. எனினும் மூடிக்கிடக்கிறது. துன்பத்திற்கான வழி திறந்து கிடக்கிறது. இதை உணர வேண்டும். இது கண்ணால் காணும் காட்சிப் பொருள் அல்ல.

சாதுவன் நாகர்களுக்கு அறநெறி உரைத்தான். பிறந்தவர் சாவதும் இறந்தவர் பிறத்தலும் உறங்கலும் விழித்தலும் போன்றது

> "நல்லறம் செய்வோர் நல்லுல கடைதலும்
> அல்லறம் செய்வோர் அருநர கடைதலும்"

இவ்வுண்மையை அறிந்தவர்கள் இருவினைச் செயல்களையும் நீக்குவர்.

மணிமேகலையை ராஜமாதேவி பலவித சோதனைக் காளாக்குகிறாள். தன் மகற்குற்ற இடுக்கண் பொறாது செய்தேன் என்று சமாதானம் சொன்னாள். உயிருக்கு அழுதாயா? அல்லது உடலுக்கு அழுதாயா? என்ற விடுகதை போட்டு பஞ்சமா பாதகங்களின் தீமையை எடுத்துச் சொல்வாள் — காமம், கொலை, கள், பொய்யொழுக்கம், களவின் கேடு—இரண்டு கடமைகளைக் கொடுக்கின்றாள் என்று வருந்தி வந்தோர் அரும்பசி களைவது, இரண்டாவதாக, எல்லா உயிர்களிடத்தும் அன்பு காட்டுவது. இதைச் செய்தால் துன்பத்தினை அறுக்கின்ற முடிவான மெய்ப் பொருளினை உணர்ந்தோர் ஆவர்.

அறவண அடிகள் ராஜமாதேவிக்கு செய்யும் உபதேசத்திலும் புத்தத்தின் கருப்பொருள்களைக்

காணலாம். 24-வது அத்தியாயத்தின் பிற்பகுதியில் இதைக் காணலாம். அதன் சுருக்கத்தை இக்கட்டுரையில் குறிப்பிட்டு விட்டு அடுத்த கட்டுரையில் மேலும் பார்க்கலாம்.

அறவணர் கூற்று:

ஆன்றோரால் வகுக்கப்பட்ட இயல்புகள் (நிதானங்கள்) 12. அவையாவன:—

பேதமை
செய்கை
உணர்வு
அருவுரு
வாயில்
ஊறு
நுகர்வு
வேட்கை
பற்று
பவம்
தோற்றம்
வினைப்பயன்

இவற்றை அறிந்தோர் "நிறுவாண" நிலையை அடைவார்கள். அவற்றை அறியாதவர்கள் துன்பத்திலே ஆழ்த்தும் "நரகத்தை" அடைவார்கள்.

**பேதைமை** என்பது 12 இயல்புகளை உணர்ந்தறியாது, மறந்து தாம் கேட்டதே உண்மையென நம்புவது. உதாரணம் "முயற்கொம்பு உண்டு" என்று தாம் கேட்டதை உண்மையென நினைத்து வலியுறுத்துவது.

**உயிர்கள்** 6 வகைப்படும்—மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கின் தொகுதிகள் பேய்த் தொகுதிகள். மேலே சொன்ன உயிர்வகைகள் வினையின் அடிப்படையில் உரிய கருவினுள்ளே சென்று பிறக்கும்.

**தீவினை** என்றால் என்ன?

கொலை, களவு, காமம் ஆகிய மூன்றும் உலையா உடம்பில் தோன்றுவது பொய், கோள், கடுஞ்சொல், பயனற்ற சொல் ஆகிய நான்கும் தோன்றுவது நால்வகைக் குற்றங்கள்—வெஃகல், வெகுளல், மயக்கம்—இப்பத்து வகையாலும் தீவினை நிகழும்.

**நல்வினை :** மேலே சொன்ன 10 குற்றத் தொகுதிகளி லிருந்து விடுபட்டு, நல்லொழுக்கம் மேற் கொண்டு, தானம் செய்து, தேவர், மேன்மக்கள், பிரமா என நல்வினைப் பிறப்பை அடைவது தவத்திறம் பூண்டு தர்மம் கேட்டது.

# 11

## சமயம்—பௌத்தம்

மணிமேகலையில் வெளியிடப்பட்டுள்ள பௌத்த தத்துவம் வடமொழியிலுள்ள "நியாயப் பிரவேசத்தை" தழுவியதாக உள்ளது என்று ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். மேற்படி நூல் 4-வது நூற்றாண்டில் சங்கரசாமி என்பவரால் எழுதப்பட்டதை வைத்துப்பார்த்தால் மணிமேகலையும் மேற்படி காலத்தில் எழுதப்பட்டது எனக் கொள்ளலாம்.

"தவத்திறம் பூண்டு தருமங்கேட்ட காதை"யிலும் "பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை" யிலும் மணிமேகலை அறவண அடிகளை "மெய்ப்பொருள் விளக்கத்தினை" அருளிச் செய்க என்று கேட்கிறாள். அவரும் விளக்கமாக புத்த தர்மத்தைப்பற்றி எடுத்துச் சொல்கிறார். புத்தம் சரணம் கச்சாமி, தர்மம் சரணம் கச்சாமி, சங்கம் சரணம் கச்சாமி என்று சரணாகதி அடைந்தபின் அறவணர் மேலும் உபதேசம் செய்கிறார்.

ஆரம்பக் கருத்துக்கள் நான்குவகை வாய்மையும் ஐந்து வகை சீலமும் ஆகும். பிறப்பு-துன்பம், பிறவாமை-இன்பம், பற்றில் வருவது பிறவி; பற்றறுப்பதால் வருவது பிறவாமை; இவைநான்கையும் நால்வகை வாய்மை என்று சொல்லலாம். அடுத்து பிறப்பின் காரண காரியத்தை விளக்குவது 12 நிதானங்களாகும். அவைகளை 12 தத்துவங்கள் என்று

சொல்லலாம். மேற்படி 12 நிதானங்களும் நான்குவகையான கண்டங்களையுடையது.

முதற் கண்டம்—பேதமை, செய்கை என இரண்டும்
இரண்டாம் கண்டம்— உணர்வு, அருவுரு,
வாயில், ஊறு, நுகர்வு என ஐந்தும்
மூன்றாம் கண்டம்— வேட்கை, பற்று, பவம்என மூன்றும்
நான்காம் கண்டம்—தோற்றம், வினைப்பயன் என
இரண்டும்

ஆகமொத்தம் 12 நிதானங்கள். இம்மாதிரியே சந்திவகை மூன்றாகும். செய்கையும் உணர்வும் கூடுதல் முதல் சந்தி. நுகர்வும் வேட்கையும் கூடுதல் இரண்டாம் சந்தி. பவமும் தோற்றமும் சேர்தல் மூன்றாம் சந்தி.

''கண்ட நான் குடைத்தாய்
மருசாய சந்தி மூன்றுடைத்தாய்''

இனி 12 நிதானங்களான தத்துவத்தின் சிலவற்றைப் பார்ப்போம். பேதமை என்றால் என்ன?

''ஓதிய இவற்றை உணராது மயங்கி
இயற்படுபொருளால் கண்டது மறந்து
முயற்கொடு உண்டு என கேட்டது தெளிதல்''

அடிப்படைக் கருத்துக்களைப் புரியாது மயக்கங் கொண்டு காட்சிகளாலும் கருத்தளவையாலும் அறியப்படும் பொருளால் கண்டறிந்த மெய்ப் பொருளை மறந்துவிட்டு, முயற்கோடு என்பது உள்ள பொருளேயாகும் எனப் பிறர் சொல்லக் கேட்டதனால் அதன் உண்மையை ஆராய்ந்து அழியாது அங்ஙனம் தானும் உண்டென மேற்கொள்ளுதலாம்.

இனி உயிர்கள் எய்தும் பிறப்புகள் என்ன எனப் பார்ப்போம். அறவணர் சொல்லுகிறார், ''உலகம் மூன்றினும் உயிராம் உலகம் அலகில் பல்லுயிர் அறுவகைத் தாகும் மக்களும், தேவரும், பிரமரும், நரகரும் தொக்க

விலங்கும் பேயும் ஒன்றே'' அதாவது மக்கள், தேவர், பிரமர், நரகர், விலங்கு, பேய்.

நற்செய்கை, தீச்செய்கை என்னும் இருவகைச் செயல்களினால் உயிர்கள் மேற்சொல்லப்பட்ட ஆறுவகைப் பிறப்புகளுள் ஒன்றன் கருவிற் சென்று சார்தலும், அவ்வக் கருவினுள் இயைந்த காலத்தே அவ்வகையாகவே பிறவியும் எடுக்கும். பின் அவற்றின் செய்வினைப் பயன்கள் வந்து விளைகின்ற காலத்திலே, அவ்வுயிர்கட்கு, அது மனத்தின் கண் பேரின்பத்தையும் பெருங் கவலையையும் வினைகளுக்கு ஏற்றவாறு காட்டுவதாக அமையும். பேரின்பமும் கவலையும் நல்வினை தீவினைகளால் விளையும் பயன்களாகும்.

நல்வினை என்றால் என்ன? தீவினை என்றால் என்ன? ஆசிரியர் முதலில் தீவினை அட்டவணையைத் தருகிறார். தீவினை 10. மேற்படி பத்தில் விடுபட்டுச் சீலத்தை மேற்கொள்வதாம். அப்பேர்ப்பட்டவர்கள் மக்கள், தேவர், பிரமர் எனப் பிறவி எடுப்பார்கள்.

**தீவினை**

1. கொலை.
2. களவு.
3. காமத் தீவிழைதல்.
4. பொய்.
5. கோள் சொல்லுதல்.
6. கடுஞ்சொல்.
7. பயனில சொல்.
8. பிறர் பொருளைக் கவருதல்—வெஃகல்.
9. வெகுளல்.
10. குற்றம்பட உணர்தல்-பொல்லாக் காட்சி.

**நல் வினை**

நல்வினை என்றால் என்ன? என்ற கேள்வியை எழுப்பி ஆசிரியர் பதில் சொல்கிறார். மேற்சொல்லிய 10 தீவினைகள்

தொகுதிகளினின்று விடுபட்டுச் சீலத்தை மேற்கொண்டு தானங்களில் தலைநிற்பவராகி இருத்தலாம்.

இனி, துக்கத்தின் காரணத்தை இயக்குவியல் கருத்துக் கொண்டு சிறந்த முறையில் விளக்குகிறார். அதைப் பார்ப்போம்.

பிறவிக்கு காரணமாக விருப்பது பேதமை. அதனாலேயே பிறப்பும் இறப்பும் மாறிமாறி ஏற்பட்டு சம்சார சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கிறது. பேதமை காரணமாகச் செய்கைகள் ஏற்படுகின்றன. செய்கைகள் காரணமாக உணர்ச்சி தோன்றுகிறது. உணர்ச்சியிலிருந்து உயிரும் உடலும் தோன்றுகின்றன. அதை "அருவுரு" என்பர். உயிரோடு இயங்கும் உடலில் 6 பொறிகள் (ஐம் புலன்களுடன் மனமும் சேர்ந்து 6 பொறிகள்) இவற்றின் மூலமே உடலுக்கு வெளியுலகத் தொடர்பு ஏற்படுகின்றது. இத்தொடர்பிலிருந்து ஏற்படும் உணர்ச்சிகள் அனைத்தும் நுகர்ச்சியாம நுகர்ச்சியினால் அவா ஏற்படுகின்றது. அவாவிலிருந்து பற்று உண்டாகிறது. பற்று காரணமாகச் கருமத் தொகுதி ஏற்படுகின்றது பிறப்பினால் பிணி, மூப்பு, சாக்காடு முதலிய வினைப்பயன்கள் மீண்டும் விளைகின்றன.

# 12

## புத்த தர்மம்

**12** நிதானங்கள்— பேதைமை முதலாக வரும் நுகர்ச்சிகளால் வரும் துன்பங்கள், மேற்படி துன்பத்தை நீக்கும் மீட்சிகள் பற்றிக் கண்டோம். ஆசிரியர் 12 நிதானங்களையும் 4 கண்டங்களாக பிரிக்கின்றார்.

**கண்டங்கள் நான்கு**

பேதைமையும் செய்கையும் ஆகிய இவை இரண்டும் ஏனையவற்றிற்குக் காரணவகையாதலின் இவற்றை ஆதி கண்டம் என்பார்கள்.

உணர்ச்சி, அருவுரு, வாயில், ஊறுநுகர்ச்சி என்று நோக்கப்படுவனவான நிதானங்கள் 5ம் முன்னே கூறப்பட்டுள்ள ஆதிகண்டத்தின் இயல்பினால் வந்தன. இதை இரண்டாம் கண்டம் என்பர்.

மூன்றாம் கண்டம் என்ன? வேட்கை, பற்று, கருமத்தொகுதி எனப் பகுத்துச் சொல்லப்படும் மூன்றும் குற்றமும் வினையும் ஆதலின் அவற்றை மூன்றாம் கண்டம் என்பார்கள்.

நான்காம் கண்டம் என்பது என்ன? பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு எனச் சொல்லும் துன்பமாகிய இவை

யெல்லாம் பிறந்த உடம்பினிடத்தே அடைய வரும் பயன் ஆதலினாலே இவற்றை நான்காம் கண்டம் என்பார்கள்.

**சந்தி மூன்று**

பிறப்புக்குக் காரணமாகிய செய்கையும் உணர்வும் பொருந்துவது முதற்சந்தியாகும். ஒழுக்கமும் வேட்கையும் கூடுவது இரண்டாவது சந்தியாகும். அடுத்த பிறப்புக்குச் செல்வது மூன்றாம் சந்தியாகும்

**பிறப்பு—மூன்று**

புத்த தர்மத்தின்படி. 3 வகை பிறப்புக்கள் உள்ளன. அவையாவன மக்கள், தெய்வம், விலங்கு. இறுதி லட்சியம் நிர்வாணம் என்ற சமாதியே. அதாவது உணர்வு உள்ளேயடங்க உருக்கொண்டு தோன்றி இருத்தல். உணர்வும் உருவும் உடன் நிகழுமாறு தோன்றி சேர்ந்திருக்கும் மக்கள், தெய்வம், விலங்கு முதலியவையாக தோன்றியிருத்தலாம். மூவகை பிறப்புகளையும் அருபதாது, ரூபதாது, காமதாது என்பர்.

**காலம் — மூன்று**

காலத்தை, இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று பிரிக்கலாம். இக்காலங்களுக்குள்ள கோட்பாட்டைப் பார்ப்போம். மறத்தலைச் செய்யும் பேதமையும், அதன் சார்பாக வரும் செய்கையையும் இறந்தகாலம் எனலாம். உணர்வும், அருவுருவும், வாயிலும் ஊறும், நுகர்வும், வேட்கையும், பற்றும், பவமும், தோற்றமும் இவையெல்லாம் நிகழ்காலம், பிறப்பு, பிணி, மூப்பு, சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு இவையெல்லாம் எதிர்காலம். ஏற்கனவே அஸ்திவாரமான 4 வாய்மைபற்றியும் 12 நிதானங்கள் பற்றியும் அறிந்துள்ளோம்.

இனி வழக்குகள், நயங்கள் வினாவிடை பற்றிச் சற்று விவரித்து முடிப்போம். இதில் காரண காரிய விளக்கங்களும், ஆங்கிலத்தில் நாம் அறிந்துள்ள (Dialectics) இயக்குவியல் பொதிந்து கிடப்பதைக் காணலாம்.

**வழக்குகள் — ஆறு**

1. உண்மை வழக்கு
2. இன்மை வழக்கு
3. உள்ளது சார்ந்த உண்மை வழக்கு
4. இல்லது சார்ந்த இன்மை வழக்கு
5. உள்ளது சார்ந்த இன்மை வழக்கு
6. இல்லது சார்ந்த உண்மை வழக்கு

இதற்கு விளக்கம் கொடுப்பதற்காக ஆசிரியர் கூறும் உதாரணங்கள்—உடம்பு, நீர், நாடு, வித்து, முளை தான் ஆம். பல தாதுக்களின் கூட்டமே உடம்பு. பல துளிகளின் கூட்டமே நீர். பல ஊர்களின் கூட்டமே நாடு என்பதுபோல பஞ்சஸ்கந்தங்களின் கூட்டமே ஆன்மா. **ஆன்மா என்பது தனித்தியங்குவதாகப் புத்தம் ஏற்றுக்கொள்ளவில்லை.** இதனை உண்மை வழக்கு இன்மை வழக்கோடு சேர்த்தும் கூறலாம். இவை **தொகையின்** தன்மையெனலாம் **தொடர்ச்சியின்** தன்மை என்ன? வித்திலிருந்து முளையும் முளையிலிருந்து தாளும் தோன்றி நிகழ்ந்து நெல்லாகுமாறுபோல எல்லாம் காரண காரிய சம்பந்தமாவே உள்ளதென்பது ஒருபொருள் அழிவுடைத்து என்றும், தோன்றிற்று என்றும், மூத்தது என்றும் கூறப்படும் தன்மைகள் மூன்றனுள் ஒன்றன் இயல்பை மிகுத்துச் சொல்லுதல் தன்மை மிகுத்து உரைத்தலாம். எழுத்துக்கள்பல கூட சொல் உண்டாகும். "பல நாட்கள் கூடிய எல்லையை திங்கள்" என்று வழங்குதல் "இயைந்துரை" என்று சொல்லப்படும்.

**ஆன்மாவைப்** பற்றிக் குறிப்பிட்டுள்ளேன். அதைப் பற்றிய சமயக் கருத்துக்களை இங்குக் குறிப்பிடுவது பொருத்தமென நினைக்கின்றேன். இக்கால இந்துக்கள் ஒவ்வோர் உடலிலும் தனி ஆன்மா ஒன்று உறைகின்றது என்றும், அது அழிவற்றது என்றும், உடல் அழியும்போது வெளியேறி பாவ புண்ணியத்துக்கேற்றபடி வேறு உடலில் தோன்றலாம். அல்லது சுவர்க்கத்தை அடையலாம் என நம்புகின்றனர். வேறு சில சமயத்தவரும் அழிவற்ற

ஆத்மாவில் நம்பிக்கை கொண்டுள்ளனர். ஆனால் புத்தர் அழிவற்ற ஆன்மா ஒன்று இருப்பதாக நம்பவில்லை. கூடுவிட்டுக் கூடுபாய்வதுபோல் அது உலகிலே பல உடல் களில் மாறி மாறி வந்தடைபட்டிருப்பதாகவும் நம்பவில்லை. அதே நேரத்தில் ஒவ்வொரு மனிதனும் தன்பாவ புண்ணியங் களுக்குப் பொறுப்பானவன். அதற்குத் தக்கபடி வேறு பிறவிகள் எடுக்க நேரும் என்றும் கூறியுள்ளனர். இந்துக் களின் கரும நியதிக்கும் புத்தம் கூறியுள்ள கரும நியதிக்கும் வேற்றுமை உண்டு. இக்கட்டுரைகளால் இது விளங்கும் என்றும் கருதுகிறேன்.

# 13

## சமயம்

பவுத்தம், பவுத்தத்தில் சில அம்சங்களை குறிப்பிட்டுள்ளேன். மேலும் அதை வளர்க்கலாம், எனக் கருதுகிறேன். திருப்பித் திருப்பி சில விவரங்கள் வரலாம். புத்தருக்கு ஆரம்பத்தில் கிடைத்த சீடர்கள் 5 பேர்தான். அவர்களுக்குத்தான் காசியில் முதலில் உபதேசம் செய்தார் எனச் சான்றுகள் உள்ளன. ஏசு தனது 11 சீடர்களைத் தயாரித்தது போல் எனக்கூறலாம். 5-பிக்குகளிடம் முதலில் புத்தர் தெரிவித்ததாவது:

"பிக்குகளே! துறவிகள் விலகவேண்டிய இரண்டு எல்லைகள் உள்ளன. மாறுபட்ட இந்த இரண்டு எல்லைகள் எவை என்றால், காமசுகல்லி கானுயோகம், அத்திகில மதானுயோகம் என்பன. காமசுகல்லி கானுயோகம் சிற்றின்ப சுகத்தை அனுபவிக்கிறது. இது இழிவும் தாழ்வும் விகாரமும் உள்ளது. இறுதியிலே தீமை பயப்பது. அத்த கிலமதரனு யோகம் என்பது உடம்பை அதிகமாக வாட்டி எடுக்க அடக்கித் துன்பம் கொடுப்பது. இதுவும் இறுதியில் யாதொரு பயனையும் கொடாமல் வீணாகப் போகிறது. பிக்குகளே! இந்த இரண்டு எல்லைகளையும் நீக்க இடைவழியாக நெறி உண்டு"

அந்த நெறி என்ன? அதுதான் 8 நெறி என்று கூறப்படும் அஷ்டாங்கயோகம். அவை:

1. நற்காட்சி ஸம்மாதிட்டி)
2. நல்லெண்ணங்கள் (ஸம்மாஸங்கப்போ)
3 நல்வாய்மை (ஸம்மாவாசா)
4. நற்செய்கை (ஸம்மா கம்மந்தோ)
5. நல்வாழ்க்கை (ஸம்மா ஆஜீவோ)
6. நன்முயற்சி ஸம்மா வியாயாமோ)
7. நற்கடைப்பிடி (ஸம்மாஸதி)
8. நற்தியானம் (ஸம்மாஸமதி)

இவைதான் புத்தர் கண்ட மத்திம வழி

12 நிதானங்களைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். இருப்பினும் அதை மீண்டும் எடுத்துக் காட்டுவது அவசியமெனக் கருதுகிறேன். விநயபிடகத்தின் மகாவக்கம் என்னும் பிரிவில் முதல் காண்டத்தில் உள்ள பாலி மொழி வாக்கியத்தின் சொல்லுக்குச் சொல் நேர் மொழி பெயர்ப்பாக இருக்கிறது. (மணிமேகலை 30 (104—118) மயிலை-சீனி வெங்கடசாமியின் குறிப்பு) அதாவது:

பேதமை சார்வாச் செய்கையாகும்
செய்கை சார்வன உணர்ச்சியாகும்
உணர்ச்சி சார்வாவருவுருவாகும்
அருவுரு சார்வா வாயிலாகும்
வாயில் சார்வா வுருகும்மே
ஊறு சார்ந்து நுகர்ச்சியாகும்
நுகர்ச்சி சார்ந்து வேட்கையாகும்
வேட்கை சார்ந்து பற்றாகும்மே
பற்றில் தோன்றும் கருமத்தொகுதி
கருமத் தொகுதி காரணமாக
வருமேயனை வழிமுறை தோற்றம்
தோற்றம் சார்பின் மூப்புப்பிணி சாக்காடு

அவலம் அரற்று கவலை கையாறெனத்
தவலின் துன்பந் தலைவரும் என்ப
ஊழின் மண்டில மாச்சூழமிந் துகர்ச்சி''

(30—104 & 118)

இவ்வாறு ஊழின் மண்டிலமாக 12 நிதானங்களைக் குறிப்பிடுகிறார் புத்தர். இதில் வகுக்கப்பட்டுள்ள காரண காரியங்கள் ஊன்றிக் கவனிக்கப்படவேண்டும். ஒன்றிலிருந்து மற்றொன்று எப்படித் தோன்றுகிறது என்பதாகும்.

அதாவது:—

—பேதமை சார்பாகக் கொண்டு செய்கை
—செய்கை சார்பாகக் கொண்டு உணர்ச்சி
—உணர்ச்சி சார்பாகக் கொண்டு அருவுரு
—அருவுரு சார்பாகக் கொண்டு வாயில்
—வாயிலைச் சார்பாகக் கொண்டு ஸ்பரிசம்
—ஸ்பரிசம் சார்பாகக் கொண்டு நுகர்ச்சி
—நுகர்ச்சி சார்பாகக் கொண்டு வேட்கை
—வேட்கை சார்பாகக் கொண்டு பற்று
—பற்றினைச் சார்பாகக் கொண்டு வினைத்தொகுதி
—வினைத் தொகுதியைச் சார்பாகக் கொண்டு பவம், தோற்றம்
—தோற்றம் சார்பாக கொண்டு மூப்பு, பிணி.

சாக்காடு, அவலம், அழுகை, கவலை, செயல், அறுதி எனும் துன்பங்கள் வந்து சம்பவிக்கும். இப்படியாகப் பேதமை முதலான காரணங்களினால் நீங்காத துக்கம் வந்து சம்பவிக்கிறது.

இவைகளைப் பிரித்துப் பிரித்துப் பார்க்கிறதனால், ஆராய்வதால் ஐயங்கள் மறைந்து விடுகின்றன. புத்தர் கூறுவதாவது ''பிறவித்துன்பத்தை நீக்கும் பொருட்டு முயற்சியோடு தியானமை செய்து பாலத்தை நீக்கின யோகியானவர் பவுத்தத்தின் 37 தத்துவத்தை எப்பொழுது

உணர்கிறாரோ அப்பொழுதே பேதமை முதலான காரணங் களினாலே உண்டான துக்கங்களைப் பிரித்து ஆராய்ந்து பார்க்கிறபடியினாலே — அவருடைய ஐயங்கள் நீங்கி விடுகின்றன''

இது விநயபிடகம் **மகாவக்கம்** முதல் காண்டத்தில் உள்ளது. பாலி மொழியிலிருந்து மொழி பெயர்ப்பாக (மணிமேகலையில் அத்தியாயம் 30 வரிகள் 119—133ல்) காணலாம். அதிலும் அமைந்துள்ள **காரண காரிய நயங் களைப்** பாராட்டி ரசிக்காமல் இருக்க முடியாது. பவுத்தத்தில் இம்மாதிரியான கேள்வி, பதில், ஆராய்ச்சி, தர்க்கம், பதில் காணக்கிடக்கிறது.

எப்படி ஐயங்களை நீக்குவதென்ற சாத்தனாரின் கூற்றைப் பார்ப்போம்.

பேதமை மீளச் செய்கை மீளும்;
செய்கை மீள, உணர்ச்சி மீளும்;
உணர்ச்சி மீள, அருவுரு மீளும்;
அருவுரு மீள, வாயில் மீளும்;
வாயில் மீள, ஊறு மீளும்;
ஊறு மீள, நுகர்ச்சி மீளும்;
நுகர்ச்சி மீள, வேட்கை மீளும்;
வேட்கை மீள, பற்று மீளும்;
பற்று மீள, கருமத் தொகுதி
மீளும்; கருமத் தொகுதி மீள,
தோற்றம் மீளும்; தோற்றம் மீள,
பிறப்பு மீளும்; பிறப்பு பிணி, மூப்பு
சாக்காடு, அவலம், அரற்று, கவலை
கையாறு, என்றிக் கடையில் துன்பம்
எல்லாம் மீளும்; இவ்வகையான் மீட்சி.

இவ்வாறு துன்பங்களிலிருந்து **மீட்சி**க்கு வழி வகுக்கப் படுகிறது. பேதமை நீங்க, செய்கையும், பின் உணர்ச்சியும் அருவுருவும், வாயிலும், ஊறும், நுகர்ச்சியும், வேட்கையும்

நீங்கும். வேட்கை நீங்கவே பற்று நீங்கும். பற்று நீங்கவே கருமத் தொகுதியும் நீங்கும். பின் தோற்றமும் பிறப்பும் நீங்கும், பிறப்பு நீங்கவே பிணி, மூப்பு, சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு முதலிய எல்லையற்ற துன்பமெல்லாம் நீங்கும்.

ஆசிரியர் தொடர்ந்து 12 நிதானங்களைப் பற்றி தீவிர ஆராய்ச்சியில் இறங்குகின்றார்.

# 14

## சமயம்— சைவ வாதம்

மணிமேகலை காலத்தில் பல சமயங்கள் இருந்தனவென்றும், அவர்களுடைய வாதங்களையெல்லாம் மணிமேகலை கேட்டறிந்த விபரங்களையும் "சமயக் கணக்கர் தந்திறங்கேட்டகாதை"யில் காண்கிறோம். சாங்கியம், பூதவாதம், அளவை வாதம், வைசேடிகம் பற்றி ஏற்கனவே எழுதியுள்ளோம். இக்கட்டுரையில் சைவ வாதம், பிரம்ம வாதம், வைணவ வாதம், வேத வாதம், நிகண்ட வாதம் பற்றிக் காண்போம்.

**சைவவாதி,** சிவன் என்ற இறைவனின் இலக்கணத்தைக் கீழ்க் கண்டவாறு விவரிக்கின்றார்.

"இரு சுட ரோடிய மானனைப் பூதமென்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க் கட்டி
நிற்போன்"

மேலும், கலையுருவினோன்,

'படைத்து விளையாடும் பண்பினோன்
துடைத்து துயர்நீர் தோற்றத்தோன்
தனக்கு நிகரில்லாதவன்—

இவன் தான் என் ஈசன், இவன் தான் என் இறைவன் என சைவவாதி எங்கள் தெய்வம் எப்படிப்பட்டதென அறிவிக்கிறார்.

**பிரமவாதி** அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது; உலகமே பிரமனின் சிருஷ்டி என்பார் பிரம்மவாதி.

"பேருல கெலாம்.......
தேவன் இட்ட முட்டை"

**வைணவவாதி,** நறுக்குத் தெரித்தது போல நாரணனை விளக்குவார்.

'காதல் கொண்டு கடல் வணன் புராணம் ஓதினன் நாரணன்.'

நீலகமல வண்ணனான திருமால்தான் உலகத்தை காத்தருளும் இறைவனாகும்.

**வேதவாதி,** வேதபுருஷனின் இலக்கணத்தை ஓர் மனித உருவமாக்கிக் காண்பிக்கிறான். 'கற்பம்' எனப்படும் வேதங் களில் 6 அங்கங்களும் கைகள்; 'சந்தம்' கால்கள்; 'என' கார் கண்கள் விளக்கம் செய்யும் 'நிருத்தம்' செவிகள்; 'சிக்' கை மூக்கு; சொல் இலக்கணமாகிய 'வியாகரணம்' முகம். இப்பேர்ப்பட்டவன் தான் வேதபுருஷன். யாதொரு சார்பினையும் பற்றுதலாகக் கொள்ளாதவன். அவனுக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை. இவ்வேதங்கள் உரைப்பதுதான் எங்கள் நெறியாகும். இவ்வாறு இறைவனைச் சைவவாதி, வைணவவாதி, பிரமவாதி, வேதவாதி ஆகியோர் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

இவர்களெல்லாம் எண்ணத்தை அடிப்படையாகக் கொண்ட தத்துவத்தினர் என ஒரளவு கொள்ளலாம். இறைவனே மூலம் என்பதாகும்.

**நிகண்டவாதி**

நிகண்ட வாதியைப் பற்றி சற்று விரிவாக கவனிப்போம். நிகண்டவாதி தன் கொள்கையை விளக்கி உரைக்கின்றான். அவன் ஆரம்பிப்பதே 'இந்திரர்களால் தொழப்படும்

இறைவன் எம் இறைவன்' உரையாசிரியர்கள் அவனை "அருக பரமேட்டி" என்று கூறுகிறார்கள்.

அவன் தந்த பொருள் 10 வகையினவாகும். அதாவது,

1. தன்மாத்தி காயம்
2. அதன்மாத்தி காயம்
3. காலம்
4. ஆகாயம்
5. குற்றமற்ற சீவன்
6. பரமாணுக்கள்
7. நல்வினை
8. தீவினை
9. அவ்வினையால் செய்வனுபந்தம்
10. வீடு

ஆக்கலுக்கு மூன்றுவித தன்மையுண்டு. அதாவது தோற்றம், நித்தியம், அநித்யமாகிய கேடு. உதாரணம் வேண்டுமென்றால் "வேம்பு" முளைத்து அது வேம்பாகவே விளங்குதல் நித்தியம்.

"நிம்ப முளைத்து நிகழ்தல் நித்தியம்" அந்த விதை யாகிய பழைய பொருள் இல்லாதிருக்கும் நிலை போலவே அநித்தியம். இது பொதுவான கருத்து. நிகண்டவாதியின் நித்திய அநித்தியத்துக்கு எடுத்துக்காட்டு.

—தன்மாத்திய காயமென்பது உலக நிகழ்ச்சிகளுக்கு ஏது வாகத்தான் எல்லாப் பொருள்களிடத்தும் அமைந்து, வினைகட்கு ஏற்ப நடத்துவதாம்.

— அதன்மாத்திய காயம் நிலையான இயல்பினை உடையதாகி, எப்பொருள்களையும் நிலைநிறுத்தச் செய்வது

— காலம்: காலம் கணிதம் என்னும் குறு நிகழ்ச்சியும் கற்பகமென்னும் நெடு நிகழ்ச்சியும் ஆக்குவதாம்.

— ஆகாயம்: ஆகாயம் எல்லாப் பொருட்கும் புக்கும் இடம் கொடுக்கும் செயலுடையதாகும்.

— **சீவன்:** சீவனாவது 'உடம்போடு ஒத்துக்கூடி தாவின் சுவை முதலிய புலன் நுகர்வுகளை' அனுபவிப்பதாகும்.

— **வீடு** "ஓரணு புற்கலம் புறவுருவாகும்
சீர்சால் நல்வினை, தீவினையவை செயும்"

இவ்விரண்டையும் மாற்றி முன்செய்த அரிதான வினைகளின் பயன்களை அனுபவித்துப் பிறவி அறுத்தி முதலாகிய அதுவே வீடு பேறாகும்.

இங்ஙனம் நிகண்டவாதி தன் மதவுண்மைகளை எடுத்துச் சொன்னான்,

# 15

## சமயம்—சாங்கியம் (தொடர்ச்சி)

மணிமேகலையானவள் வேற்றுருக்கொண்டு பல சமய வாதிகளைக் கண்டு அந்தந்த மத உண்மைகளைக் கேட்டறிந்தாள். இந்தப் பகுதி மணிமேகலையில் ஓர் முக்கிய கட்டமாகும். பூதவாதி, வைசேடிகவாதியின் கூற்றுகளைக் கண்டோம். இந்தக் கட்டுரையில் **சாங்கியவாதி** தன் மத உண்மைகளை எடுத்துக் கூறியதைப் பார்க்கலாம். மூலம் என்றால் என்ன என்பதை முதலில் அறுதியிட்டுக் கூறுகிறார். மூலத்தினின்று தோன்றுபவை என்ன என்பதை வெளிப் படுத்துகிறார். விகாரம் என்னும் முரண்பாட்டின் தன்மை, புருடதத்துவம் என்றால் என்ன? இறுதியில் 25 பொருள் களின் பட்டியல் தருகிறார்.

இந்திய தத்துவ மேதைகள் இந்தியாவில் 9 விதமான பகுதிகளாக Indian Philosophy-ஐ பிரிக்கலாமென முடிவு செய்துள்ளனர். அவையாவன: 1. சர்வாகாம், 2. ஜெயினிசம், 3. பௌத்தம், 4. நியாயம், 5. வைசேடிகம், 6. சாங்கியம், 7. யோகம், 8. மிமாம்சம், 9. வேதாந்தம்.

இந்திய தத்துவ வளர்ச்சியை 5 கட்டங்களாகப் பிரிக்கலாம்.

1. வேதகாலம்—ஆதிமுதல் 3000 வருடங்களுக்கு முன்பு வரை.

2. இதிகாச காலம்—2800 வருடங்கள் முதல் 2000 வருடங்கள் வரை.

3. இலக்கிய காலம்—2000 வருடங்களுக்கு முதல் 1000 வருடங்கள் வரை.

4. பின் இடைக்காலம்—12 முதல் 18 வது நூற்றாண்டு வரை.

5. நவீன காலம்—18 வது நூற்றாண்டு முதல்.

மணிமேகலை காலம் இந்த ஐந்து கட்டங்களில் 3வது கட்டம் எனக் கொள்ள முடியும். இந்தியத் தத்துவங்களைப் பற்றி வெளி நாட்டவர்களின் நிர்ணயிப்பை வைத்து இந்த முடிவை வெளியிட்டுள்ளேன். பிரத்யேகத் தன்மை என்ன வென்றால், ஆதிமுதல் இரண்டுவித வாதங்கள்—எண்ண முதல், பொருள்முதல் என்பது—மோதி வந்துள்ளன. அனிகேவ் என்ற ஓர் சோவியத் நிபுணர் "Materialist Traditions in Indian Philosophy", "இந்திய தத்துவத்தின் பொருள்முதல் பாரம்பர்யம்" என்ற புத்தகத்தில் இவை களைக் காணலாம்.

இனி நாம் எடுத்துக் கொண்ட சாங்கியம் பற்றி 'மணிமேகலை'யில் உள்ளதைப் பார்ப்போம்.

(a) "எல்லாப் பொருளும் தோன்றுதற் கிடமெனச்
சொல்லுதல் மூலப்பகுதி"

தன்னை இத்தன்மையதென அறிவதற்கு அரியதாய் தானே முக்குணமாய், மனநிகழ்வு என்பதொன்றுமில்லாமல் மாட்சி அமைந்த பொதுவியல்பினை உடையதாய், எல்லாப் பொருளும் தோன்றுவதற்கு இடம் என்று சொல்லப்படும் பொருள் எதுவோ, அது **மூலப்பகுதி**யாகும்

(b) **மனம்** வெளிப்படும் தன்மையைப்பற்றி ஆசிரியர் விளக்குகின்றார். சித்தமாகிய மூலப்பகுதியிலிருந்து "மான்" என்று சொல்லும் புத்தி தத்துவம் வெளிப்படும்.

"அதன் கண் **ஆகாயம்** வெளிப்பட்டு,
அதன்கண் **வாயு** வெளிப்பட்டு
அதன்கண் **அங்கி** (நெருப்பு)யானது வெளிப்பட்டு
அதன்கண் **அப்பின்** (நீர்) தன்மை வெளிப்பட்டு
அதின் **மண்** வெளிப்பட்டு...."

அவற்றின் கூட்டத்தினின்று **மனம்** என்பது வெளிப்படும். லோகாயதம், புதவாதத்தின் ஊனங்களை இக்கருத்தின் மூலம் சாங்கியம் சரிக்கட்டுகிறது.

மனம், ஆகாயம், வாயு நெருப்பு, நீர், நிலம் இவற்றில் தோன்றும் விகாரத்தால் வாக்கு, பாணி, பாதம், பாயுறு, உபத்தம் என்று உண்டாகிய இவை 5ம் வெளிப்படும்.

"பூத விகாரத்தால் மலை, மரம் முதல்
ஓதிய வெளிப்பட்டு உலகாய் நிகழ்ந்து...."

மலை மரம் முதலியவை வெளிப்பட்டு உலகமாய் நிகழும். பின்னர் வந்த வழியே பிரளயமாக இறுதியில் அனைத்துமே அழியும்.

**புருட தத்துவம்**

புருட தத்துவம் என்றால் என்ன?
அறிவதற்கு எளிதாய்
முக்குணம் இல்லாததாய்
ஐம்பொறி உணர்விற்கு அன்றி
எப்பொருளும் தோன்றுதற்கு இன்றி
அப்பொருளை அறியும் உணர்வாய்
நித்தியமாய் உள்ளத்து உணர்வாய்
நிற்பதுதான் **புருட தத்துவம்.**

அப் புருட தத்துவத்தினால் அறியப்படும் பொருள்கள் 25ஆம். அவையாவன : நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்கள், மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்கள்; சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து உணர்வுகள்; வாக்கு, பாணி, பாதம், பாயுரு,

உபத்தம் என்பன ஐந்தும்; மனம், புத்தி, ஆங்களம், சித்தம் என்பன நான்கும்; உயிர் எனப்படும் ஆன்மாவையும் சேர்த்து 25 ஆகும். இந்த முறையில் சாங்கியவாதி தங்களுடைய தத்துவத்தை விளக்கி சொல்கிறார்.

## அடக்கு முறை

அரசியின் அடக்குமுறையை மணிமேகலை எதிர்க்கிறாள். அதைச் சற்று விரிவாகப் பார்க்கலாம். உதயகுமரனைக் காஞ்சனன் வாளால் எறிந்தான். உதயகுமரனும் உயிரிழந்தான். அதனையறிந்த மாதவர்கள் மணிமேகலையை மறைவாக வைத்துவிட்டு மன்னனிடம் பக்குவமாக எடுத்துச் சொன்னார்கள்; அரசன் நியாயத்தின் பக்கம் நிற்கிறான். மகன் தவறு செய்து விட்டான். தவறு தவறே என்று உணர்கிறான். எனவே உடனடியாக உதயகுமரனின் உடலை ஈமத் தீயில் ஏற்றிவிட்டு, கணிகையின் மகளான மணிமேகலையைக் காவல் செய்திடுக என சோழிக ஏனாதி (தளபதி)க்கு உத்தரவிட்டான். மணிமேகலையும் பாதுகாப்புக் கைதியாக வைக்கப் பட்டாள்.

நிற்க, ராசமாதேவிக்குப் புத்திரசோகம்; அரசன் அவளுடைய சோகத்தை மாற்றுவதற்கு வாசந்தவை என்ற மூதாட்டியை அனுப்பி வைத்தான். அவள் அறவுரையைக் கேட்ட பின்னரும் ராஜமாதேவியின் சோகம் தணியவில்லை. அதை மறைத்துக்கொண்டு அரசனிடம் "செங்கோல் வேந்தே! சிறைவீடு மணிமேகலைக்குத் தகுதியான இடமன்று" என்றாள். அரசனும் நம்பி மணிமேகலையை அரசியின் பொறுப்பில் விட்டுவிட்டான்.

பின்னர் அரசி கொடுமை செய்யத் துவங்கினாள்.

முதலில் பித்த மருந்தை ஏற்றினாள். ஆனால் மணிமேகலை மயக்கங் கொள்ளவில்லை. அடுத்து "நல்ல இளைஞன் ஒருவனை" அழைத்து நின்னோடு கூடினாள் என்ற குறியிடு என்றாள். அரசியின் வஞ்சகமென்றறிந்த

மணிமேகலை ஆண்மைக் கோலத்தையடைந்தாள். அவனும் பயந்து நகரத்தைவிட்டே ஓடிவிட்டான். அடுத்து, மணிமேகலையைக் கொன்றுவிடுவதென்றே திட்டமிட்டாள். ஒரு பொய்யான நோயைக் கற்பித்துக்காட்டி, அவளைப் புழுக்கமான ஓர் அறையில் அடைத்து வைத்தாள். ஆனால் எவ்வித பாதிப்பும் இன்றி நலமாக விருந்தாள்.

இவ்வாறு அரசியின் அடக்கு முறைகளைச் சமாளித்தாள். அடக்குமுறை செய்திடல் முடியும். ஆனால் கொள்கை ஒடுக்குமுறை செய்திடல் முடியுமோ? இல்லை. அடக்குமுறையை கட்டவிழ்த்து விட்டவர்களும் நடுங்குவதையும் திருத்துவதையும் இங்குச் சாத்தனார் சுட்டிக் காட்டியுள்ளார்.

> "செய்தவத் தாட்டியைச் சிறுமை செய்தேன்
> என்மகற் குற்ற இடுக்கண் பொறாது
> பொன்னேரனையாய் பொறுக்க"

அரசி நடுங்கினாள். உனக்குப் பல சிறுமைகளையும் செய்து விட்டேன். என் மகனுக்கு நேர்ந்த துன்பத்தைப் பொறுக்க மாட்டாமையினாலேயே செய்தேன். "திருமகள்" போன்றவளே என்னைப் பொருத்தருள்வாய் எனத் தொழுது நின்றாள்.

இது நல்ல சித்திரம். அடக்குமுறை செய்யும் ஸ்தானத்தில் உள்ளவர் மன்னிப்புக் கேட்கிறார். நல்ல பாடமும் கூட.

# 16

## மணிமேகலை சமயங்கள்

பவுத்தத்தில் பொருள் முதல் வாதக் கொள்கை ஓரளவு உண்டு. மணிமேகலை காலத்தில் நிலவிய சமயங்களில் 'சாங்கியம்' 'நியாய வைசேடிகம்' 'பூதவாதம்' என்பவை உலகத்தை அடிப்படையாக கொண்டவையாகும். அவை களைப் பற்றி விரிவாகக் காப்பியத்தில் உள்ளதை விளக்கலாமென நினைக்கின்றேன்.

சோவியத் யூனியனில் உள்ள இந்திய தத்துவங்களை விளக்கும் பேராசிரியர் அனிகேவ் என்பவர் 'இந்தியதத்துவங்களில் பொருள் முதல்வாத பாரம்பர்யம்' (Materialist Traditions of Indian Philosophy) என்ற சிறு நூல் எழுதியுள்ளார். தேவி பிரசாத் சட்டோபாத்யாயா எழுதியுள்ள 'இந்திய தத்துவம்' (Indian Philosophy) 'இந்திய நாத்திகம்' (Indian Atheism) 'லோகாயதம்' (Lokayat) போன்ற நூல்கள் இதற்கு உதவிகரமாக உள்ளன.

உணர்வும் ஆன்மாவும் பொருளால் தோன்றுவன உணர்வும் ஆன்மாவும் பொருளைத் தோற்றுவக்காது. பொருளே முதல், பிற அடுத்தவையே. உலக தத்துவத்தில் பொருள் முதல் வாதத்தையும், கருத்து முதல் வாதத்தையும் பிரிக்கும் எல்லைக்கோடு என 'ஏங்கல்ஸ்' குறிப்பிடுகிறார்.

இனி, ஆசிரியர் இவ்விஷயங்களை எம்முறையில் கையாளுகிறார் என்று பார்ப்போம். மணிமேகலை சமயக் கணக்கர்களைச் சந்திக்கச் செல்கிறாள்.

'இளையள் வளையோள் என்று உனக்கு யாவரும்
விளை பொருள் உரையார்; வேற்றுரு கொள்க'
(காதை 26;68-69)

இளமைப் பருவத்தினை உடையவள் வளையல்களை அணிந்திருக்கும் பெண்ணாவாள் என்று சொல்லி நினக்கு எவருமே தத்தம் சமயந்து உண்மைகளைச் சொல்ல மாட்டார்கள். ஆதலின் நீ வேற்றுருக் கொள்வாயாக என்று கண்ணகி கோட்டத்தில் கண்ணகி தன் மகளுக்குச் சொன்னாள்.

எனவே, தெய்வம் முன்னர்த் தனக்கு உபதேசித்திருந்த மந்திரத்தினை ஓதி, ஓர் தவ முனிவன் வடிவினை உடையவளாயினாள். அவ்வுருவத்துடன் வஞ்சி என்ற அழகிய நகரத்தினுள்ளே சென்றாள். அங்கு சமயக் கணக்கர்களைச் சந்தித்து அவரவர்களின் சமயக் கோட்பாடு களைக் கேட்டு அறிகிறாள்.

பின்னர் அவைகளின் குறைபாடுகளை அறவண அடிகள் எடுத்துச் சொல்லி, புத்த தர்மத்தை விளக்கியபின் 'பவத் திறம் அறுகென' தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறாள். இம்முறை மனதைக் கவருவதாக உள்ளது.

27-வது அத்தியாயம் 'சமயக்கணக்கர் தம்திறம் கேட்ட காதை' தமிழிலக்கியத்தில் 'மணிமேகலையில்' தான் இம்மாதிரியான தொகுப்பு உள்ளது என்று கருதுகிறேன். அவை 10 வகைப்படும்.

அவை:

1. அளவை நையாயிகர்;
2. சைவம்
3. பிரமம்

4. வைணவம்
5. வேதம்
6. ஆசீவகம்
7. நிகண்டம்
8. சாங்கியம்
9. வைசேடிகம்
10. பூதவாதம் என்பவையாகும்.

அளவைவாதிகள் : நையாயிகர்கள் எனப்படுவோர், தர்க்க வாதிகள் அளவை என்பது பிரமாணங்களாகும்.

அவர்கள் கடைப்பிடித்த கொள்கைகளின் சுருக்கம்:

'வேத வியாசனும் கிருத கோடியும்
ஏதமில் சைமினி எனும் இவ்வாசிரியர்
பத்தும் எட்டும் ஆறும் பண்புறத்
தத்தம் வகையால்தாம் பகர்ந்திட்டனர்
(காதை—27.5-8)

வேதவியாசனும் கிருத கோடியும் மீமாம்சை நூலை எழுதிய சைமினியும், பின்னர் வேதவியாசனின் 10 அளவைகளையும் கிருத கோடியின் 8 பிரமாண ஆபாசங்களையும் ஆசிரியர் விளக்குகின்றார். சைமினியின் 6 அளவைகளை ஆசிரியர் விளக்குகிறார் இல்லை. எனினும் ஒரு தொகுப்புரை வழங்குகிறார்.

அதாவது:

| | | |
|---|---|---|
| பிரகஸ்பதி | — | உலோகாயதம் |
| புத்தன் | — | புத்தம் |
| கபிலன் | — | சாங்கியம் |
| அக்கபாதன் | — | நையாயிகம் |
| கணாதன் | — | வைசேடிகம் |
| சைமினி | — | மீமாம்சம். |

இந்த 6 சமயங்களின் ஆசிரியர்களுடைய பெயர்களையும் குறிப்பிட்டுள்ளேன். அளவைகளை ஏற்பவை இவை என்பது ஆசிரியரின் துணிபு.

சைவம், பிரமம், வைணவம், வேதம் என்பவை சிவனை ஈசனாகவும், உலகம் பிரமன் இட்ட முட்டை எனவும், நீல வண்ணன் உலகத்தைக் காப்பவன் எனவும், வேத புருடனுக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை எனவும் விளக்கினார்கள்.

### ஆசீவம்

> ஆசீவர்கட்கு எல்லை இல்லாத பொருள்களில் எங்கும் எப்போதும் நீங்காது பொதிந்து கிடந்து தோன்றுகின்ற வரம்பில் அறிவுடையவனாகிய அவனே எங்களின் இறைவனாகும். எல்லாப் பொருள்களிடத்தும் அணுக்கள் நிறைந்துள்ளன. ஒவ்வோர் அணுவையும் தெய்வத் தன்மையுடைய கண்களை பொருந்தியவர்கள் தனித்தனியே கண்டு உணர்வார்கள்.

'இன்பமும் துன்பமும் இவையும், அணுவெனத் தரும்
முன்னுள ஊழே பின்னும் உறுவிப்பது

(காதை 27: 164-65)

எல்லாம் வினைப்பயனால் வருவது. எனவே அவற்றை அனுபவிப்பதன்றி யாதும் செய்ய இயலாது என்பது இம் மதத்தின் நெறியாகும்.

### நிகண்டம்

> இந்திரர்களால் தொழப்படுகின்ற இறைவனாகிய அருகனே எங்கள் இறைவனாகும். அவர் உரைத்த கொள்கைகள் 10.
>
> அவையாவன:
>
> தன்மாத்திகாயம், அதன்மாத்திகாயம், காலம், ஆகாயம், சீவன், பரமாணுக்கள், நல்வினை, தீவினை, பந்தம், வீடு.

ஆசிரியர் இந்த பத்து அம்சங்களையும் விளக்குகின்றார். பிறவியை அறுத்திடுதலே வீடு என முடிக்கிறார்.

இனி பொருள் முதல்வாத தத்துவங்களைப் பற்றி ஆசிரியரின் கருத்தைக் கவனிப்போம். அவையாவன:

1. சாங்கியம்
2. வைசேடிகம்
3. பூதவாதம்

இவைகளைப் பற்றிச் சற்று விரிவாகவே எழுதலாமென நினைக்கின்றேன். பொருள் முதல் கருத்துக்கு எடுத்துச் சொல்லப்படும் வாதங்கள் கவனிக்க உகந்தது.

**சாங்கியம்**

எல்லாப் பொருளும் தோன்றுதற்கு இடமென
சொல்லுதல் மூலப் பகுதி. (காதை 27: 205-6)

எல்லாப் பொருளும் தோன்றுவதற்கு இடமென்று சொல்லப்படும் பொருள எதுவோ அதுவே மூலப்பகுதி யாகும். இதற்குப்பின் ஆசிரியரின் தொகுப்பு அருமையாகச் சாங்கியத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

மூலப்பகுதியிலிருந்து 'மான்' என்று சொல்லும் புத்தி தத்துவம். அதனின்று ஆகாயம்; அதனின்று வாயு; அதனின்று நெருப்பு; அதனின்று நீர்; அதனின்று நிலம்; அவற்றின் கூட்டத்தினின்றும் 'மனம்' என்பது வெளிப்படும்.

மனத்துக்கு ஆங்காரம், செவிக்கு ஆகாயத்தில் எழும் ஒலி, மெய்க்கு வாயுவால் தாக்கம், கண்ணுக்கு நெருப்பினால் ஒளி, நிலத்தின் கண் மூக்குக்கு நாற்றம் இவை விகாரங்களாகும். உடம்பிலிருந்து வாக்கு, பாதம், பாணி, பாயுறு, உபத்தம் இவை ஐந்தும் வெளிப்படும்.

இப்பூத விகாரத்தால் மலை, மரம் முதலியனவாக சொல்லப்பட்டன. எல்லாமே வெளிப்பட்டு உலகமாகவும் நிகழ்ந்து, தாம் தாம் வந்த வழியே அவையவை சென்று ஒடுங்கி, ஒழிவில்லாத பிரளயமாய், இறுதியில் அனைத்துமே அழிவும், அளவும், ஒன்றாகி எவ்விடத்தும் பரந்து, நித்தியப் பொருள்களாகவே விளங்கும்.

இவற்றை உணர்ந்து கொள்ளுதல் புருடத்துவமாகும். புருடத்துவத்தால் அறிந்து கொள்ளும் பொருள்கள் 25.

அவையாவன: நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்ற பஞ்ச பூதங்கள்.

மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்புலன்களும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து உணர்வு களும் வாக்கு, பாணி, பாதம், பாயுரு, உபந்தம் என்ற ஐந்தும், மனம், புத்தி ஆங்காரம், சித்தம் என்ற நான்கும் இத்துடன் உயிர் எனப்படும் ஆன்மாவும் சேர்ந்து 25 ஆகும் (சாங்கியம் பற்றிய சுருக்கமான நல்விளக்கம்)

**வைசேடிகம்**

> பொய்தீர் பொருளும் குணமும் கருமமும்
> சாமானியமும் விசேடமும் கூட்டமும்
> ஆம் ஆறு கூறும். (காதை 27;241-3)

பொருள், குணம், கருமம், சாமானியம், விசேடம், கூட்டம் என்று சொல்லப்படும் ஆறு கூறு பாட்டினை யுடையது பொருளாம்.

> பொருள் என்பது,
> குணமும் தொழிலும் உடைத்தாய், எத்தொகைப்
> பொருளுக்கும் ஏதுவாம்; அப்பொருள் ஒன்பான்.
> (காதை 27;244-6)

பொருள் என்பது குணமும் தொழிலும் உடையதாய் தொகுதிப் பொருள் வகை எல்லாவற்றிற்குமே மூலகாரண மாக விளங்குவதாகும். அப்பொருளும் ஒன்பது வகைப்படும். அவை; நிலம், நீர், தீ, வளி, அகாயம், திசை, காலம், அன்மா மனம், என்பன. இவற்றுள் ஒலி, ஊறு, நிறம், சுவை, நாற்றம் என்ற ஐந்தும் பொருந்தி வரும் குணபாவத்தை யுடையது. ஏனைய நான்கும் அக்குணம் ஐந்தனுள் முறையே ஒவ்வொரு குணம் குறைவுடையதாக அமைந்து விளங்கும்.

ஓசை, ஸ்பரிசம், நிறம், நாற்றம், சுவை என்பனவும் பெருமை, சிறுமை, வன்மை, மென்மை, சீர்மை, நொய்மை எனப்படும்— பண்புகளும்; இடம், வலம் முதலிய திசைகளும் மேற்சொல்லப்பட்ட பொருளின் குணங்களாகும்.

''பொருளும், குணமும், கருமம் இயற்றதற்கு
உரிய (காதை 27, 257—58)

.........................

'சாதலும் நிகழ்தலும் அப்பொருள் தன்மை
(காதை 27, 260)

விசேடமாவது ஒன்றாகிய அணு.

## பூதவாதி

பூதவாதம்: இதன் அஸ்திவாரம் லோகாயதமாகும். பூதவாதம் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். பூதவாதி ஓர் உதாரணம் கொடுக்கிறார். அத்திப்பூ, கரும்புக் கட்டி சேர்ந்து வேறு சேர்மானத்துடன் மதுவாகிறது. அதே போல பூதங்களின் கூட்டத்தால் உணர்வு பிறக்கும். கலைந்தால் அழியும், மூலப்பொருளுடன் சேரும்.

''உற்றிறு பூதத்து, உணர்வு தோன்றிடும்
அவ்வுணர்வு அவ்வப்பூதத்து அழிவுகளின்
வெவ்வேறு பிரியும்'' (காதை 27, 266—68)

மேலும் கூறுவான்.

உயிரொடுங் கூட்டிய உணர்வுடைப் பூதமும்
உயிரில்லாத உணர்வில் பூதமும்
அவ்வப்பூத வழி அவை பிறக்கும்
மெய்வகை இதுவே; வேறுரை விகற்பமும்
உண்மைப் பொருளும் உலோகாயதன் உணர்வே
கண்கூடு அல்லது கருத்தளவு அழியும்
இம்மையும் இம்மைப் பயனும் இப்பிறப்பே
பொய்மை மறுமை உண்டாய் (காதை 27, 269-76)

காட்சி அவசியம். மறுபிறப்பு என்பது பொய்.

# 17

## மணிமேகலை—தத்துவ விசாரணை

### ஆசிவகம்

இதன் சில அம்சங்களை ஏற்கனவே கண்டுள்ளோம். நால்வகை அணுக்களைப் பற்றியும அணுக்களின் தன்மை பற்றியும், பரமாணுக்களைப் பற்றியும், அணுவை உணரும் முறை பற்றியும் கண்டோம். ஒவ்வோர் அணுவையும், தெய்வத்தன்மையுடைய கண்களை உடையவர் தனித்தனியே கண்டு உணர்வார்கள். மற்றோர் அவ்வணு உண்மைகளை அறிந்து தெளிவுகொள்ள மாட்டார்கள்-பின்னர் வெள்ளை நிறத்தைப் பற்றி ஆசிரியர் விளக்குவார். அந்நிறத்தில் அடங்கியுள்ள ஏழு நிறங்களையும் முறையே சொல்வார். உயர்ந்த பிறப்பு வெண்மையான பிறப்பாம். இனி ஆசிரியரின் கூற்றைக் கவனிப்போம்.

கரும்ம் பிறப்பும், கருநீலப் பிறப்பும்
பசும்ம் பிறப்பும் செம்ம் பிறப்பும்
பொன்ன் பிறப்பும் வெண்ண் பிறப்பும்
என்று இவ்வாறு பிறப்பினும் மேவிப்
பண்புறு வரிசையின் பாற்பட்டுப் பிறந்தோர்
கழிவெண் பிறப்பிற் கலந்து வீடு அணைகுவர்
அழியல் வேண்டார் அதுவு நற்பாலார்

இது செம்போக்கின் இயல்பு இதுதப்பும்
அது மண்டலம் என்று அறியல் வேண்டும்.

அதாவது, கருமையான பிறப்பாகவும், கருநீலமான பிறப்பாகவும், பச்சையான பிறப்பாகவும், சிவப்பான செம்மையான பிறப்பாகவும், பொன் வண்ணப் பிறப்பாகவும், வெண்மைப் பிறப்பாகவும் இவ்வறுவகைப் பிறப்புகளில் பிறந்து பண்புகளை அடைகின்ற முறையினால் பிறந்தோர் மிக வெண்மையான பிறப்பிற் கலந்து மோட்சத்தை (வீடு) அடைவார்கள். தாம் அழிந்துபோவதை விரும்பாதவர்கள் அவ்வீட்டை அடைதற்குரிய, மிக வெண்மையான பிறப்பை அடையத் தகுதியுள்ளவர்களாம். இதுவே செம்போக்கு என்று சொல்லப்படும் நன்னெறி முறையாம். இதில் தவறினால் அந்நெறியே மண்டல நெறி என அறிதல் வேண்டும்.

மற்கலி கோசர் என்பவர் ஆசீவகருள் ஒருவர். எல்லாம் முன்வினைப் பயனால் வருவது. அனுபவிப்பதன்றி அதை மாற்ற இயலாது என்பது இம்மதத்தின் நெறியாகும்.

"முன்னுள ஊழே பின்னும் உறுவிப்பது
மற்கலி நூலின் வகையிது"

ஆசீவக விளக்கமே குழப்பம் என முடிக்கிறார் ஆசிரியர்- சொற்றடு மாற்றம்—பல சமயக்கணக்கர் திறம் கேட்டாள் மணிமேகலை. அடுத்து நிகண்டவாதியைப் பார்த்து.

நின்னாற் புகழும் தலைவன் யார்?

நூற் பொருள் யாவை?

'அப்பொருள்களின் நிகழ்வும் கட்டும் வீடும் எனக்கு உண்மை படும்படியாக விளக்கிக் கூறுவாயாக' என்றனள். நிகண்டவாதியும் தன் கொள்கைகளை விளக்கிக் கூறுவான்.

## நிகண்ட வாதம்

முன்கட்டுரையின் தொடர்ச்சி :-

இந்திரனால் தொழப்படும் அருகனே எங்கள் இறைவனாம். அவர் தந்த நூற்பொருள் கீழ்க்கண்டவை யாம். அதாவது தன்மாத்தி காயம், அதன்மாத்தி காயம்,

காலம், ஆகாயம், தீது இல்லாத சீவன் (குற்றமற்ற சீவன்,) பரமாணுக்கள், நல்வினை, தீவினை, அவ்வினையால் செய்யவுறுபந்தம், வீடு ஆகியவையாம். இப் பொருள்களில் இவ்வகைகளை விளக்குவதற்கு முன்னால் இப்பொருள் மூன்று தன்மையுடையது எனச் சாற்றுகிறார். தன் தன்மையதாகவும், சார்ந்து தோன்றிய மற்றொருதன்மைய தாகவும் அநித்தியமும் நித்தியமும் ஆகின்ற நிலை பெரும் ஒரு கணத்திலே தோற்றமும், நிலையும், கேடும் என்று சொல்லப்படும் மாற்றுதற்குரிய மூன்றுவகைத் தன்மைகளை யுடையதாம்.

நித்ய அநித்யம் என்றால் என்ன?

''நிம்பம் முளைத்து நிகழ்தல் நித்யம்
நிம்பத்தப் பொருள் அன்மை அநித்யம்''

வேம்பின் முளையானது முளைத்து, அது வேம்பாகவே விளங்குதல் போன்றது நித்யம். வேம்பினிடம் விதையாகிய பழைய பொருள் இல்லாமலிருப்பது போல்வது அநித்யம், பயற்றின் தன்மை கெட்டுப்போகாது அப்பொருளான பயறும், அழிந்து போதலையும் அறியலாம். இனி தருமாத்தி காயம், அதன்மாத்திகாயம், காலம், ஆகாயம், தீது இல்சீவன், வீடு முதலியவற்றிற்கு ஆசிரியர் இலக்கணம் கூறுகிறார். அதைச் சற்று கவனிப்போம்.

**தருமாத்திகாயம் என்றால் என்ன?**

உலக நிகழ்ச்சிகளுக்கு ஏதுவாகத்தான் எங்கும் உளதாய் அனைத்தையும் அவற்றின் வினைக்கு ஏற்ப நடத்துவதாம்.

தருமாத்திகாயம் தானெங்கும் உளதாய்ப்
பொருள்களை நடத்தும், பொருந்த

**அதன்மாத்தி காயம் எனறால் என்ன?**

நிலையான இயல்பினை உடையதாகி எல்லாப் பொருள் களையும் நிலை நிறுத்தலாகிய செயலை விளைவிப்பதாம்.

..........அதன்மாத்திகாயமும்
எப்பொருள்களையும் நிறுத்தல் இயற்றும்

**காலம் என்றால் என்ன?**

காலம் என்பது, கணிகம் என்ற குறுகிய நிகழ்ச்சியும் கற்பம் எனும் நெடிதான நிகழ்ச்சியும் உண்டாக்கும் தன்மையதாம்.

காலம், கணிகம் எனுங் குறு நிகழ்ச்சியும்
ஏலும் கற்பத்தின் நெடு நிகழ்ச்சியும்.

**ஆகாயம் என்றால் என்ன?**

ஆகாயமானது எல்லாப் பொருள்கட்கும் பொருந்துமாறு விரிந்து இடம் கொடுக்கும் செயல் உடையதாம்.

ஆகாயம் எல்லாப் பொருள் கட்கும்
பூக்கும் இடம் கொடுக்கும் புரி விற்று ஆகும்.

**சீவன் என்றால் என்ன?**

சீவன் என்பது உடம்போடு சேர்ந்திருந்து குற்றமற்ற சுவைகள் போன்ற புலன் நுகர்களை அனுபவிப்பதாம்.

சீவன் உடம்போடு ஒத்துக் கூடி
தாவில் சுவை முதலிய புலன்களை நுகரும்.

**வீடு எப்படி கிட்டும்?**

புற் கலமென்பது ஓர் அணுவாம். அது பொருள் கட்குப் புற உருவாகவும் அமையும் தன்மையதாம். நல்வினை, தீவினை செய்யும். இவ்விரண்டையும் மாற்றி நல்வினைப் பயன்களை அனுபவித்து பிறவி அறுத்திடுதல் வீடு எனப்படும்.

ஓரணு புற்கலம், புற உருவாகும்
சீர்சால் நல்வினை தீவினை—அவை செயும்
வருவழி இரண்டையும் மாற்றி முன்செய்
அரு வினைப்பயன் அனுபவித்து, அறுத்திடுதல்
அது வீடாகும்,....

இவ்வண்ணம் நிகண்டவாதி தன் மதத்தைப் பற்றி எடுத்துச் சொன்னான்.

# 18

## சில சிந்தனைகள்

மணிமேகலை தமிழ் இலக்கியத்திலுள்ள சிறந்த நூல்களில் ஒன்று ஐம்பெரும் காப்பியங்கள் எனப்படுபவை சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, சீவகசிந்தாமணி ஆகும். இவ்வளவு உயர்ந்த ஓர் கதைக்குள்ளே புக எனக்கு எப்படி துணிவு ஏற்பட்டது. ஓர் மாணவனின் ஆசை என்றே குறிப்பிட விரும்புகிறேன். என்னுடைய சிந்தனைகளை அதிகம் பயன்படுத்தவே விரும்புகிறேன். சேலம் சிறையில் 1962-63 வருடங்களில் பாதுகாப்பு கைதியாகவிருந்த சமயம் மணிமேகலையை புலியூர் கேசிகன் தெளிவுரையுடன் படித்தேன். 1958 அல்லது 1959-ம் வருடம் என்று நினைக்கின்றேன். அன்று டெல்லியில் தமிழர்கள் மத்தியில் பேசிய திருவாளர் ம. பொ. சிவஞானம் அவர்கள் சிறையில்தான் அமைதியாகவும் ஆழமாகவும் இளங்கோவின் சிலப்பதிகாரத்தைப் படித்ததாகவும் குறிப்பிட்டார். கூல வாணிக சீத்தலை சாத்தனாரின் மணிமேகலையையும் சிறையில் நான் விரும்பிப் படித்தேன். எனக்குத் தோன்றிய அளவு குறிப்புகள் எடுத்துக் கொண்டேன். என் சிற்றறிவுக்கு ஏற்ப எழுதுவதென்றும் முடிவு செய்து கொண்டேன். குறைபாடுகளும் அறியாமையில் எழுந்த பல தவறுகளும் கண்டிப்பாக இருக்கத்தான் செய்யும்.

9.9.62-ம் தேதி வெளியான "குமுத"த்தில் இவர் யார் என்ற தலைப்பில் என்னைப்பற்றிய சிறுகுறிப்பொன்று வெளியாகியிருந்தது. அதைத் தயாரித்து அனுப்பியவர் வ.உ.சி.யின் பேரனான இளங்கோவாகும். மணிமேகலையில் எனக்கிருக்கும் பற்றுதலை அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

நான் 1930, 1931 வருடங்களில் மதுரைக் கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எங்களுடைய தமிழ்ப் பண்டிதர் காலஞ் சென்ற திரு. சீனிவாச அய்யங்காராகும். வரதராஜன் என்ற மாணவனும் நானும் அக்காலத்தில் தமிழை ஆர்வமாகப் படிப்பவர்கள். எங்கள் பேராசிரியர்தான் மணிமேகலையின் பேரில் பற்றுதல் உண்டாகச் செய்தார். ஆபுத்திரனை உத்தமபுத்திரன் என வர்ணிப்பார்; அறவண அடிகளைச் சமய சஞ்சீவி என்பார். பள்ளிப் பாடமாக போடப் பட்டிருந்த மணிமேகலையின் பகுதிகளைப்பற்றியும் இதர அம்சங்களைப்பற்றியும் அருமையான முறையில் விளக்கம் கொடுப்பார். பாடப்புத்தகத்தில் சில பகுதிகள்தான் போடப் பட்டிருந்தது. இருப்பினும் அவற்றிலும் சுவையான அம்சங்கள் இருந்தன. அவற்றில் சில எனக்கு இன்னும் ஞாபகத்தில் உள்ளன. அவையாவன:—

(1) "வினையின் வந்தது
 வினைக்கு விளைவு ஆயது;
புனைவன நீங்கின்
 புலால் புறத்திடுவது
மூப்பு விளிவுடையது
 தீப்பிணி இருக்கை
பற்றின் பற்றிடம்
 குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற்
 செற்றச் சேக்கை
அவலக் கவலை
 கையாற முங்கல்

தவலா உள்ளம்
தன்பால் உடையது
மக்கள் யாக்கை
இது வென ......''

மணிமேகலையைப் பின்தொடர்ந்து வந்து உவவனத்துக்குள் பளிக்கறை மண்டபத்தில் அவள் புகுந்தவுடன் சுற்றிச் சுற்றி வரும் சோழ நாட்டு மன்னனின் மைந்தன் இளவரசன் உதயகுமரனைப்பார்த்துச், சுதமதி மேற்கண்டவாறு சொன்னாள். யாக்கையின் தன்மையைப் பற்றி விவரித்துச் சொன்னாள்.

(2) ''கோன் நிலை திரிந்திடிற்
கோள்நிலை திரியும்
கோள்நிலை திரிந்திடின்
மாரி வறங்கூரும்
மாரி வறங்கூரின்
மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம்
மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும்
தகுதியின் றாகும்.

மணிமேகலையை அடைய வேண்டும் என்ற நினைவுடன் உதயகுமரன் காத்துக் கொண்டிருக்கிறான். அவன் முன் மணிமேகலாத் தெய்வம் தோன்றி மேற்கூறியவாறு சொன்னது. அரசன் நிலைதடுமாறாமல் இருக்க வேண்டும் என்பதே இதன் கருத்தாகும்.

(3) ''ஆற்றுநர்க்கு அளிப்போர்
அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள்
அரும்பசி களைவோர்
மேற்றே உலகின்
மெய்நெறி வாழ்க்கை

மண்டிணி ஞாலத்து
வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர்''
உயிர் கொடுத்தோரே''

ஆபுத்திரனுடைய அமுத சுரபி மணிபல்லவத்திலுள்ள கோமுகி என்னும் தடாகத்திலிருந்து மணிமேகலைக்குக் கிடைக்கிறது. அவ்வமயம் தீவதிலகை, மணிமேகலைக்கு மேற்கண்டவாறு சொல்வாள். நீ மக்களின் பசிப்பிணியை அமுத சுரபியின் மூலமாகத் தீர்க்கவேண்டுமென்பது அவளுடைய வேண்டுகோளாகும்.

(4) ''இளமையும் நில்லா
யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும்
செல்வமும் நில்லா
புத்தேளுலகம்
புதல்வரும் தாரார்
மிக்க அறமே
விழுத்துணையாவது''

மேலே குறிப்பிட்டுள்ளது மதுரையில் பணம் சேர்த்து வந்த மாமன் மகனாகிய தருமதத்தனுக்கு விசாகை செய்யும் உபதேசமாகும்.

(5) ''தெய்வம் தொழாஅள்
கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும்
பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன்
பொருளுரை தேறாய்''

மேற்கூறியவாறு பூதம் கவலையுடன் இருந்த மருதியிடம் சொல்லும்: மாதவர்கள் உதயகுமரன் மரணத்தைப் பற்றி அரசனுக்கு எடுத்துக் கூறியபோழ்து கையாண்ட ஓர் உதாரணமாகும்.

இந்த ஐந்து பகுதிகளும் எங்களுக்குப் பாடப் புத்தகத்திலிருந்தன. மணிமேகலையைக் கற்றுணர்ந்த அன்பர்கள் அறிவார்கள் இவற்றை. இப் பகுதிகள் கதையின் பல கட்டங்களில் வரக்கூடியவை. இவற்றைப் படிக்கும்போது மாணவனுக்கு மேலும், மேலும் மணிமேகலையைப் படிக்க வேண்டும் என்ற ஆசை கண்டிப்பாக ஏற்படுமல்லவா?

## மணிமேகலையின் கதைச் சுருக்கம்

மணிமேகலை கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். கோவலனும் மாதவியும் சிலப்பதிகாரத்தில் முக்கியமான பாத்திரங்கள் அல்லவா? மணிமேகலை பிறந்து வளர்ந்ததெல்லாம் புகார் என்ற காவிரிப்பூம் பட்டினமாகும். அழகிற் சிறந்தவளான மணிமேகலை நாட்டியத் தொழிலில் ஈடுபடாமல் தவத்துறையில் ஈடுபடுகிறாள். கோவலன் இறந்தபின் மாதவியும் அப்படியே. மணிமேகலைக்கு வளர்ப்புத் தாய்போல் செயலாற்றும் சுதமதியும் ஓர் முக்கியமான பாத்திரம். மணிமேகலை, மாதவி, சுதமதி ஆகிய மூவரும் அறவண அடிகள் என்ற வயது முதிர்ந்த புத்த சன்னியாசியின் உபதேசம் கேட்பவர்கள். புத்தர் வழியைப் பின்பற்றுகின்றார்கள். மாதவியின் தாயாரான சித்திராபதிக்கு மணிமேகலை தன்குலத்தொழிலை மறந்தது பிடிக்கவில்லை. இந்திரவிழாவில் தன்பங்கை ஆற்றாத மணிமேகலையின் செய்கை வருத்தத்தைக் கொடுக்கிறது. அரசகுமரன் உதயகுமரனிடம் அவளைச் சேர்க்க விரும்புகிறாள். இந்திரவிழாவன்று உதயகுமரன் அவளைத் தொடர்ந்து உவவனம் புகுந்தான். அவளை அணுகுவது தவறு என சுதமதியாலும் மணிமேகலாத் தெய்வத்தாலும் எச்சரிக்கப்படுகிறான். ஆனாலும் அவளை அவன் மறந்தானில்லை.

நிற்க, மணிமேகலையை மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்துக்குத் தூக்கிச் செல்கிறது. அங்குத் தன்னுடைய பூர்வஜென்மத்தை அறிந்து கொள்கிறாள். ஆபுத்திரன் சாகும் போது போட்ட அமுதசுரபி கோமுகி என்னும்

தடாகத்தில் கிடைக்கிறது. ஊர் திரும்பி, பத்தினிப் பெண்ணான ஆதிரையிடம் முதல் பிச்சை எடுத்து, அவலட்சண உருவமான காயசண்டிகை உருவம் எடுத்து மக்களுக்கு அன்னமிடுகிறாள். சிறையிலுள்ளவர்கட்கு அமுதசுரபியிலிருந்து உணவு கொடுக்கிறாள். அவளுடைய விருப்பத்திற்கிணங்க அரசன் சிறைக் கோட்டத்தை அறக் கோட்டமாக்குகிறான்.

காயசண்டிகையை உதயகுமரன் அணுகும்போது மேற்படி உருவத்திலுள்ள தன் மனைவி என நினைத்து விஞ்சையன் ஒருவன் உதயகுமரனைத் தன் வாளால் கொன்றான். முற்பிறப்பில் உதயகுமரன் இராகுலன் என்ற பெயருடன் மணிமேகலையின் புருஷனாயிருந்தான் எனவே மணிமேகலை சற்றுக் கவலையடைந்தாள். பின்னர் மனம் தேறினாள்.

சோழ அரசன் மணிமேகலையைச் சிறைப்படுத்துகிறான். பின்னர் அரசமாதேவி அரண்மனைக்கே மணிமேகலையை அழைத்துக் கொள்கிறாள். புத்திர சோகத்தால் மணிமேகலைக்குப் பல துன்பம் கொடுக்கிறாள். விஷம் கொடுத்தாள், பட்டினி போட்டாள், கற்பழிக்க ஏற்பாடு செய்தாள். தோல்வியடைந்த அரசி மணிமேகலையிடம் மன்னிப்பு கோருகிறாள்.

அரசமாதேவியிடம் விடைபெற்றுக் கொண்டு மணிமேகலை சாவக நாட்டுக்குச் செல்கிறாள். அங்கு பூர்வ ஜென்மத்தில் ஆபுத்திரனாகவிருந்த புண்ணியராசனைச் சந்தித்து அவனை மணிபல்லவத்துக்கு வரும்படியாகச் செய்கிறாள். அங்கிருந்து வஞ்சி நகர் செல்கிறாள். கண்ணகியைத் தொழுகிறாள். கோவலன் தகப்பனாராகிய மாசாத்துவானைச் சந்திக்கிறாள். சமயக் கணக்கர்களிடம் ஆண்வேடம் தரித்துச் சென்று அவர்களுடைய திறம் கேட்டாள்.

இறுதியாகக் காஞ்சிபுரம் செல்கிறாள். அங்குப் பஞ்சம் பீடித்துள்ளது. பசிப்பிணி நீக்குகிறாள். புகார் நகரம் கடலுக்குள் புகுந்துவிட்டது. சுதமதியும், மாதவியும், அறவண அடிகளும் காஞ்சிக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு அறவண அடிகளிடம் தவத்திறம் பூண்டு தர்மம் கேட்டாள் ''தன்பவத்திறம் அறுக'' என நோன்பிலே ஈடுபடுகிறாள்.

இதுவே கதைச் சுருக்கம். பல இடைக்கதைகளும் உபகதைகளும் பின்னிக் கிடக்கின்றன. உபகதைகளை வைத்துப் பல நவீன கதைகள் எழுதலாம். நம்ப முடியாத சம்பவங்கள் பல உண்டு. எனினும் கதை சொல்லியிருக்கும் முறையானது மிகவும் அருமையான முறையாகும்.

## மணிமேகலை ஆசிரியரும், காலமும்

மணிமேகலையின் ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனாரும், சங்க இலக்கியங்களில் வரும் சீத்தலைச் சாத்தனாரும் இருவரும் ஒருவரல்ல, வேறு வேறு. இவர் வாணிக மரபினர் என்பதும் புத்த நெறியைச் சார்ந்தவர் என்பதும் அறியக் கிடக்கின்றன. இவரை மதுரை நகரைச் சேர்ந்த ஓர் வணிகர் என்று சொல்வாருமுண்டு.

மணிமேகலையின் ஆசிரியரான சாத்தனும் சிலப்பதிகாரத்தின் ஆசிரியரான இளங்கோவும் ஒரே காலத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சொல்கின்றனர். மணிமேகலையின் முகவுரையில் (பதிகத்தில் இளங்கோ விரும்பிக் கேட்க சாத்தன் அறியவைத்தான் எனச் சொல்லப்படுகிறது.

''இளங்கோ வேந்தன்
அருளிக் கேட்ப
வளங்கெழு கூல
வாணிகன் சாத்தன்
மா வண் தமிழ்த்திறம்
மணிமேகலை துறவு
ஆறைம் பாட்டினுள்
அறியவைத் தனன்''

மணிமேகலையின் துறவு என்பது குறித்த இந்நூலினை முப்பது பாட்டினதாக, நாமனைவரும் அறியுமாறு செய்து வைத்தனன்.

சிலப்பதிகாரம் முதலில் எழுதப்பட்டது என்றும், அதற்குப் பின்னர் தான் திருக்குறள் எழுதப்பட்டதெனவும், கடைசியாக எழுதப்பட்ட காப்பியம்தான் மணிமேகலை என்று சொல்வாரும் உண்டு. ஒன்று மட்டும் நிச்சயம், குறளுக்கு பிந்திய காலம் எனலாம். காரணம் என்னவெனில் சிலகுறள் வெண்பாக்களை மேற்கோளாகக் கையாண்டுள்ளார் ஆசிரியர். உதாரணமாக மருதிக்குப் பூதம் சொல்வதாக வரையும் இடத்து,

"தெய்வம் தொழா அள்,
கொழுநற்றொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும்
பெருமழை என்ற அப்
பொய்யில் புலவன்
பொருளுரை தேறாய்"

எனக் குறிப்பிடுகிறார். இதில் குறளைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

ஆதிரையின் கணவனான சாதுவன் நாகர் தலைவர் கட்கு செய்யும் உபதேசமாவது,

"பிறந்தவர் சாதலும்,
இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும்
போன்றது உண்மையின்"

இதே மாதிரியான கருத்துடைய குறள் ஒன்று உண்டு.

"உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு"

அக்காலகட்டத்தில் இக்கருத்துக்கள் பொதுவாக நிலவி யிருக்கலாம். கிரேக்க தேசத்திலும் இம்மாதிரியான கருத்துக்கள் உள்ளன.

மணிமேகலை எழுதப்பட்ட நூற்றாண்டு எது என்பதில் அபிப்பிராயபேதம் உண்டு 2000 வருடங்களுக்கு முற்பட்டது என்பாரும் உளர். சங்ககாலத்தைப் பற்றியும் கருத்து வேற்றுமைகள் உண்டு. சங்ககாலம் என்பதே 000 வருடங்களுக்கு முன் ஆரம்பித்து 1500 ஆண்டுகட்கு முன்பு வரைதான் என்று சரித்திரப் பேராசிரியர்களான நீலகண்ட சாஸ்திரி, சத்தியனாதய்யர் போன்றவர்கள் அழுத்தமாகச் சொல்கின்றனர். மேற்படி காலத்தின் இறுதியில்தான் மணிமேகலை எழுதப்பட்டது எனக் கொள்ளலாம். அக்காலத்தில் தமிழ்மொழி உன்னத நிலையை அடைந்திருந்தது என அநேகமாக இன்று எல்லோரும் ஒத்துக் கொள்கிறார்கள்.

சங்ககால இறுதியில் வெளியான பாடல்களில் கவலையும் துன்பமும் வர்ணிக்கப்படுகின்றன. அந்த ரகத்தில்தான் மணிமேகலையையும் சேர்க்கலாம். சிற்றின்பத்தையும் ஆடம்பர வாழ்க்கையையும் மணிமேகலை கண்டிக்கிறது.

சங்க இலக்கியத்தின் அமைப்பு (Form) மணிமேகலையில் கிடையாது என பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அம்மாதிரியே சிலப்பதிகாரம் கடைச் சங்க காலத்துக்கு பிற்பட்ட நூலென வையாபுரிப் பிள்ளை அபிப்ராயப்படுகிறார்.

நமது முடிவு:

1500 வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்டது; சிறந்த இலக்கியம். ஆசிரியர் கூலவாணிகன் சாத்தனார். அன்னார் புத்த நெறியைப் பின்பற்றியவர்.

### நான் கண்ட சில பிரத்யேக விசேடங்கள்

சாதாரணமாகப் பண்டைக்கால இலக்கியங்களிலும், இதிகாசத்திலும், காப்பியங்களிலும் பிரதான புருஷர்கள் யார்? யார் கடவுளாகயிருப்பார்கள்; அவதார புருஷர்களாயிருப்பார்கள்; அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக

விருப்பார்கள்; உயர்ந்த சாதியினராகவிருப்பார்கள். ராமாயணத்தின் கதாநாயகனான ராமன் ஓர் அரசகுமாரன்; அவதார புருஷனுங்கூட-மகாபாரதத்தில் நாம் காண்பது தருமர், கிருஷ்ணன் போன்றவர்களாகும். தர்மர் அரசகுமாரன். கிருஷ்ணன் கடவுளின் அவதாரம். புராணங்கள் கடவுள்களின் லீலைகளை வர்ணிக்கின்றன. சீவக சிந்தாமணியின் கதாநாயகனான சீவகன் அரசகுமாரனாகும். சிலப்பதிகாரத்தில்கூட பிரதான கதாபாத்திரமாக அமைந்துள்ளவர்கள் வணிகரான கோவலனும் அவன் மனைவியான பத்தினித் தெய்வமெனப் போற்றப்படும் கண்ணகியுமாவார்கள்.

ஆனால் மணிமேகலையில் நாம் காண்பதென்ன? பிரதான பாத்திரமாக விளங்குவது இளமை கொழிக்கும் மணிமேகலையாவாள். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள். மாதவி தாசி. அரச மைந்தனான உதயகுமரன் அவளை,

> "கற்புதானிவள்;
> நற்றவ உணர்விலள்
> வருணக் காப்பிலள்;
> பொருள் விலையாட்டி"

என அவமானமாகப் பேசுகிறான். மாதவியின் தாயாராகிய சித்திராபதி தங்களுடைய குலத்தைப்பற்றிக் கீழ்க்கண்டவாறு சொல்வாள்.

> "பத்தினிப்பெண்டிர்
> அல்லோம் பலர்தம்
> கைத் தூண் வாழ்க்கை
> கடவிய மன்றோ"

மணிமேகலையின் வாழ்க்கை மிகவும் போற்றத்தக்க வாழ்க்கையாக அமைகிறது.

இரண்டாவதாக நான் குறிப்பிட விரும்பும் பாத்திரம் ஆபுத்திரனாகும்.

அமுத சுரபியைச் சிந்தாதேவி ஆபுத்திரனுக்குக் கொடுத்தாள். பின்னர் கோமுகித் தடாகத்திலிருந்து மணிமேகலைக்குக் கிடைத்தது. ஆபுத்திரனின் தாயாரான சாலி என்பாள் பார்ப்பணியாகும். வாரணாசியில் காசியில்) வேதம் ஓதும் அபஞ்சிகனின் மனைவியாவாள். சோரம் செய்ததால் பயந்து குமரியை நோக்கி வருகிறாள். காவேரிக் கரையில் ஓர் ஆண் மகனைப் பெற்றாள். அவனே ஆபுத்திரன். குழந்தையைக் கைவிட்டு தாய் தெற்கே சென்றாள். குழந்தையை ஓர் பசு ஏழுநாள் பால் சுரந்து வளர்த்தது. ஆகவே அவன் பெயர் ஆபுத்திரனாகும். பிராமணனான இளம்பூதி என்பவன் குழந்தையை வளர்க்கிறான். ஆபுத்திரன் சிறு பையனாக இருக்கும்போது வேள்விக்கு அந்தணர்களால் கொண்டுவரப்பட்ட பசுவை விடுவிக்கிறான். ''திருமால் மகன் பிரமன் அருளிய அரிய மறைகளை நீ அவமதிக்கிறாய். நீ அந்தணன் மகன் ஆக மாட்டாய். நீ ஆமகன்'' அதாவது பசுவின் புதல்வன் எனக் கேவலமாகப் பேசினார்கள். அதற்கு ஆணியறைந்தது போல் மறுமொழி கொடுத்தான். முனிவர்களில் அசலன் என்பவர் பசுவின் மகன்; விரிஞ்சி புலியின் மகன், ரிஷ்யசிருங்கர் மானின் மகன் (கலைக்கோட்டு மகரிஷி); கேசகம்பளன் நரியின் மகனாகும். அப்படியிருக்க ஆகுலம் இழிகுலமாகுமா?

''ஆன் மகன் அசலன்;
மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சி;
புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ
கேசகம்பளன்''

அக்கூட்டத்தில் ஒருவன் 'இவன் நடத்தை கெட்ட சாலியின் மகன்' என்று ஏளனமாகப் பேசினார்கள். ஆபுத்திரன் பதில்: பிரமனால் தோற்றுவிக்கப்பட்ட தேவதாசி திலோத்தமையின் காதற் சிறுவர்களன்றோ அந்தணர்களான வசிஷ்டரும், அகத்தியரும்?

"முதுமறை முதல் வன்முன்னர் தோன்றிய
கடவுட் கணிகை காதலஞ் சிறுவர்
அருமறை முதல்வர் அந்தணர் இருவரும்"

இந்த இரண்டு சம்பவங்களும் ஆபுத்திரனின் சிறப்பைப் பளிச்சென எடுத்துக் காட்டுகின்றன. மிகமிக அருமையான பாத்திரம்.

**சுதமதி**: மணிமேகலைக்கு ஓர் வளர்ப்புத் தாய் போன்றவள் பார்ப்பனக் குலத்துதித்த கௌசிகன் என்பவனின் மகள். தனிமையாகச் சென்றதால் மாருதவேகன் என்ற விஞ்சையனால் வயப்படுத்தப்பட்டாள். தேடிவந்து தன் மகளை புகார் நகரில் கண்டான் கௌசிகன். இருவரும் இரந்துண்டனர். காயமடைந்த தகப்பனாரைச் சமணப் பள்ளியினர் புறக்கணித்தனர். பின்னர் சங்கதர்மன் என்பவன் உதவி செய்து புத்த தர்மம் போற்றினார்கள். சுதமதியும் புத்த தர்ம நெறியை மேற்கொண்டாள். புத்தரை,

"தனக்கென வாழா
பிறர்க்குரியாளன்"

என வர்ணிக்கிறாள்.

உதயகுமரனுக்கு உபதேச முறையில் செய்யும் எச்சரிக்கை சிறப்புத் தன்மை வாய்ந்தது. கரிகால் வளவனின் பரம்பரையில் வந்த உனக்கு உபதேசம் செய்ய எனக்குத் தகுதியில்லை, இருப்பினும் சொல்லுகிறேன் என்று ஆரம்பிக்கிறாள். சுதமதியும் ஓர் உத்தம பாத்திர மாகும்.

மாதவி கோவலன் இறந்த கவலையால் அறவண அடிகள் என்ற ஓர் வயது முதிர்ந்த சன்யாசியின் காலில் விழுந்து வணங்கினாள். பற்றின் வருவது துன்பம்; அற்றோர் உறுவது இன்பம்; கொலை, களவு, கள், காமம், பொய் இவற்றில் மனம் செல்லாத ஒழுக்க நிலை வேண்டும் - மும்முறையில் ஐவகை சீலத்து அமைதியைக் காட்டினார்.

தன் மகளின் புதிய வழிக்கு மறுக்காத தாயாக விளங்கினாள் மாதவி. மணிமேகலையைக் கண்ணகியின் மகளென வர்ணிப்பாள்.

**ஆதிரை** : சாதாரண பாத்திரம், அவளுடைய கணவனான சாதுவன் பரத்தையர் உறவுகொண்டு மரக்கலம் ஏறி நாகநாடு சென்றான். ஆதிரையின் உறுதியும் பத்தினித் தன்மையும் புருஷனைத் தன்னிடம் சேர்க்கிறது. பின்னர் இருவரும் சுகமே வாழ்க்கை நடத்தி வருகிறார்கள். அவளிடம்தான் முதல் முதல் அமுத சுரபியில் மணிமேகலை பிச்சை எடுத்தாள். அதற்குப் பின் அள்ள அள்ளக் குறைய வில்லை. உலகு பசிப்பிணியற்று இருக்கட்டும் என வாழ்த்து கிறாள்.

"பாரகம் அடங்கலும்
  பசிப்பிணி அறுகென
ஆதிரை இட்டனள்
  ஆருயிர் மருந்தென"

**விசாகை:** உபகதையில் வரும் பாத்திரம், தன்னை நேசித்த மாமன் மகனான தருமதத்தனுக்கு "மிக்க அறவே விழுத்துணையாவது" என்ற உபதேசம் செய்தாள். மிகவும் மன உறுதி கொண்டவள். தர்மம் தலைகாக்கும் என்றவள்.

இந்த அறுவர் மட்டுமல்ல எண்ணற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால், எனக்குப் பெண்களைச் சிறப்பித்ததும் சாதியில் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பாகுபாடு இல்லாத் தன்மையும் மிகவும் பிடித்த பகுதி களாகும். மூன்று பெண்களான மணிமேகலை, மாதவி, சுதமதி ஆகியோர் மணிகள் என்றே கூற வேண்டும். அதே மாதிரியாகத்தான் ஆதிரையும், விசாகையும், சாதாரண குலத்தில் பிறந்தவர்கள். ஆபுத்திரன் ஓர் தீவிரமான பாத்திரம். மிக உத்தமன். அன்பு நிறைந்தவன். பிறப்பினால் உயர்நதவர் தாழ்ந்தவர் என்ற கருத்துக்குச் சரியான மறுப்புக் கொடுப்பவன்.

# 19

## தத்துவ விசாரணை (தொடர்ச்சி)

இந்தத் தலைப்பில் இதுவரை இரண்டு கட்டுரைகள் எழுதியுள்ளேன். என் நோக்கம் மணிமேகலை காலத்து எத்துணைச் சமயவாதிகள் இருந்தனர்? அவர்களுடைய கோட்பாடுகள் என்ன? சாத்தனார் அதை எப்படிக் கையாளுகிறார். இப்படி, இப்படியாக இருபத்து ஏழாவது அத்தியாயமான சமயக் கணக்கர் திறம் கேட்ட காதையில் விரிவாகக் காணலாம். மணிமேகலை வஞ்சி நகரத்துக்குள் புகுந்தாள். கண்ணகியின் ஆலோசனைக்கேற்ப மாதவன் வடிவம் எடுத்தாள். சமயக் கணக்கர்கள் வாழும் இடத்திற்குச் சென்றாள். அங்கு அளவை வாதி, சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிக வாதி, பூதவாதி முதலியவர்களைச் சந்தித்தாள்.

அளவை வாதி தன் சமயத்து நுண்பொருளை உரைத்தார். அளவைகள் பத்து வகைப்படும் என்பதை ஏற்கனவே பார்த்தோம். இதை ஆங்கிலத்தில் கூறப்படும் (Logic) 'லாஜி'க்குக்குச் சமமாகச் சொல்லலாம். இந்த 10 அளவைக்கும் ஒவ்வா என்று விலக்கப்பட்ட எட்டுக் குற்றங்கள் உள்ளன.

பிரமாண ஆபாசங்கள் (குற்றங்கள்) எட்டு எவை? சுட்டுணர்வு, திரியக்கோடல், ஐயம், தேராது தெளிதல்,

கண்டு உணராமை, எய்தும் இல் வழக்கு, உணர்ந்ததை உணர்தல், நினைப்பு என்பனவாகும்.

"எட்டு உள பிரமாண ஆபாசங்கள்
சுட்டுணர்வோடு திரியக்கோடல் ஐயம்
தேராது தெளிதல் கண்டுணராமை
எய்தும் இல் வழக்கு, உணர்ந்ததை உணர்தல்
நினைப்பு என நிகழ்வ ......?"

சுட்டுணர்வு என்றால் என்ன? எல்லாப் பொருள்களின் வெளித் தோற்றம் மட்டுமே உணர்தல், பொருண்மை மட்டுமே சுட்டிக் காட்டி அத்துடன் அமைந்து விடுதலாம். உள்ளுணராமை. காணப்படுவது பொம்மையே, மகனே என்று கூறியவிடத்துப் பொம்மை மனிதன் இதன் பெயர், குணம், தொழில் முதலியன காணாது தோற்றத்தை மட்டுமே உணர்வது. இது உண்டு என்ற உண்மையை மட்டுமே தெரிவதாம். இதனை "நிருவகற்பக்காட்டு" என்றுஞ் சொல்வர் என உரையாசிரியர்கள் சொல்கிறார்கள்.

"....சுட்டுணர்வு எனப்படுவது
ஏனைப் பொருள் உண்மை மாத்திரை காண்டல்"

திரியக் கோடல் என்பது கண்ட ஒரு பொருளை வேறொன்றாகக் கருதிச் சொல்லல். இதற்குச் சாத்தனார் தரும் உதாரணம்: விரிந்த ஒளிக்கதிர்களையுடைய சிப்பியைச் சிப்பி என உணராது வெள்ளி எனத் திரிய உணர்தல், விபரீதக்காட்சி என்று உரையாசிரியர்கள் வர்ணித்திருக்கிறார்கள்.

"திரியக் கோடல் ஒன்றை ஒன்று என்றல்
விரிகதிர் சிப்பியை வெள்ளி என்று உணர்தல்"

ஐயம் என்றால் என்ன? காணப்பட்ட பொருளை இன்னதுதான் என நிச்சயிக்க இயலாது ஐயுற்று மயங்குதல். ஆசிரியர் கொடுக்கும் உதாரணம்: காணப்பட்ட ஒரு பொருளை இது கட்டுத்தறியோ அல்லது மனிதனோ? என மயக்கத்தால் துணியாதிருப்பது ஐயமாகும்.

"ஐயம் என்பது ஒன்றை நிச்சயியா
மையால் தறியோ? மகனோ? என்றல்"

தேராது தெளிதல் என்பது தெளிதற்குரிய ஏதுவகையில் தெளியாது தேறுதல், தேராது தெளிதல் இவ்வகை இரண்டு குற்றங்களாகும். குதிரை வீரர்கள் விளையாடும் இடத்தில் நிற்கும் குற்றியை, குற்றியோ மனிதனோ என ஆராயாமல் குதிரை வீரன் என்றே துணியும் குற்றமாகும். அதாவது குற்றியைக் குற்றி என உணராது மனிதன் என்றே துணிந்து கொள்ளுதல்.

"தேராது தெளிதல் செண்டு வெளியில்
ஓராது தறியை மகன் என உணர்தல்"

கண்டு உணராமை என்றால் என்ன? காண்பதற்குரிய அளவையும் கருவியும் கொண்டு பொருளைக் கண்டவிடத்து அதன் பயன் உணராமையாகிய அறியாமையாகும். உதாரணமாக, கொடிய விலங்கான புலி ஒன்று நெருங்கி வருவதைக் கண்டும், அதனால், தனக்குவரும் ஆபத்துகளை அறிந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும் என்று அறியாமல் மயக்கமுற்றிருப்பதாம். இது அறியாமையாகும்.

"கண்டுணராமை கடுமாப்புலி யொன்று
அண்டலை முதலிய கண்டும் அறியாமை"

இல் வழக்கு என்பது: இல்லாத பொருள்களைச் சொல் வழக்கால் உண்டு என உள்ளத்தில் உணரும் குற்றமாம். உதாரணமாக முயற்கொம்பு ஆகாயப்பூ முதலியனவாம்.

"இல்வழக் கென்பது முயற்போடு ஒப்பன
சொல்லின் மாத்திரத்தாற்
கருத்திற்றோன்றல்"

உணர்ந்ததை உணர்தல் என்பது முன்பே தெளிவாகத் தெரிந்திருக்கும் ஒன்றை மீண்டும் உணர்தலாகிய குற்றமாம். ஆசிரியர் சொல்வதாவது: "மிக்க பனிக்காலத்தில் நெருப்பருகே இருத்தல் மருந்தாகும்" இது மறதியன்று. குளிருக்கு வெப்பம் மாறுபட்டது என்பதை அறிந்ததே. பனி மிகுந்தது என்ற காரணம் காட்டி அளவையால் ஆராய்ந்து

நெருப்பருகே இருப்பது மருந்தாகும் என்று தெளிவது குற்றமாகும்.

''உணர்ந்ததை உணர்தல்
உறுபனிக்குத் தீப்
புணர்ந்திடல் மருந்தென
புலங்கொள நினைத்தல்''

எட்டாவது, இறுதியான அளவை குற்றமான நினைப்பு எனப்படுவது யாதெனில், ''பிறர் கூறுவனவற்றிற்குக் காரண காரிய ஆராய்ச்சியின்றி மேற்கொள்ளுதலாம்'' பிறர் பொய் கூறார்; உண்மையே கூறினார், என நினைத்துக் கொள்ளுதல். மேலும் தானே பிறவற்றால் அறிதற்கு இயலாமையாலும் இது நினைப்பு ஆயிற்று. நினக்கு இவர் தந்தையும் தாயும் ஆவர் என்று பிறர் காட்டிச் சொல்லவும், ஆராயாது ஏற்றுக் கொள்ளும் குற்றமாகும்.

''நினைப்பெனப் படுவது
காரணம் நிகழாது
நினக்கிவர் தாயும் தந்தையு மென்று
பிறர் சொலக் கருதல்''

இவ்வாறாக மேற்சொன்ன எட்டும் பிரமாண ஆபாசங்களாகும், அளவையின் குற்றங்களாகும்.

இனி ஆசிரியர் அளவைவாதியின் வாதத்தை முடித்துக் கொண்டு ஓர் அருமையான தொகுப்புரை கொடுக்கிறார். இதன் பகுதிப்படுகின்ற அளவைகளை யார் யார் கையாளுகின்றார்கள். இன்றைய நிலை என்ன என்பதை ரத்னச் சுருக்கமாக விளக்குகிறார் பாருங்கள்:

இவ்வாறு பகுதிப்படுகின்ற உலகாயதம், பௌத்தம், சாங்கியம், நையாயிகம், வைசேடிகம், மீமாஞ்சகம் ஆகிய சமயங்கட்கு ஆசிரியர்கள் யார் யார்? உலகாயதத்துக்கு வியாழன் என்று வழங்கப்படும் பிரகஸ்பதி.

பௌத்தத்துக்கு கினேந்திரன் என்று அழைக்கப்படும் புத்தன். சாங்கியத்துக்கு கபிலன். நையாயிகத்துக்கு

அக்கபாதன். வைசேடிகத்துக்கு கணாதன். மீமாஞ்சகத்துக்கு ஆசிரியர் சைமினி.

''பாங்குறும் உலோகாயதமே, பௌத்தம்
சாங்கியம், நையாயிகம், வைசேடிகம்
மீமாஞ்சகம், ஆம் சமய ஆசிரியர்
தாம் பிரகஸ்பதி, சினனே, கபிலன்
அக்கபாதன், கணாதன், சைமினி''

அளவையின் இன்றைய நிலை என்ன என்பதற்கு ஆசிரியரே அருமையான பதில் இறுக்கிறார்.

''மெய்ப் பிரத்தியம், அனுமானம், சாத்தம்
உவமானம், அருத்தாபத்தி அபாவம்
இவையே இப்போது இயன்று உள அளவையாம்''

மெய்ப்பிரத்தியம், அனுமானம், சாத்திரம், உவமானம், அருத்தாபத்தி, அபாவம் ஆகிய ஆறுமே இப்போது வழங்கப் பட்டு வருகின்ற அளவைகளாகும். உரையாசிரியர்கள் இதை மேலும் பின் கண்டவாறு விளக்குவாராயினர் :

பிரகஸ்பதி காட்சியளவை மட்டுமே கொண்டு உலோகாயதத்தினை வகுத்தனர். புத்தர் காட்சியும் அனுமானமும் ஆகிய இரண்டையும் கொண்டு பௌத்தத்தை வகுத்தார். கபிலர் அவற்றுடன் அகமத்தையும் கூட்டி மூன்றாகக் கொண்டு சாங்கியத்தை உரைத்தார். அக்கபாதர் அம் மூன்றுடன் உவமானத்தைக் கொண்டு நையாயிகத் தினைக் கண்டார். கணாதர் நான்குடனே அருத்தாபத்தியும் சேர்த்து ஐந்தாகக் கொண்டு வைசேடிகத்தை வகுத்தார். சைமினி அவ்வைந்துடன் அபாவமும் சேர்த்து ஆறு அளவை களுடன் மீமாஞ்சகத்தைக் கண்டார். ஆகவே இப்போது வழங்குபவை இவை ஆறுமே. எஞ்சிய நான்கு அளவை களான இயல்பு, ஐதிகம், மீட்சி, உள்ள நெறி இன்று வழக்கில் இல்லை.

சைவவாதி, பிரமவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி முதலியோர் திறம் முன்னர் ஓரளவு பார்த்தோம்.

# 20

## மணிமேகலையும் திருக்குறளும்

### அறம்

அறத்தைப் பற்றிய கருத்தோட்டங்கள் மணிமேகலை யிலும் திருக்குறளிலும் உண்டு. மணிமேகலையில் சற்று பரந்த அளவு அறத்தின் தன்மைகள் விளக்கப்பட்டுள்ளது.

அறம் எனப்படுவது
யாதுஎனக் கேட்பின்
மறவாது இதுகேள்
மன் உயிர்க்கெல்லாம்
உண்டியும் உடையும்
உறையுளும்
அல்லது கண்டதுஇல்

ஆபுத்திரனானவன் அடுத்த ஜென்மத்தில் நாகபுரத்தின் அரசனான பூமி சந்திரன் மகனான புண்ணியராசனாகத் தோன்றினான். அவனை மணிமேகலை சந்தித்து மணி பல்லவத்துக்கு அழைத்துச் செல்கிறாள். அங்குத் தன்னுடைய முற்பிறவியை அறிந்தான். தனக்கு அமுத சுரபியை அன்று தந்த சிந்தாதேவியைப் போற்றினான். தன்னுடன் வந்து பின் ஆபுத்திரனைக் காணாததால் இறந்த ஒன்பது செட்டி களின் எலும்புகளைக் கண்டான். "பிறர் உயிர் கொன்ற

கொலைவன் அல்லையோ'' என்று தடுமாறி நின்றான். அப்பொழுதுதான் மணிமேகலை ஆபுத்திரனுக்கு அறம் உரைத்தாள் நீ உடனடியாக உன் நாட்டிற்குச் சென்று மன் உயிர்க்கெல்லாம் உணவும், உடையும், இருப்பிடமும் கிடைக்கச் செய்வாய் என்றாள். இவ்விபரங்களை 25வது அத்தியாயமான ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதையில் காணலாம்.

22-வது அத்தியாயமான சிறை செய்த காதையில் விசாகையின் சரித்திரம் கூறப்பட்டுள்ளது. அவளின் மாமன் மகனான தரும தத்தன் மதுரையில் வணிகம் செய்து பணம் சேர்த்திருந்தான். கன்னிமாடத்தில் சேர்ந்த விசாகை அவனுக்கு உபதேசம் செய்தாள். "இளமை, உடம்பு, செல்வம் நிலையற்றன. அறம்தான் நமக்குத் துணையாக நிற்கும்'' என்று தரும தத்தனும் சிறப்பாக தானம் செய்தான்.

"இளமையும் நில்லா;
யாக்கையும் நில்லா
வளவிய வான்பெரும்
செல்வமும் நில்லா
புத்தேள் உலகம்
புதல்வரும் தாரார்
மிக்க அறமே
விழுத்துணை ஆவது
தானம் செய்யென
தருமதத்தனும்
மாமன் மகள்பால்
வான்பொருள் காட்டி
ஆங்கவன் அவளுடன்
செய்த நல்லறம்
ஓங்கிரு வானத்து
மீனினும் பலவால்.''

இனி, குறளின் கருத்துக்களைப் பார்ப்போம். அறத்துப் பாலில் இல்லற வியலில் ஈகை என்ற அதிகாரத்திலுள்ள சில

குறள்கள் நாம் கவனிக்க வேண்டியவையாம். மோட்சம் கிடைக்கவில்லை என்றாலும் பிறர்க்குக் கொடுத்து உதவுவது நல்லதாகும்.

"மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று" இல்லை என்று வந்து கேட்பதற்கு முன்னே அவனுக்கு கொடுத்து உதவுவது நற்குடிப் பிறந்தவனிடம் காணப்படுகின்ற சிறந்த குணமாகும்.

"இலன் என்னும் எவ்வம் உரையாமைஈதல்
குலன் உடையான் கண்ணேஉள" (குறள்)

தன் பசியைப் பொறுத்துக் கொள்ளும் ஆற்றல் பெரியதுதான். ஆனால் அந்தப் பேராற்றலும் பிறர் பசித் துன்பத்தைப் போக்க உண்டி கொடுத்து உதவுபவனது தனியாற்றலின் பின்னே நிற்க வேண்டியது ஆகும்.

"கொல்லாமை" என்ற அத்தியாயத்தில் பிற உயிர்களைக் கொல்லாதிருத்தல் நல்லறம் என்று கூறுவார்.

"அறவினை யாது எனில் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்"

கிடைத்ததைப் பகிர்ந்து கொண்டு பலர் வாழத் தாம் வாழுதல் நீதி நூல்கள் சொல்லும் நல்லறங்களில் எல்லாம் மிகச் சிறந்த நல்லறம் ஆகும்

"பகுத்துஉண்டு பல்உயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"

அறம் என்று கூறப்பட்டதே குடும்ப வாழ்க்கையைத் தான். குடும்ப வாழ்க்கையைத் தவிர்த்த துறவறமும் பிறர் பழி சுமத்த இடமில்லாது நடப்பதாயின் நல்லது.

"அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்ஆயின் நன்று"

இல்லற இயலிலும் துறவற இயலிலும் அறத்தின் தன்மையைப் பார்க்கின்றார் நாயனார்.

மணிமேகலையின் முதலாவது அத்தியாயமாக "விழாவறை காதை"யில் இந்திர விழாவைப்பற்றி முரசறைவோன் ப்ரகடனப்படுத்துகிறான். அவ்வமயம் நல்லாட்சி உள்ள புகார் நகரில், சோழ மண்டலத்தில் மாதம் "மும்மாரி பொழிக" என்றும் குறிப்பிடுகிறான். வள்ளுவரும் இக்கருத்தை ஆமோதிக்கிறார். அறவழியில் நின்று ஆட்சி புரியும் மன்னவன் நாட்டில் பருவமழை தவறாது பெய்யும். பயிர் வளஞ் சிறக்கும்.

"இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு" (குறள்)

'செங்கோன்மை'யில் காணலாம்.

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்று எனின் இன்றாம்"

22 வது அத்தியாயமான சிறை செய்த காதையில் காணலாம். உதயகுமரன் வெட்டப்பட்டவுடன் மாதவர்கள் அரசனிடம் சென்று மன்னனின் சிறப்பான கடமைகளைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். மன்னனின் காவலானது மாதவர்களுடைய நோன்புக்கும் பெண்களின் கற்பைக் காப்பாற்றுவதற்கும் தேவையாம். தாலிக்கு வேலி அரசன் என்பது நாட்டில் வழங்கும் ஓர் பழமொழியாம். மேலான தன்மை உடையோர் என்று போற்றப்படுகின்ற வேதம் ஓதுவார்க்கும், அவர் தம் வேதத்துக்கும் ஆதியாய் அடிப்படையாய் இருப்பது நீதி தவறாத செங்கோல் முறையே ஆகும்.

"அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்" (குறள்)

நேர்மை தவறாமல் நீதி வழி நடந்து குடிமக்களைக் காத்து வளர்க்கும் மன்னன், மக்களின் தலைவன் என்று மதித்துப் போற்றப்படுவான்.

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்" (குறள்)

பொருட்பால் அரசியல் இறைமாட்சி அத்தியாயத்தில் காணலாம். "மடவார் கற்பை"க் காக்க வேண்டிய பொறுப்பு மன்னனைச் சார்ந்தது என மணிமேகலை திட்டவட்டமாகச் சொல்கிறது. அம்முறையில் குறளில் காணக் கிடையாது முறை செய்து மக்களைக் காப்பாற்றுவான் என்பார். இழிசொற்களையும் பொறுத்துக் கொள்ளும் பெருந்தன்மையுள்ளவன் அரசன். அவன் குடைகீழ் உலகம் வரும். அரசன் நான்கு குணங்களை உடையவன். இல்லையென்று வருவோர்க்குத் தருவான். அன்பு செலுத்துவான். ஆட்சி முறை வழுவாதிருப்பான். அதற்குச் சிகரம் வைத்தாற்போல் "குடி மக்களைப் பாது காப்பான்" அவனே அரசரில் சிறந்த அரசனாம்,

"கொடை அளி செங்கோல் குடி ஓம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க்கு ஒளி" (குறள்)

அரசனை உயிராகவும் மக்களை உடலாகவும் வைத்துப் பாடியுள்ளனர். அரசனை உடலாகவும் மக்களை உயிராகவும் வர்ணிப்பதுண்டு. இவ்விரண்டு கருத்துக்களையும் மணிமேகலையில் காணலாம். மணிமேகலா தெய்வம் மணிபல்லவத்திடை மணிமேகலையைக் கொண்டு சேர்த்தது. பின் இரவிலே புகாருக்கு வந்து அரசகுமாரனுக்கு அறிவுரை கூறுகிறது. துயிலெழுப்பிய காதையில் காணலாம்.

"மன்னவன் மகனே!
கோனிலை திரிந்திடின்
கோணிலை திரியும்
கோணிலை திரிந்திடின்
மாரி வறங்கூரும்
மாரி வறங்கூரின்
மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம்

மண்ணாள் வேந்தன்
தன்னுயிர் என்னும்
தகுதியின் றாகும்
தவத்திறம் பூண்டோள்
தன் மேல்வைத்த
அவத்திறம் ஒழிக என்
றவன்வயின் உரைத்தபின்''

மன்னவன் மகனே, அரசனது செங்கோல் நிலை திரிந்து போனால், அதனால் கோட்களின் நிலைகளும் திரிபடைந்து போகும்; கோட்களின் நிலைகளும் திரிடடைந்தால், மழை பெய்யாமல் நாடும் அதனால வறட்சியுற்றுப்போம். மழை பெய்யாமற் போனால் நிலைபெற்ற உயிர்களும் இல்லாது அழிந்துபோம். ''மன்னுயிர் எல்லாம் தன்னுயிர்'' என்று கருதிப்பேண வேண்டிய நாடாளும் மன்னவனின் தகைமையும் அப்போது இல்லாமற் போய்விடும். அதனால் தவத்தின் கூறுபாட்டினை மேற்கொண்ட அம்மணிமேகலையின் மீது நீ வைத்த தீய விருப்பத்தினைக் கைவிடுவாயாக என்று உரைத்தது. இதை 7-வது அத்தியாயத்தில் காண்கிறோம். 25-வது அத்தியாயமான ஆபுத்திரனோடு மணிபல்லவமடைந்த காதையில் முன்னாள் ஆபுத்திரனாகவிருந்த புண்ணியராசன் என்ற அரசனாகவுள்ளவனின் சிறப்பை மந்திரி சனமித்திரன் சொல்லக் கேட்கிறோம்.

''நீ தோன்றிய பின்னர்
தோன்றிய உயிர்கட்கு
வானம் பொய்யாது;
மண்வளம் பிழையாது
ஊனுடை உயிர்கள்
உறுபசி அறியா
நீயொழி காலை
நின்நாடு எல்லாம்
தாயொழி குழவி
போலக் கூஉம்

துயர்நிலை யுலகங்
காத்தலின்றி, நீ
உயர் நிலை உலகம்
வேட்டனையாயின்
இறுதி உயிர்கள்
எய்தவும்-இறைவ
பெறுதி விரும்பினை
யாகுவை யன்றே
தன்னுயிர்க் கிரங்கான்
பிறவுயி ரோம்பும்
மன்னுயிர் முதல்வன்
அறமும் ஈது...''

துறவு பூண வேண்டுமென அரசன் நினைக்கின்றான். அதைத் தடுத்து மந்திரி சொல்லும் அறிவுரையாவது:

நீ இந்த நாட்டில் தோன்றிய பின்னர்தான் உலகிலுள்ள உயிர்களுக்கு வானமும் பொய்யாகிப் போகாதாயிற்று. நிலவளமும் பிழையுற்றுப் போகாதாயிற்று. ஊனுடம்பினை யுடைய உயிர்கள் அதன்பின் வருத்தும், பசியினையே அறியாவாயின, ஆதலின் நீ நீண்டுச் செல்லும் காலத்தில் நின் நாடு முழுவதுமே தாயற்ற குழந்தையைப்போல் கூவியழும் தன்மையினை அடைந்துவிடும். உலகத்தைக் காப்பதன்றி உயிர் நிலை அடைய விரும்பினால் சரியாகுமா? புத்த தேவன் உரையும் அதுவல்லவே.

இக்கருத்துக்களைக் குறளில் ''செங்கோன்மை'' என்னும் அத்தியாயத்தில் காணலாம். இரண்டு குறள்கள் இவற்றை விளக்கும்:

உலகத்திலுள்ள உயிரினம் எல்லாம், வானில் இருந்து பொழிகின்ற மழையை நம்பி வாழ்வதுபோல ஒரு நாட்டில் உள்ள குடிமக்கள் எல்லாம் தங்களின் அரசனின் நீதி தவறாத நல்லாட்சியை எண்ணிப் பயமின்றி வாழ்வார்கள்.

"வான்நோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோல் நோக்கி வாழும் குடி" (குறள்)

மேலும் குடிமக்களை அன்போடு நடத்தி நீதி முறை தவறாமல் அரசாளும் மன்னனை உலகம் போற்றும். அவன் பக்கம் நின்று காக்கும்.

"குடிதழீக் கோல்ஓச்சும் மாநில மன்னன்
அடிதழீ இ நிற்கும் உலகு."

இக்குறளை ஜீவா அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டுவார். அரசைப் பற்றி மணிமேகலையிலும், குறளிலும் வந்த இக்கருத்துக்களுடன் நிறுத்தலாமென நினைக்கிறேன்.

இனி இதர அம்சங்களைக் கவனிப்போம்.

# 21

## மன்னர்கள்—மனித அன்பு

1. **கரிகால் சோழன்** ஆண்ட காலம் காலம் சுமாராக. கி. பி. 190 ஆம் வருடமென சரித்திராசிரியர்கள் நிச்சயித்துள்ளார்கள். அரசன் வழக்கு கேட்க வேண்டியிருந்தது. அரசன் வயதில் சிறியவன். இளமைப் பருவம். முதுமைப் பருவத்துடன் அமர்ந்து தீர்ப்புச் சொல்ல வேண்டுமென முதிய பருவம் எடுத்தான். அவனுடைய பரம்பரையில் வந்தவன் உதயகுமரன் "அப்பேர்ப்பட்ட நினக்கு நல்லறிவினையும், பெருந்தன்மையினையும், அரசியல் வழக்கத்தினையும், என்னைப் போன்ற ஒரு பெண் சொல்லத் தகுமோ". மணிமேகலையைப் பின்தொடர்ந்து வந்த உதயகுமரனிடம் சுதமதி மேற்கூறியவாறு சொல்கிறாள்.

மதுமலர்க் கூந்தற்
சுதமதி யுரைக்கும்:
"இளமை நாணி,
முதுமை எய்தி
உரைமுடிவு காட்டிய
உரவோன் மருகற்கு
அறிவும் சால்பும்
அரசியல் வழக்கும்
செறிவளை மகளிர்
செப்பலும் உண்டோ ..."

நாலாவது அத்தியாயமான பளிக்கரை புக்க காதையில் காணலாம்.

**2. சேர மன்னர்களில் முதல்வன்** உதயன் சேரல். அவன்காலம் முதலாம் நூற்றாண்டாகும். அவனுக்கு நெடுஞ் சேரலாதன் என்றும் குடக்கோச் சேரலன் என்றும் அதிராஜன் என்றும் இமயவரம்பன் என்றும் இன்னும் பல நாமங்கள் வழங்கி வந்தன. அவன் இமயத்திலே தன் வில் இலச்சினையைப் பொறித்தான். நெடுஞ்சேரலாதனின்மகன் தான் செங்குட்டுவனாகும். செங்குட்டுவனைப் புகழ்ந்த புறநானூற்றுப் பாடல் ஒன்று உண்டு. அவன் கண்ணகி கோவிலுக்காக வடநாட்டிலிருந்து கல் கொண்டு வந்தான். சிலப்பதிகாரத்தில் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. சங்ககால இலக்கியமான பதிற்றுப்பத்தில் உதயன் சேரல் பரம்பரையில் வந்த ஐந்து மன்னர்களின் பெயரைக் காணலாம்.

குடக்கோச் சேரலன் வஞ்சி நகரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். இலங்கைத் தீவிலிருந்து வந்த புத்த சாரணர்களை வரவேற்றான். அவர்களும் அவனுக்குத் தரும நீதிகளை உபதேசம் செய்தார்கள்.

"குடக்கோச் சேரலன்,
குட்டுவர் பெருந்தகை (க்கு)
விடர்சிலை பொறித்த
வேந்தன் ..........
இலங்கா தீவத்து ..............
.............. ..........மீளும்
தரும சாரணர்
தங்கிய குணத்தோர் (கள்)
..............................................
அறத்தகை முதல்வன்
அருளிய வாய்மை
துன்பம் நீங்கச்
சொரியும்.........."

இருபத்து எட்டாவது அத்தியாயமான "கச்சிமாநகர் புக்க காதை" யில் காணலாம்.

**3. சேரன் செங்குட்டுவன் :** சேரன் செங்குட்டுவன் வடக்கே சென்று கங்கைக் கரையைக் கடந்து சென்று கனக விஜயர் முதலிய மன்னர்களை வென்று இமய மலையிலிருந்து தெய்வப் படிமத்திற்குரிய கல்லும் கொண்டு வந்தான். அவனுடைய வெற்றி விளங்கக்கூடிய அளவில் வஞ்சிநகர் அமைந்தது. அந்நகருக்குள் மணிமேகலை பிரவேசித்தாள். இருபத்து ஆறாம் அத்தியாயமான வஞ்சி மாநகர் புக்க காதையில் காணலாம்.

"செங்குட்டுவனெனும் செங்கோல் வேந்தன்" என்று செங்குட்டுவனை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

## மனித உணர்வைப் பெருமைப்படுத்தல்

மணிமேகலையின் முக்கிய நோக்கமானது புத்தனுடைய பெருமையும் தவத்திறனின் அருமையுமாம். இருப்பினும் பரஸ்பரமாக எழும் அன்பிற்கும், மனித உணர்வுக்கும் எடுத்துக்காட்டாகவுள்ள சம்பவங்கள் பலஉள. அவற்றில் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவோம்.

(i) **மணிமேகலை :** தாய்க்கும் மகளுக்கும் இடையேயுள்ள அன்பு வெளிப்படுவதைக் காணலாம். நம் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவதாகவிருக்கும்.

(i) புகார் நகரத்தில் இந்திரவிழா நடைபெறுகிறது. நிகழ்ச்சிகளுள் நாடக மடந்தையரின் ஆடலும் பாடலும் முதன்மையானவை, விழாவில் கலந்து கொள்ளும் பொருட்டு மாதவியோ மணிமேகலையோ வராதிருக்க ஊரிலுள்ளோர்களிடையே அவர்களுடைய செயல்பற்றிப் பழிச் சொற்கள் எழுந்தன. ஊர் பழிக்கவே மாதவியின் தாயாகிய சித்திராபதி, மாதவியின் தோழியான வயந்தமாலையை அனுப்பி ஊரலரைக் கூறி, மாதவியை அழைத்து வருமாறு ஏவுகின்றாள். அவளும் மாதவிபாற் சென்று ஊரலரைப் பற்றி

உரைக்கிறாள். மாதவி, கோவலன் இறந்ததால் தனக்கேற்பட்ட கவலையையும், தான் கொண்டுள்ள ஒழுக்கத்தையும், தன் மகள் கொண்டுள்ள உறுதியையும் அவளிடம் விளக்கிக் கூறி அவளைத் திருப்பி அனுப்பிவிடுகிறாள். தன் மகளைப் பெருமைப் படுத்துகிறாள். கோவலன் இறந்தவுடன் மதுரையை எரித்த பத்தினித் தெய்வமான "கண்ணகியின் மகளே" என் அருமை மணிமேகலை என வர்ணிக்கிறாள்.

"காவலன் பேரூர் கனை யெரியூட்டிய
மாபெரும் பத்தினி மகள், மணிமேகலை
அருந்தவப் படுத்தல் அல்லது, யாவதும்
திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்"

அப்பேர்ப்பட்ட மாபெரும் பத்தினியின் மகளான மணிமேகலை தீய தன்மையினையுடைய பரத்தயர் தொழிலிலே ஒருபோதும் ஈடுபடவே மாட்டாள். (ஊரலர் உரைத்த காதை)

**(ii)** வயந்தமாலையிடம் மேற்கண்டவாறு மாதவி உரைத்ததை மணிமேகலை கேட்டனள். தன் தந்தையாகிய கோவலனும், தாயான கண்ணகியும் பட்ட துயரம் அவளுடைய நெஞ்சைக் கலக்கியது. கண்ணீர் சொரிந்தாள். அவள் கட்டிக்கொண்டிருந்த மலர் மாலையின் மீது அக்கண்ணீர் துளிகள் வீழ்ந்து அதனைக் குளிப்பாட்டின. மாதவியும் தன் மகளுடைய கண்ணீரைத் துடைத்து அகற்றினாள்.

"மாதவி மணிமேகலை
முகம் நோக்கித்
தாமரை தண் மதி
சேர்ந்தது போலக்
காமர் செங்கையின்
கண்ணீர் மாற்றி"

மணிமேகலையின் முகத்தை நிலவிற்கும் மாதவியின் கையைத் தாமரைக்கும் உபமானமாக ஆசிரியர் கூறியுள்ளார். தாயின் அன்பிற்கும் மகளின் இளகிய மனத்திற்கும் ஓர்

சிறந்த எடுத்துக்காட்டாக விருக்கிறது. இதை ''மலர் வனம்புக்க காதை''யில் காணலாம்.

(iii) உவவனத்திலிருந்தனர் மணிமேகலையும் சுதமதியும். அவர்கள் தூங்கும்போது மணிமேகலையை மட்டும் வானத்தே தூக்கிச் சென்று மணிபல்லவத்தில் அவளைக்கிடத்திவிட்டு மீண்டும் திரும்பிவந்த மணிமேகலைத் தெய்வம் சுதமதியிடம் சொல்லும: மாதவி என்னையறிவாள். ஒரு வாரத்தில் மணிமேகலை திரும்புவாள், எனலும் அதிகாலையில் சுதமதியானவள் மாதவியிடம் நடந்த விஷயங்களைத் தெரிவிக்கிறாள். தாய்ப் பாசம் இலேசானதல்ல. அவளுடைய கவலையை ஆசிரியர் அருமையாக வர்ணிக்கிறார்.

''ஏவுறு மஞ்ஞையின் இணைந்தடி வருந்த
மாநகர் வீதி மருங்கிற் போகிப்
போய கங்குலிற் புகுந்ததை எல்லாம்
மாதவி தனக்கு வழுவின்றி உரைத்தலும்—
நன்மணி இழந்த நாகம் போன்று, அவள்
தன்மகள் வாராத் தனித் துயர் உழப்ப
இன்னுயிர் இழந்த யாக்கையின் இருந்தனள்
துன்னியது உரைத்த சுதமதி தானென்''

இதன் பொருள்: அம்பு தைத்துப் புண்ணுற்றவோர் மயிலைப் போல நொந்து போன சுதமதி, தன் பாதங்கள் நோகுமாறு நடந்து, பெரு நகரான புகாரின் வீதி வழியாகச் சென்றனள். கழிந்த இரவிலே நிகழ்ந்தவற்றை யெல்லாம மாதவிக்குப் பிழையின்றி அவள் சொன்னதும், தன் நல்ல மணியினை இழந்துவிட்ட நாகப் பாம்பினைப் போன்று, தன் மகள் வாராத பெருந் துன்பத்தில் மாதவி வருத்த முற்றவளாயினள். நேரிட்டதை உரைத்தவளான சுதமதியோ, மாதவியின் நிலை கண்டு கலக்கமுற்று தானும் தன் இனிய உயிரை இழந்து விட்ட உடலினள ஆயினவளே போல் அசைவற்றுச் சோர்ந்திருந்தாள்.

என்ன அருமையான வர்ணிப்பு பாருங்கள்.
"துயிலெழுப்பிய காதை"யில் காணலாம்.

(iv) மணிபல்லவத்தில் அதிகாலையில் மணிமேகலை எழுந்திருந்தாள். முந்திய நாள் இரவில் மணிமேகலைத் தெய்வமானது தன்னைத் தூக்கிக் கொண்டு வந்ததை அறியாள். பக்கத்தில் சுதமதி இருப்பாள் என எண்ணினாள். எங்கே இருக்கிறோம் என்பது அறியாள். எனவே நடுங்கினாள். அரற்றினாள். அலறினாள். இராப்பொழுது கழிந்துவிட்டது. என்னைக் காணாது என் தாயான மாதவி மயக்கம் கொள்வாளே என்று புலம்பினாள்.

"சுதமதி ஒளித்தாய்? துயரம் செய்தனை!
நனவோ, கனவோ? என்பதை அறியேன்
மன நடுக்குறூஉம்; மாற்றம் தாராய்
வல்லிருள் கழிந்தது; மாதவி மயங்கும்
எல்வளை! வாராய்; விட்டகன்றனையோ?"

தன் தந்தையையும் தாயாகிய கண்ணகியையும் நினைந்து நினைந்து அழுதாள்.

"மணிபல்லவத்துத் துயருற்ற காதை"யில் காணலாம்.

(v) மணிமேகலையை நினைந்து நினைந்து மாதவி வருந்துகிறாள். மணிமேகலைத் தெய்வம் குறிப்பிட்ட கெடுவான ஏழாம் நாளும் வந்தது. என் மகளோ இன்னும் வராமலிருக்கிறாள். தெய்வத்தின் சொற்களும் பிழையாதல் உண்டு போலும் என எண்ணி கலக்கங் கொண்டிருந்தாள். சுதமதியும் அவ்விடத்தேயிருந்தாள். அவர்கள் இருவருடைய துயரையும் கவலையையும் போக்கும் வகையில் மணிமேகலையும் அப்போது வந்து தோன்றினாள்.

'வழு வறு தெய்வம்
வாய்மையின் உரைத்த
எழு நாள் வந்தது;
என் மகள் வாராள்!
வழுவாய் உண்டு!' என
மயங்கு வோள் முன்னர்—

வந்து தோன்றி,
அவர் மயக்கங் களைந்து
அந்தில் அவர்க் கோர்
அற்புதம் கூறும்''

இதைப் ''பாத்திரம் பெற்ற காதை''யில் காண்கிறோம். அன்று மணிமேகலை பழம்பிறப்பை அறிந்தவளாகிறாள். சுதமதியும், மாதவியும், மணிமேகலையும், இரவிவன் மனுக்கும் அமுத பதிக்கும் பிறந்த பெண்களான தாரை, வீரை, இலக்குமியாம். இதற்குப் பின்னும் தாய் மகள் என்ற உறவு நம்மை விட்டு அகலாதபடி சம்பவங்கள் உள்ளன.

(vi) மணிமேகலையும், மாதவியும், சுதமதியும் சேர்ந்து சென்று அறவண அடிகளைத் தொழுகின்றனர். மணிமேகலை உதயகுமரனின் கொலையையொட்டி அரசனால் சிறை செய்யப்படுகிறாள். அவளைச் சிறை நீக்கி ராசமாதேவியானவள் தன் அரண்மனையில் வைத்துக் கொள்கிறாள். புத்திர சோகத்தால் மணிமேகலையைப் பல கொடுமைகளுக்கு உட்படுத்துகிறாள். மணிமேகலை அவற்றினால் தீங்குறாது போகவும், ராசமாதேவி பணிந்து போக, மணிமேகலையும் ராசமாதேவிக்கு அறநெறிகளையும் எடுத்துரைக்கிறாள். மணிமேகலைக்கு நேரிட்டதைக் கேட்டு மாதவியானவள் கலங்கினாள். தெளிந்த குளத்து நீரானது மேலே புழுதி வந்து படிதலினால் கலங்கித் தோன்றும் தன்மையுடையவளானாள். சுதமதியிடம் சொன்னாள். பின் இருவரும் அறவண அடிகளிடம் சென்றனர். காற்றிலே அலைக்கப்பட்டதோர் பூங்கொடியினைப் போல் வருத்தமுற்று உடல் நடுங்க அறவணரின் பாதங்களிலே சென்று வீழ்ந்தனர். பின்னர் மூவரும் மன்னன் தேவியிடம் சென்றனர்.

''மணி மேகலை திறம்
மாதவி கேட்டுத்
துணி கயம் துகள் படத்
துளங்கிய அது போல்

தெளியாச் சிந்தையள்
சுதமதிக்கு உரைத்து
வளியெறி கொம்பின்
வருந்தி மெய்ந் நடுங்கி
அறவணர் அடிவீழ்ந்து,
ஆங்கவர் தம்முடன்
மறவேல் மன்னவன்
தேவிதன் பால்வரத்—

தாயன்பையும் துடிப்பையும் காண்கிறோம் அல்லவா? இதை "ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை"யில் காணலாம்.

(vii) தாயிடத்தும் அறவண அடிகளிடத்தும், கோப்பெருந் தேவியிடமும், சித்திராபதியிடமும், சுதமதியிடமும் விடைபெற்றுக் கொண்டு மணிமேகலை ஆபுத்திரனின் நாட்டிற்குச் செல்கிறாள். அவள் விடை பெறும் காட்சி. என் தாயான கண்ணகியின் பொருட்டு வஞ்சிக்குச் சென்று அறம் செய்வேன். எனக்குத் தீமை வருமென மயங்க வேண்டாம். அன்புடையீர்! எனச் சொல்லி வணங்கினாள்.

"வஞ்சியுட் புக்கு, மாபத்தினி தனக்கு
எஞ்சா நல்லறம் யாங்கணுஞ் செய்குவல்
'எனக்கிடர் உண்டென்று இரங்கல் வேண்டா
மனக்கினியீர்!" என்றவரையும் வணங்கி"

"ஆபுத்திரனோடு மணிபல்லவம் அடைந்த காதை"யில் மணிபல்லவம் காணலாம். மனப்பக்குவமடைந்த பின்னும் தன் தாயை மறந்தாளில்லை என்னே மணிமேகலையின் அன்பு.

(viii) மணிமேகலை வஞ்சிமா நகரத்தையடைந்தாள். அங்குக் கண்ணகி கோவலனுக்கு அமைத்திருக்கும் படிமங்களைத் தொழுகின்றாள். அவர்கள் குணங்கள் பலவற்றையும் சொல்லித் துதித்தாள். "அன்பாகிய கடமையிலே நிலை பெற்றிராமலும், நல்ல தவநெறியினை மேற்கொள்ளாமலும் கற்பாகிய கடமையினையே மேற்கொண்டு நுமது பிறவிக்

கடனை முடித்தீர். அதன் காரணத்தை எனக்கு அருளிச் செய்தல் வேண்டும்'' என்று கூறி அழுகையுடையவளாக, கண்ணகியின் படிமத்து முன்னை இறைஞ்சியும் நின்றாள்.

"...............................................
தாய் கண்ணகியையும்
கொடைகெழு தாதை
கோவலன்-தன்னையும்
கடவுள் எழுதிய
படிமம் காணிய
வேட்கை துரப்ப,
கோட்டம் புகுந்து
வணங்கி நின்று
குணம்பல ஏத்தி,
''அற்புச்கடன் நில்லாது,
நற்றவம் படராது
கற்புக்கடன் பூண்டு,
நுங்கடன் முடித்தது
அருளல் வேண்டும்' என்று
அழுது முன்னிற்ப''

இதை ''வஞ்சிமாநகர் புக்க காதையில்'' காணலாம். மணிமேகலையானவள் கண்ணகியின் உருவத்தைக் கண்டு அவள் பட்ட கஷ்டங்களை எண்ணும்போது கண்ணீர் உகுக்கிறாள். எவ்வளவு இயற்கையான உணர்வு. பெண்மையின் பெருமை.

(ix) மணிமேகலையானவள் காஞ்சி நகரத்துக்கு வந்து சேருகிறாள். காஞ்சியில் தான் தன் இறுதிக் காலத்தைக் கழிக்கின்றாள். அக்காலத்தில் புகார் நகரைக் கடல் கொண்டது. அதற்குக் காரணம் முன்னாள் அரசனான நெடுமுடிக்கிள்ளி என்பான் காணாமற் போன தன் குழந்தையைத் தேடிக் கண்டு பிடிப்பதிலேயே ஈடுபட்டான். அதன் காரணமாக புகார் நகரிலே, வழக்கமாக ஆண்டு தோறும் அக்காலத்தே நிகழ வேண்டிய விழாக்

கோளினையும் அவன் மறந்துவிட்டான். வானவர் கோமானாகிய இந்திரனிட்ட சாபத்தின் காரணமாகப் புகார் நகரை கடல் கொண்டது. ஆகவே நின் தாய்மாரான மாதவியும் சுதமதியும் நின்பொருட்டாகவே இங்குவந்தோம என்று அறவணர் சொன்னார்.

''தன் விழாத் தவிர்தலின்
வானவர் தலைவன்
—அவனிடு சாபத்து
நகர் கடல் கொள்ள,
நின்தாயரும் யானும்
பகருநின் பொருட்டால்,
இப்பதிப் படர்ந்தனம்''

இதைத் ''தவத் திறம்பூண்டு தருமங் கேட்டகாதை''யில் காணலாம். தாய்மார்கட்கு மகளின் பேரில் உள்ள அன்பைக் காணலாம்.

(x) பாட்டனும்-பேத்தியும்: இதே சந்தர்ப்பத்தில் மணிமேகலையின் உறவினர் மேலுள்ள அன்பை வெளியிடும் இன்னொரு சம்பவமும் உண்டு. வஞ்சியில் தன் பாட்டனும் கோவலனின் தந்தையுமான மாசாத்துவானை மணிமேகலை சந்திக்கிறாள். அந்த சந்திப்பும் உணர்ச்சிப் பெருக்குள்ள தாகவே யிருக்கிறது.

புத்த பள்ளிக்குச் சென்றாள். அங்கு மாசாத்துவானைக் கண்டாள். கண்டவுடன் நீர்வீழ்ச்சியைப்போல் மடமடவென நடந்த விஷயங்களையெல்லாம் கொட்டினாள்.

''........................................
———இறைவளை நல்லாள்
கோவலன் தாதை,
மாதவம் புரிந்தோன்
பாதம் பணிந்து,
தன் பாத்திர தானமும்
தானப் பயத்தாற்,

சாவக மன்னன்
ஊனமொன் றின்றி,
உலகாள் செல்வமும்
செல்வர் கொணர்ந்தத்
தீவகப் பீடிகை
ஒல்காது காட்டப்,
பிறப்பினை உணர்ந்தது
உணர்ந்தோன் முன்னர்,
உயர்தெய்வந் தோன்றி
மனங்கவல் கெடுத்ததும்;
மாநகர் கடல் கொள
அறவண அடிகளும்
தாயரும் ஆங்குவிட்டு
இறவாது இப்பதி
புகுந்தது கேட்டதும்
சாவக மன்னன்
தன்னாடு எய்த
தீவகம் விட்டுஇத்
திருநகர் புகுந்ததும்
புக்கபின், அந்தப்
பொய்யுரு வுடனே
தக்க சமயிகள்
தந்திறம் கேட்டதும்;
அவ்வமர் சமயத்தறி
பொருளெல்லாம்
செல்வி தன்மையிற்
சிந்தைவையாததும்
நாதன் நல்லறம்
கேட்டலை விரும்பி
மாவன் தேர்ந்து
வந்த வண்ணமும்
சொல்லினள் ஆதலின்''.

தன் பேத்தியானவள் இவ்வண்ணம் சொல்ல மாசாத்துவான் உணர்ச்சிப் பெருக்கால் அவளைத் தூயோய் என்கிறான். என் நல்வினைப் பயனே நான் உன்னைக் கண்டது என்பான்.

''தூயோய்; நின்னை யென் நல்வினைப் பயன்கொல் நான் கண்டது'' எனப் பின்னர், தான் எப்படி வஞ்சிக்கு வந்தேன் என்பதை விரிவாகச் சொல்வான். இதைச் ''கச்சிமாநகர் புக்க காதை''யில் காணலாம். நான்மேலே குறிப்பிட்டுள்ள பத்து சம்பவங்களுள் மனித அன்பை விளக்குபவையாகும்.

# 22

## சாத்தனாரின் சாதனைகள்

I

''மணிமேகலை'' ஆசிரியரான சாத்தனாரைப் பற்றியும் அவர் காலத்தைப் பற்றியும் அறிஞர் பலவாறாகக் கூறித் தமக்குள் வேறுபடுவர். எனினும் அவர் வணிகமரபினர் என்பதையும் பவுத்தநெறியினர் என்பதையும் அனைவரும் ஏற்றுக் கொள்வர். மேலும் தலைசிறந்த ஓர் தமிழ்ச் செல்வத்தை வழங்கிய அவரின் புகழ் நின்று நிலவும். 'மணிகேலை'யை அச்சிற் பதித்து வெளியிட்டவர்களான திருமயிலை சண்முகம் பிள்ளை, டாக்டர் உ.வே. சாமி நாதய்யர், நாவலர் பண்டித ந.மு. வேங்கடசாமி நாட்டார், ஔவை சு. துரைசாமிப் பிள்ளை, நாராயண அய்யங்கார் அவர்களின் விளக்கம் நமக்கு உதவியாக அமைந்துள்ளது. கடைசி நான்கு அத்தியாயங்களையும் நான் சற்று ஊன்றிப் படித்தேன். சமயக் கணக்கர் தம் திறம் கேட்ட காதை, கச்சி மாநகர் புக்க காதை, தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை, பவத்திறம் அறுகென பாவை நோற்ற காதை.

சாதனைகளை நான் 12 தலைப்பில் வகுத்துள்ளேன்.

1. பரத்தையர் அமைப்பை வெறுத்தார், சாடினார்.

2. மணிமேகலை தவிர மற்றப் பெண்களையும் பெருமைப்படுத்தி, அவர்களின் மூலம் சிறந்த கருத்துக்களை வெளியிடுவார்.

3 அன்று நிலவிய சமயங்களைப் பற்றிய புள்ளி விளக்கம்

4. பவுத்தத்தின் சிறப்பு—தத்துவ விளக்கம்.

5. சிறைக் கோட்டம் அறக்கோட்டம் ஆக்கியது.

6. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்.

7. ஆபுத்திரன் திறம்-சாதி அமைப்பை சாடியது முதலியனவாம்.

8. திருக்குறள், ராமாயணம், மகாபாரத மேற்கோள்.

II

## பரத்தையர் அமைப்பு

பரத்தையர்களின் குலத்து நியதியை நூற்றுக்கு நூறு தொழிலில் ஈடுபட்ட சித்ராபதி கூறுவாள்.

'நாடவர் காண, நல்லரங்கு ஏறி
ஆடலும் பாடலும் அழகும் காட்டி
சுருப்புநாண் கருப்புவில் அரும்புகணை தூவ
செருங்கயல் நெடுங்கண் சுருக்கு வலைப்படுத்துக்
கண்டோர் நெஞ்சம் கொண்ட கம்புக்குப்
பண்டோர் மொழியிற் பயன் பலவாங்கி
வண்டின் துறக்கும் கொண்டி மகளிர்'

மேடையில் ஏறி அழகுகாட்டி ஆடவரைக் கவர்ந்து, அவர்கள் பொருள்களைப் பெற்று, அஃது இழந்தபோது வண்டினைப் போல் அவரை விட்டு நீங்கி வேறிடத்தில் தொடர்பு கொள்ளும் பரத்தையராகிய ஆடன் மகளிர், குலமகளிர் அல்லர். மேலும் கூறுவாள்:

'பத்தினிப் பெண்டிர் அல்லோம், பலர்தம்
கைத்தூண் வாழ்க்கை கடவிய மன்றே'

சித்ராபதி சென்றவிடமெலாம் அவமானப்பட்டு திரும்பு தலைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

சித்ராபதியின் மகளாகப் பிறந்த மாதவி ஆரம்பத்தில் ஆடல் பாடல்களில் ஈடுபட்டாலும் தன் கணவன் இறந்த பின்பு கைம்மை நோன்பு மேற்கொண்டு மாதவர் உறை விடம் புகுந்து அறவண அடிகளின் அறவுரை கேட்டுப் பவுத்த மடத்தில் சேர்ந்தாள். எனவே இந்திர விழாவின் கேளிக்கைகளில் அவள் பங்கு கொள்ளவில்லை.

மாதவியின் மகளாகிய மணிமேலை நிலை இதைவிட உயர்ந்தது. தன் மகளை வயந்தமாலைக்கு அறிமுகப்படுத்தும் போது, சாத்தனார் நமக்குச் சொல்லும் முறையே தனித் தன்மை வாய்ந்தது.

> 'காவலன் பேரூர் கனையெரி யூட்டிய
> மாபெரும் பத்தினி—மகள் மணிமேகலை
> அருந்தவப் படுத்தல் அல்லது யாவதும்
> திருந்தாச் செய்கைத் தீத்தொழில்படா அள்.'

மணிமேகலை யார் மகள் தெரியுமா? கண்ணகியின் மகள். எனவே பரத்தையர் தொழிலுக்கு அப்பாற்பட்டவள். மணிமேகலையே உதயகுமாரனிடம் சொல்வாள்:

> 'பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டிருத்தலும்
> இறத்தலும் உடையது; இடும்பைக் கொள்கலம்
> மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
> மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்'

உடலின் தன்மையை அறிந்தேன். எனவே வெறுத்து அருள் அறத்தினை விரும்பிச் செல்கிறேன்.

இதை நோக்கின் பரத்தை முறையே ஒழிக என்று சாத்தனார் சொல்கிறார் எனலாம்.

III

## பெண்ணின் பெருமை

இக்காப்பியத்தின் பெயரே 'மணிமேகலை'; எனவே மணிமேகலையின் சிறப்புகள் பல இடங்களில் சொல்லப் பட்டுள்ளன. நான் இங்கு குறிப்பிட விரும்புவது, இதர பெண் பாத்திரங்களைப் பற்றியதாகும். தன்னைத் தாழ்த்திக் கொண்டு **மாதவி** சொல்வாள்.

> ''காதல னுற்ற கடுந்துயர் கேட்டு
> போதல் செய்யா உயிரொடு நின்றே
> ...நாணுத்துறந்தேன்''

கணவன் இறந்தான் என்று அறிந்தவுடனே உயிர்பிரியும் உத்தம பெண்டிற்கு; நான் வெட்கம் கெட்டவள். புத்த தர்மத்தின் அடிப்படையைச் சொல்வாள்.

> ''பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
> பிறவார் உறுவது பெரும் பேரின்பம்
> பற்றின் வருவது முன்னது; பின்னது
> அற்றோர் உறுவது''

## சுதமதி

மணிமேகலையின் இணைபிரியாத்தோழி. உதயகுமரன் மணிமேகலையைப் பின் தொடரும் போது சொல்வாள். இளமை நாணி முதுமை எய்தி நீதிவழங்கிய கரிகால்சோழன் மரபில் வந்த உங்களுக்குப் பெண்ணாகிய நான் அரசியல் வழக்கு சொல்ல வேண்டுமோ? எனினும் நான் சொல்வேன். மக்கள் யாக்கை

> ''வினையின் வந்தது—வினைக்கு விளைவாயது
> பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்''

இதையறிந்து நடப்பாய். மேலும் புத்தரை ''தனக்கென வாழா பிறற்குரியாளன்'' என வர்ணிக்கிறார், இதை திரு. வி. க. போற்றியுள்ளார்.

## ஆதிரை நல்லாள்

அமுதசுரபியில் அன்னம் பெருகப் பத்தினிப்பெண் ஒருத்தி முதல் பிச்சை இடவேண்டும். அவளே ஆதிரை நல்லாள். மணிமேகலை ஆதிரையின் மனையகம் புகுந்து புனையா ஓவியமாக நிற்றலும் ஆதிரை தொழுது பிச்சையிட்டு, ''பாரகம் அடங்கலும் பசிப்பிணி அறுக'' என்று ஆசீர்வதித்தாள். எவ்வளவு அருமையான கருத்து.

## விசாகை

விசாகை தன் அத்தை மகனான தருமதத்தனைக் காதலித்தாள். ஊரார் பல மாதிரிப் பேசினார்கள். அவள் தருமதத்தனுக்கு விடுத்த வேண்டுகோளைப் பார்ப்போம்.

> "இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
> வளவியவான் பெரு செல்வமும் நில்லா
> புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
> மிக்க அறமே விழுத்துணையாவது".

அதை அவன் சிரமேற் கொண்டு மதுரையில் வர்த்தகத்தில் பணம் சேர்த்து தானம் செய்தான்.

## இராசமாதேவி

தன் மகன் கொலை செய்யப்பட்டதால் வஞ்சம் தீர்க்க மணிமேகலையைச் சிறையிட்டுக் கொடுமைப்படுத்தினாள். பின் தன் தவறை உணர்ந்து மாறுபட்ட மனத்தினள் ஆகி.

> ''ஆங்கு அவள் தொழுதாள்''

மணிமேகலையை விழுந்து வணங்கினாள்.

## கண்ணகி

கண்ணகி படிவத்தின் முன் மணிமேகலை தோன்றியதாகவும் கண்ணகி பேசியதாகவும் ஓர் கற்பனை ஆசிரியருக்கு. சமயக்கணக்கர்களைச் சந்தித்துச் சமய

உண்மைகளைத் தெரிந்துகொள். ஆனால் நீயோ பெண். இளையவள். உனக்குச் சொல்லமாட்டார்கள், எனவே ஆண் வேடம் பூண்டு செல் என்கிறார்கள். உண்மை நிலையை எடுத்துக்காட்டும் ஓர் காட்சி.

"இளையள் வளையோள் என்று எனக்கு யாவரும்
வினைபொருள் உரையார்; வேற்றுருக்கொள்க"

பின் தவ முனிவனின் வடிவத்தை உடையவளாயினாள்.

இவ்வாறு பல சம்பவங்களை எடுத்துக்காட்ட முடியும்.

## IV

## அக்காலத்துச் சமயங்கள்

சாத்தனார் 27வது அத்தியாயத்தில் அக்காலத்தில் நிலவிய சமயங்களைப்பற்றி வெகு ஆழமாகப் பரிசீலித்துக் குறிப்பிடுகிறார். இதை மணிமேகலையின் சிறப்பு அம்சம் என்றே நான் கூறுவேன். எடுத்துக் கொண்ட முறை, மணிமேகலை ஒவ்வொரு சமயவாதியையும் சந்தித்து அவர்களுடைய தத்துவத்தைக் கேட்டு அறிந்து கொள்கிறாள்.

| | | |
|---|---|---|
| (உ.ம்) | 1. அளவைவாதி | 6. ஆசீவகவாதி |
| | 2. சைவவாதி | 7. நிகண்டவாதி |
| | 3. பிரமவாதி | 8. சாங்கியவாதி |
| | 4. வைணவவாதி | 9. வைசேடிகவாதி |
| | 5. வேதவாதி | 0. பூதவாதி |

லோகாயதம் பொருள் முதல்வாதக் கருத்துக்களைக் கொண்டது. அளவையின் பகுதியான காட்சி அளவை, பிரகஸ்பதியின் லோகாயதத்துக்கு அடிப்படை. இம்மாதிரி பொருள் முதல் கருத்துக்களை கொண்டவை. ஆசீவகம், சாங்கியம், வைசேடிகம், பூதவாதமாம். பூதவாதியின் ஓர் உதாரணத்தை இங்கு குறிப்பிடலாமென நினைக்கிறேன்.

'காதகிப்பூவும் கட்டியும் இட்டு
மாற்றுங்கூட்ட மதுக்களி பிறந்தாங்கு

உற்றிடுபூதத்து உணர்வு தோன்றிடும்
அவ்வுணர்வு அவ்வப்பூதத்து அழிவுகளின்
வெவ்வேறு பிரியும் பறையோசையிற்கெடும்'

அத்திப்பூவும் கருப்புக் கட்டியும் இட்டு, வேறு பல பொருட்களையும் கூட்ட, மதுவாகிய களிப்புத்தரும் ஒன்று பிறந்ததனைப்போல, பொருந்துகின்ற பூதங்களிடத்திலே அவற்றின் கூட்டத்தால் உணர்வு பிறக்கும். அங்ஙனம் தோன்றிய உணர்வு அவ்வப்பூதங்களின் கூட்டம் கலைந்து அழிந்து போகுமிடத்து வெவ்வேறாகப் பிரிந்துபோய்விடும். பறையிடத்து எழுந்த ஓசையானது சென்று சென்று தேய்ந்து இறுதியிற்கெடுமாறு போலவே அவையும் தத்தம் மூலப்பொருளினோடும் கலந்து இறுதியில் ஒன்றிவிடும்.

சோவியத் யூனியனிலுள்ள இந்திய தத்துவங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்துள்ள அனிகேவ் எழுதிய புத்தகம் கவனிக்கதக்கது. **'Materlalist traditions in India philosophy'** அதாவது இந்தியத் தத்துவத்தின் பொருள் முதல்வாத பாரம்பரியம்.

# 23

சாத்தனாரின் சாதனைகளை 12 தலைப்பில் வகுத்துள்ளேன்.

1. பரத்தையர் அமைப்பை வெறுத்தார்—சாடினார்.
2. மணிமேகலை தவிர மற்ற பெண்களையும் பெருமைப்படுத்தி அவர்களின் மூலம் சிறந்த கருத்துக்களை வெளியிடுவார்.
3. அன்று நிலவிய சமயங்களைப் பற்றிய விளக்கம்.
4. பவுத்தத்தின் சிறப்பு—தத்துவ விளக்கம்.
5. சிறைக்கோட்டம் அறக்கோட்டம் ஆக்கியது.
6. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர்.
7. ஆபுத்திரன்—நிறம், சாதி அமைப்பை சாடியது.
8. திருக்குறள், ராமாயணம், மகாபாரத மேற்கோள்கள்.

முன்பு முதல் 3 தலைப்பைப் பற்றி விவாதித்துள்ளோம். இனி, தொடர்வோம்.

## பவுத்தத்தின் சிறப்பு — தத்துவ விளக்கம்

அ) 'தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை'யிலும் 'பவத்திறம் அறுகெனப் பாவை நோற்ற காதை'யிலும் பவுத்தம்பற்றிய விளக்கத்தை ஆசிரியர் தமக்குரிய பாணியில்

விளக்குகின்றார். முந்திய அத்தியாயங்களில் பல இடங்களில் பவுத்தத்தின் மாறுபட்ட தன்மையைச் சுட்டிக் காட்டுகிறார். (உ-ம்)—வினையின் வந்தது வினைக்கு வினைவாயது மக்கள் யாக்கை—இளமையும் நில்லா யாக்கையும் நில்லா போன்றவை இந்த இரு அத்தியாயங்களிலும் polimics பார்க்கலாம். 'தவத்திறம் பூண்டு தருமம் கேட்ட காதை'யில் அன்று நிலவிய சமயங்களைப் பற்றி மணிமேகலை சமயக் கணக்கர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறாள். அவை கட்கு மாறாகப் பவுத்தம் தருமநெறி என விளக்கப்படுகிறது. விளக்குபவர் அறவண அடிகள்.

ஆ) 29-வது அத்தியாயமான 'தருமம் கேட்ட காதை' யில் அறவண அடிகள் அணுகும் முறையே தனித்தன்மை வாய்ந்தது. மணிமேகலைக்கு மணிமேகலை என்ற பெயர் வரக் காரணம் என்ன என்று தொடங்குகிறார். கோவலனுக்கு உதவி புரிந்த மணிமேகலா தெய்வத்தின் ஞாபகமாகவே அப்பெயரை தன் மகளுக்கு சூட்டினார். மேலும்" நீ பிற மதங்களைப் பற்றி இப்போது அறிந்துள்ளாய். அவை பொய்மை என்று நிராகரிக்கின்றார்." இந்தஅத்தியாயத்தைப் பற்றி கோபமாக யோகி சுத்தானந்த பாரதியார் கீழ்க்கண்ட வாறு எழுதுகிறார். "ஆன்மா இல்லை; கடவுளும் இல்லை. உலகம் துன்பக்கனவு. அவாவே துன்பத்துக்கு அடிப்படை. அவாவை அறுத்தால் வீடுபேறாகும் என்பதே புத்தமதத்தின் மூலக் கொள்கையாகும். இதைத தருக்க முறையாக கடுமையான பரிபாஷைகளுடன் சொல்லடுக்கிச் சொல்கிறார் சாத்தனார். காட்சி, கருத்து ஆகிய இரண்டு அளவைகளைக் கொண்டு தன் மதத்தை நாட்டுகிறார். பிற மதங்களைக் கண்டிக்கிறார். 29-ஆம் காதை முழுதும் பக்ஷம (மலையில்தீ) ஏது (புகைகிறது) திட்டாந்தம் (எரியும் அடுப்பு) உமநயம் (மலையுடைத்து) நிகமனம் (புகை நடுவில் தீ இருக்கும்), சத்தம் அநித்தியம், முயலுக்கு கொம்பில்லை, நரிவாலில் நாய் வாலைக் காண முடியாது. முதலான சொற்களால் ஆன தருக்க குழப்பமாகும்; அதில் அமுத சுவையில்லை. வரட்டு தருக்கவாத நூலில் எழுதப் படவேண்டிய பகுதி இது.

பிரத்தியக்ஷ அனுமானாதிகளால் க்ஷணபங்க வாதத்தையும் ஆன்மா இல்லையென்றும், இறைவன் தேவையில்லை என்றும் கூச்சலிடும் தருக்க சந்தையில் அமுதத்திற்கு வேலை யில்லை. ஆதலால் நேராக 30-ம் காதைக்கு செல்வோம்'' இப்படி கோபத்தில் எழுதியுள்ளார். முன்னதை நிராகரித்து பின்னால் காரண காரியங்களுடன் விளக்கும் சாத்தனாரின் பாலிமிக்ஸ் பார்க்கத் தவறுகிறார்.

## இ) புத்த தர்மம்

i) புத்தமதத்தின் அடிப்படைக் கொள்கையில் முதன்மையானது நால்வகை வாய்மை.

> பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
> பிறவார் உறுவது பெரும்பேர் இன்பம்
> பற்றின் வருவது முன்னது; பின்னது
> அற்றோர் உறுவது அறிக' (11/64-67)

இவ்வுலகில் பிறந்தவர்கள் மிகுந்த துக்கத்தைத்தான அடைவார்கள். பிறக்காதவர்கள் பெரிய இன்பத்தை அடைவார்கள் ஆசை காரணமாகப் பிறப்பு உண்டாகும். ஆசையற்றவர்கள் பிறப்பெய்த மாட்டார்கள். இவற்றைத் தான் 4 வகை வாய்மை என்பர்.

ii) அதேபோல் ஐவகைச் சீலம் முதன்மையானதே.

> ''கள்ளும், பொய்யும், காமமும், கொலையும்
> உள்ளக்களவும் என்று உரவோர் துறந்தவை''
> (24/77-78)

கள்ளுண்டல், பொய்யுரைத்தல், காமம் கொள்ளுதல்; கொலை செய்தல், உள்ளத்தால் களவாட எண்ணுதல் என்று கூறப்பட்ட ஐந்தையும் அறிவுள்ளோர் கைவிட்டனர். இதைத்தான் ஐவகைச் சீலம் என்பது.

ஆடவரன்றி மகளிரும் துறவுபூண்டு நல் ஒழுக்கத்தை மேற் கொள்ளுதற்கும் வீடடைவதற்கும் உரியர் என்பது புத்தக் கொள்கை.

"அமுத சுரபியை அங்கையில் ஏந்தி
பரிவுடன் மக்கள் பசிப் பிணித் தீர்த்துக்
கருணைவடிவாம் கன்னித்துறவி மணிமேகலை"

ஈ) 12 நிதானங்கள்

இவை பற்றி கடைசி அத்தியாயத்தில் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை யாவன:

1. பேதமை—அவித்தை—Ignorencce
2. செய்கை—ஸம்ஸ்காரங்கள்—Thought, ideatin
3. உணர்ச்சி—விஞ்ஞானம்—Cognition
4. அருவுரு—நாம ரூபங்கள்—Name & forms
5. வாயில்—ஷடாயதனங்கள்—Six organs of sence
6. ஊறு—ஸ்பரிசம்—Contact
7. நுகர்ச்சி—வேதனை—Feelings of emotion
8. வேட்கை—திருஷ்ணை—Craving
9. பற்று—உபாதானம்—Attachment
10. கருமத் தொகுதி—பவம்—Accumlatated karma
11. தோற்றம்—பிறப்பு—Birth
12. வினைப்பயன்—மரணம்—Old age, death etc

இந்த 12 தத்துவங்களும் பிறப்பாகிய துன்பத்தையும் அதன் காரணத்தையும் விளக்குவதற்கு காரண காரிய முறைமையால் ஒன்றையொன்று சார்ந்துதோன்றுவனவாகிய 12 நிதானங்கள். இப்பன்னிரெண்டில் உணர்வு, அருவுரு, வாயில், ஊறு, நுகர்வு, பிறப்பு என்பனவும் பிணி, மூப்பு, சாக்காடு, அவலம், அரற்று, கவலை, கையாறு என்னும் வினைப் பயனுமாகிய ஏழும் தோற்றமெனப்படும் துன்பமும் பேதமை செய்கை வேட்கை பற்றுபவம் என்னும் ஐந்தும் அதன் காரணமாகும்.

துன்ப நீக்கத்திற்குரிய நெறி அஷ்டாங்க மார்க்கமாகும் அவையாவன் :

1. நற்சாட்சி—Right view
2. நல்லூற்றம்—Right aspiration
3. நல்வாய்மை—Right speech
4. நற்செய்கை—Right activity
5. நல்வாழ்க்கை—Right living
6. நல்லூக்கம்—Right effort
7. நற்கடைப்பிடி—Right mindfulness
8. நல்லமைதி—Right contemplation

பிறவித்துன்பத்தினின்றும் நீங்குவதற்கு இவற்றை யடைந்து கடைப்பிடித்தலோடு தானமும் சீலமும் உடையராதல் வேண்டும்.

## தீவினை, நல்வினை

தீவினை என்பது 10

'தீவினை என்பது யாதென வினவின்
ஆய் தொடி நல்லாய்! ஆங்கது கேளாய்!
கொலையே களவே காமத்தீ விழைவு
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுள பொல்லாக் காட்சி யென்று
உள்ளந் தன்னில் உருப்பன் மூன்று மெனப்
பத்து வகையால்—— (29|123-140)

10 வகை. தீவினை 3 வகைப்படும்.

1. உள்ளத்தில் தோன்றுவது— வெஃகல், வெகுளல், பொல்லாக் காட்சி.

2. வாக்கில் தோன்றுவது— பொய், கோட்சொல்லல், கடுஞ்சொல், பயனில சொல்.

3. உடம்பில் தோன்றுவது— கொலை, களவு, காமம். இத்தீவினைகளை நீக்கி சீலம் தாங்கி தானம் தலை நின்று நல்வினைப் பயனால் மகிழ்வார். இது நல்வினை.

## மணிமேகலை பவுத்தம் பற்றிய இறுதி குறிப்பு

மணிமேகலையை நமக்கு அச்சிட்டு தந்த டாக்டர் உ. வே. சாமிநாத அய்யர் முயன்று விளக்கம் பெறாது விட்டுவிட்டனர். அவருக்குப் பின் பலர் முயன்று ஆராய்ந்துள்ளனர். டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் இவை தின்னகார் காலத்துக்கு முற்பட்டனவாதல் வேண்டும் என்கிறார். ஆனால் குப்புசாமி சாஸ்திரி அவர்களும், ஜெர்மனியிலுள்ள பான் பல்கலைக்கழக பேராசிரியர் ஹெர்மன்சாக்கோபியும் இந்நூல் முடிவுகள் வடமொழியிலுள்ள **நியாயப்பிரவேசம்** என்ற நூல் முடிவை அடிப்படையாகக் கொண்டன என்றும் ஆகவே இந்நூல் தின்னகார் காலத்துக்கு பின் என்பார். தின்னகார் கி. பி. 4-ம் நூற்றாண்டில் இருந்தவர். நியாயப்பிரவேசத்தை இயற்றிய சங்கர சுவாமியும் 4-ம் நூற்றாண்டினர். இதே கருத்துத் தான் கல்லூரி வடமொழி விரிவுரையாளர் ஐயாசாமி சாஸ்திரியுடையது என ஔவை துரைசாமி சொல்கிறார்.

# 24

## மணிமேகலையில் மனிதநேயம்

மனித நேயம் என்றால் மனிதாபிமானம் எனக் கொள்ளலாம். மனிதன் மனிதனை நேசிப்பது, விரும்புவது, அன்பு, கருணை காண்பிப்பது. மனிதனை மனிதனாக நடத்துவது. மதம், ஜாதி, நிறவேற்றுமையால் வெறுப்புணர்வு காட்டாதிருத்தல். மனிதனாக இரு, பிறரை மனிதனாக நடத்து என்பது நமக்குப் புதிதல்ல சிலர் இதை மனிதத் தன்மை என்று கூடக் கூறுவர்.

"மணிமேகலையில் எங்கும் அன்பு எங்கும் அறம்" என்று திரு. வி. க. சொல்வார். இனி மணிமேகலையில் உள் புகுந்து சற்றுப் பார்ப்போம்,

மணிமேகலையின் மையக் கருத்தே "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே". மனித நேயத்துக்கு உதாரணமாக மணிமேகலையில் பல சம்பவங்களைக் குறிப்பிடமுடியும்.

1. **சுதமதி:** இவள் மணிமேகலையின் தோழி. சண்பை நகரத்தில் கௌசிகன் என்ற இருபிறப்பாளனுக்கு ஒரே மகளாகப் பிறந்தவர். தனியாக மலர் வனத்தில் பூ கொய்து கொண்டிருந்தபோது மாருதவேகன் என்ற விஞ்சயன் அவளை தன்வயப்படுத்திக் கொண்டான். பின் புகார் நகரில்

விட்டுச் சென்றான். அவள் தந்தை சுதமதியைக் கண்டார். இரந்துண்டு வாழ்ந்தான பசுஒன்று அவனைப் பாய்ந்து விட்டது. சமணர்கள் புறக்கணித்தனர். சங்க தருமன் அன்பான மொழிகளைச் சொல்லி புத்த முனிவர்கள் தங்கியுள்ள இடத்தை காண்பித்தார். இருவரும் அங்கிருந்த போது தகப்பனார் காலமானார். சங்கதர்மனின் அன்பு அளவிட முடியாதது. புத்தமடம் அன்பை உறைவிடமாக கொண்டிருந்தது. புத்தரை சுதமதி "தனக்கென வாழா பிறர்க்குரியாளன்" என வர்ணிக்கிறான். நம் தலைப்புக்கு இது மிக மிகப் பொருத்தமாகும்.

2. **இந்திரவிழா:** விழாவை முரசறைந்து தெரிவித்த வள்ளுவன் கீழ்க்கண்டவாறு சொல்வான்:

> "பற்றாமாக்கள் தம்முடன் ஆயினும்
> செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்!"

அதாவது பற்றுதலற்ற மாக்களாகிய பகை மக்களோடானாலும் பகைமையும் பூசலும் கொள்ளாது அவரை விட்டு அகன்று போவாராக.

> "பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்க" என்பான்.

பசியும் பிணியும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் சுரப்பதாக என வாழ்த்தினான்.

3. **ஆபுத்திரன் பிறப்பு** : வாரணாசியிலுள்ள வேதம் ஓதுபவனாகிய அபஞ்சிகன் மனைவியான சாலி என்பாள் கணவனுக்கு செய்த பாவத்தைப் போக்குவதற்காக தென் திசையிலுள்ள குமரியில் நீராடவந்து கொண்டிருந்தாள். சூல் முதிர்ச்சியடைந்த பருவத்தே ஊர் துஞ்சும் இருள் மிகுந்த இரவுப் பொழுதிலே ஒரு குழந்தையை ஈன்றாள். தோட்டத்திலே குழந்தையை இட்டுச் சென்றாள். 7 நாள் ஒரு பசு பால் ஊட்டியதாக கதை சொல்லுகிறது. வயனங் கோடு என்ற ஊரைச் சேர்ந்த மறையோன் இளம்பூதி

என்பான் தன்மனைவியுடன் வந்து கொண்டிருந்தான். ஏனோ தானோ என்று விட்டுப் போகாமல்

குழவி ஏங்கிய குரல் கேட்டு
கழுமிய துன்பமொடு கண்ணீர் உகுத்தாங்கு
ஆமகன் அல்லன் என் மகன் என்றே
காதலி தன்னோடு கைதொழுது எடுத்து''

அனாதையாகக் கிடந்த குழந்தையை தன் மகன் என்று எடுத்து வளர்த்த மனிதாபிமான சம்பவம் இது.

**4.** பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை. எல்லா மக்களிடம் அன்பு செலுத்தலும்; ஆபுத்திரன் வேள்விக்கு வைத்திருந்த பசுவைக் கடத்தினான். கோபமுற்ற அந்தணர்கள் அவனை ஆமகன் எனக் கேவலமாகப் பேசினார்கள். ஆபுத்திரன் முனிவர்களின் பிறப்பைப் பற்றி பட்டியல் போட்டுக் காண்பித்து ஆமகன் என்பதால் கேவலம் இல்லை என சுட்டிக் காட்டினான்.

''ஆமகன் அசலன்; மான்மகன் சிருங்கி
புலிமகன் விரிஞ்சிப்புரையோர் போற்றும்
நரிமகன் அல்லனோ கேசகம்பளன்''

இவ்வாறு உங்கள் குலத்து ரிஷி கணங்களெல்லாம் சிறப்புடையோர், அதனால் நான் மலிவு மக்களாகிய உங்களுடைய நூல்களிலே பசுவினோடு வந்த இழி குலம் என்பதும் என்று உளதோ?

'பிறப்பொக்கும் எல்லா உயிர்களும்' என்பது வள்ளுவன் கருத்து. எனவே பிறப்பை காரணமாகக் காட்டி அன்பு காட்டாதது சரியல்ல. ஜாதியவாதம், மதவாதம், இனவாதம், நிறவாதம் சரியல்ல எல்லோரிடமும் அன்பும் பரிவும் காட்ட வேண்டும். இது மணிமேகலை காட்டும் வழி.

**5. ஆபுத்திரனின் இரக்க சிந்தை:** மதுரையில் சிந்தா தேவி கோயிலில் தங்கி பிச்சைப் பாத்திரம் ஏந்தி வீடுகளில் கிடைத்த பிச்சையாகிய உணவினை,

"காணார், கேளார், கால்முடப்பட்டோர், பேணுநர் இல்லோர், பிணி நடுக்குற்றோர்! யாவரும் வருக" என்று கூவி அவர்கள் சாப்பிட்ட மீதியை தான் சாப்பிட்டான் ஆபுத்திரன். இவ்வாறு ஆற்றா மாக்களின் அரும்பசி களைந்தான். பின்னர் சிந்தாதேவியின் அருளால் அமுதசுரபி கிடைத்தது. அதன்மூலம் மக்கள், மாக்கள், மரஞ்சேர் பறவைகட்கு உணவளித்தான். எனவே, அவனைச் சுற்றி ஆரவாரம் ஒலித்தது. "இழுமென சும்மை இடையின் ஒலிப்ப" இந்திரன் வந்தான் அவனிடம்,

> "வருந்தி வந்தோர் அரும்பசி களைந்து அவர்
> திருந்து முகம் காட்டுமென் தெய்வகடிகை"

**6. அக்ஷய பாத்திரத்துடன் மணிமேலை:**

மணிமேகலைக்கு அமுதசுரபி கிடைத்தது. பிக்குணி கோலம்கொண்டு புகாரின் பெருந்தெருவினை அடைந்தாள். பத்தினிப்பெண் ஆதிரை நல்லாளின் பிச்சையினை முதற்கண் ஏற்று அதனால் அமுதசுரபி நிரம்ப, காயசண்டிகையின் யானைத்தீ பசி, தீர்த்தாள். விருச்சிகன்என்ற புரிநூல் மார்பின், திரிபுரிவார்சடை மரவுரி உடையன் சேமித்து வைத்த நாவற்கனியை சிதைத்ததால் காயசண்டிகைக்கு 12 வருடம் யானைத்தீ என்ற பசிநோய் வர சாபம் கொடுத்தான். மணிமேகலை கொடுத்த உணவு அந்த பசித்தீ நோயினைப் போக்கியது. பின்னர்.

> 'ஆபுத்திரன்கை அமுதசுரபி இஃது
> யாவரும் வருக ஏற்போர் தாம்—என'

அவர்களும் வந்து உண்ணும் ஒலியானது ஊரம்பலத்திடை எழுவதாயிற்று.

உதயகுமரன் தன் பேரில் காதல் கொண்டிருக்கிறான் என அறிந்து காயசண்டிகை என மாற்றுருவம் கொண்டாள்.

சிறைச்சாலையினுள்ளும் சென்று உணவளிக்க, காவலர் அரசனிடம் அதனை உரைத்தனர். மணிமேகலையை மன்னன் சந்தித்து அவர் கருத்துப்படி சிறைக்கோட்டத்தினை அறக் கோட்டமாக்க ஆணைபிறப்பித்தான், என்னே சிறைக் கைதிகளிடம் காட்டிய அன்பு.

வஞ்சி மாநகர் சென்று, "எல்லா உயிரும் வருக" என்றாள். 18மொழி பேசக்கூடியவர்களில் "காணார், கேளார், கால்முடமானோர், பேணாமாக்கள், பேசார், பிணித்தோர் படிவநோன்பயர், பசிநோயுற்றோர், மடிநல் கூர்ந்த மாக்கள்" யாவரும் வந்தனர். இந்தியநாடே வந்தது எனக் கொள்ளலாம். இவ்வாறு "ஆற்றாமாக்கள் அரும்பசி" களைந்தார்.

7. தாயன்பு:

தாயன்புக்கு 3 உதாரணங்களைக் குறிப்பிடலாம்.

மாதவி தன் மகளை "சான்றோன்" என காண விரும்பினார். ஆகவே "மாபெரும் பத்தினிமகள்" அதாவது கண்ணகியின் மகள் என அறிமுகப்படுத்துகிறார். சுதமதியுடன் சென்ற மணிமேகலை வீட்டுக்குத் திரும்பாததால் அவளுக்குள்ள கவலையை ஆசிரியர் நன்கு எடுத்துக் காட்டுகிறார். "மாதவி மயங்கும்" என்று அரற்றுவாள்.

கண்ணகி: கண்ணகி சிலையைக் கண்டு மணிமேகலை வணங்கி தாயிடம் கேட்டதாக ஒரு கட்டம் கண்ணகியின் அறிவுரை "நீயும் இந்த மூதூர் சுகத்தே அவ்வவர் சமயத்து அணிபொருள் கேட்டு" விபரம் தெரிவாய் எனத் தாயன்புடன் கூறியதாக ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ராஜமாதேவி: அரசன் அறநெறிக்கே முதன்மை தந்து தன் மகன் சாவை மறக்கிறார். ஆனால் அரசியின் நிலை அப்படியல்ல. மகனின் சாவு அவள் உள்ளத்தை வாட்டுகிறது. மணிமேகலையை பழி தீர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுகிறாள். பலமுறையில் சித்ரவதை செய்கிறாள்

மணிமேகலையும் தான் தப்பிச் செல்வதற்கு வாய்ப்பிருந்தும் அரசியை தெளிக்குதும் நல்ல நோக்குடன் அறத்தினை உணர்த்துகிறாள். தெளிவுற்ற ராணி மணிமேகலையை வணங்கி 'தகுதி செய்திட' என மணிமேகலையை சாஸ்டாங்க மாக விழுந்து வணங்குகிறாள். என்ன அருமையான சித்திரம் இது.

## 8. அறம் எனப்படுவது என்ன

மணிமேகலை இப்பிறவியில் அரசனாக வந்த ஆபுத்திரனுக்கு சொல்வாள்.

> "அறம் எனப்படுவது யாது எனக் கேட்பின்
> மறவாது இது கேள்; மன்னுயிர்க்கெல்லாம்
> உண்டியும், உடையும், உறையுளும் அல்லது
> கண்டது இல்"

அரசன் தன் குடிகட்கு உணவு, உடை, வீடு தர வேண்டும் இது உன்னத கடமை. அரசன் பதில் அதற்கு மேல் ' என்னாட்டாயினும் பிறர் நாட்டாயினும் நன்றுதல்; உறைத்த நல்லறம் செய்கேன்'' எல்லோருக்கும் பிற நாட்டவர் உட்பட செய்வேன் என்றான்.

இவ்வாறு மனிதநேயத்துக்கு ஒருவரையொருவர் பிந்தியவர் அல்ல என்பதற்கு நான் சில உதாரணங்களைத் தந்துள்ளேன். இன்னும் பல, காவியம் பூராவும் அன்பையும், அறத்தையும், நேயத்தையும் காணலாம்.

—o—o—

Code No. A 383

# எமது சிறந்த நூல்கள்

**டாக்டர் கே. ஏ. குணசேகரன்**

நாட்டுப்புற மண்ணும் மக்களும்

**ஆ. சிவசுப்ரமணியன்**

மந்திரம் சடங்கு

**எம். வி. சுந்தரம்**

தமிழ் மொழி இனிது! எவ்வாறு?

**கா. சிவத்தம்பி**

தமிழில் இலக்கிய வரலாறு

நாவலும் வாழ்க்கையும்

**எஸ். அகஸ்தியர்**

ஒரு நூற்றாண்டின் இரு தமிழ் நாவல்கள்

**எஸ். தோதாத்ரி**

தமிழ் நாவல்கள் சில ஆய்வுகள்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்,**

சென்னை-600 098.

மேலட்டை அச்சிட்டோர் :

**பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிடெட், சென்னை-600 014.**